Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 26 வெள்ளிக்கிழமை (10.03.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :103

## தமிழீழ அரச காணிச் சட்டம் இன்று அமுலுக்கு வருகிறது

### நீதி நிர்வாகத்துறையின் சட்டவாக்கச் செயலகம் அறிவிப்பு

கிளிநொச்சி,மார்ச்10

தமிழீழ அரச காணிச் சட்டம் இன்று முதல் நடைமுறைக்கு வருகின்றது என நீதி நிர்வாகத்துறையின் சட்டவாக்கச் செயலகம் அறிவித்துள்ளது.

தமிழீழத்தில் உள்ள காணியற்றோருக்கு காணிகள் பகிர்ந்தளிப்பதையும் - பொதுத் தேவைகளுக்கு காணிகள் ஒதுக்கீடு செய்வதையும் -

புலம்பெயர்ந்து வாழ்வோரின் காணிகளை அவர்களிடமும் அவர்களின் உதிர உறவினர்களிடமும் கையளிப்பதையும் உறுதி செய்யவும் -

காணிகளின் விலை மதிப்பீடு, அதன் மீதான நடவடிக்கைகள் ஆகியவற்றை மேற்கொள்ளவும் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் 2ஆம் எண் சட்டமாக இந்தக் காணிச் சட்டம் வெளிவந்துள்ளது.

இந்தச் சட்டத்தில் உள்ள முக்கிய அம்சங்கள்

(15ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச்சுடர்

இன்று :- ஐந்தாம் தர புலமைப்பரிசில் வினாத்தாள், விடைக்குறிப்பு, தமிழ் விடைக் குறிப்பு.

ஜி.சீ.ஈ. (உயர்தர) மாணவர் நலன் கருதி வெளிவரும் வினாத்தாள்கள் திங்கள் முதல் வெளியாகும்.

## இரத்தினபுரிப் பகுதியில் மண்சரிவு; ஒருவர் பலி!

கொழும்பு,மார்ச் 10

இரத்தினபுரி - மகாவலவத்த பிரதேசத்தில் மண்மேடொன்று சரிந்ததால் அதில் புதையுண்ட நபரொருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

தனியார் காணியொன்றில் அறுபது அடி

(16ஆம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பியின் கோரிக்கைக்கு இணங்கமுடியாது

# நோர்வேயின் அனுசரணைப்பணி தொடரும்!

## ஊடகத்துறை அமைச்சர் திட்டவட்டமாக அறிவிப்பு

கொழும்பு,மார்ச்10

**நோர்வேயை சமாதானப் பேச்சின் அனுசரணைப் பணியில் இருந்து நீக்கிவிட வேண்டும் என ஜே.வி.பியினர் விடுத்திருக்கும் கோரிக்கையை அரசு கருத்தில் எடுக்காது.**

**நோர்வே தொடர்பாக யார் என்ன விமர்சனங்களை முன்வைத்தாலும் அவைபற்றி அரசு பெரிதாக அலட்டிக்கொள்ளாது. நோர்வே தொடர்பாக அரசு என்ன நிலைப்பாட்டில் இருக்கிறதோ, அதே நிலைப்பாட்டில்தான் இப்போதும் இருக்கிறது. அதில் எதுவிதமாற்றமும் இல்லை.**

**- இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.**

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று கொழும்பு தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ, நோர்வேயை சமாதானப் பேச்சின் அனுசரணைப் பணியிலிருந்து விலக்க வேண்டும் என நாடாளுமன்றில் கூறிய கூற்றுப்பற்றி ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே பிரிய தர்சன யாப்பா மேற்கண்டவாறு கூறினார்.

செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் (16ஆம் பக்கம் பார்க்க)

## பஸ்ஸில் பயணம்செய்தவர் துப்பாக்கிச் சூட்டில் பலி!

மட்டக்களப்பு,மார்ச் 10

பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த நபர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பில் இருந்து வாழைச்சேனை நோக்கிச் சென்று கொண்டிருந்த போக்குவரத்துச் சபையின் பஸ் ஒன்றுக்குள் நேற்று முற்பகல் 11.15 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இருதயபுரம் பகுதியூடாக பஸ் சென்று கொண்டிருந்த சமயம் பஸ்ஸுக்குள் ஏறிய இனந்தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவரிடம் 3,000 ரூபா பணமும் கையடக்கத் தொலைபேசி ஒன்றும் காணப்பட்டன எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

பஸ்ஸுக்குள் பிரவேசித்த நபர் 9 மில்லி

(16ஆம் பக்கம் பார்க்க)

## சில அமைச்சுகள் பணி குறித்து ஜனாதிபதி பெரும் அதிருப்தி

கொழும்பு,மார்ச் 10

சில அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் அவர்களுக்குக் கீழ் இயங்கும் அதிகாரிகள் தமக்கு வழங்கப்பட்டிருக்கும் பொறுப்புகளை ஒழுங்காகச் செயற்படுத்தத் தவறுவது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கவலையடைந்திருக்கிறார் என ஜனாதிபதி செயலக வட்டாரத் தகவல்களில் இருந்து தெரியவருகிறது. இந்த அமைச்சர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அது அமைச்சரவை மாற்றமாக இருக்குமெனவும் தெரிவிக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் சில பகுதிகளில் மீன் பிடித்தடை இன்று நீக்கம்

### ஜனாதிபதி கடற்படையினருக்குப் பணிப்பு

கொழும்பு,மார்ச் 10

குடாநாட்டில் மீன்பிடிக்கத் தடை விதிக்கப்பட்ட சில இடங்களில் இன்றுமுதல் மீன் பிடிக்க அனுமதி வழங்கப்படவிருக்கின்றது. இதற்கான உத்தரவை ஜனாதிபதி கடற்படைத் தளபதிக்கு நேற்று விடுத்துள்ளார்.

நேற்று மாலை தம்மைச் சந்தித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று மாலை 5 மணிக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி சந்தித்துக் கலந்துரையாடினார்.

குடாநாட்டில் மீன் பிடிக்கத் தடைசெய்யப்பட்டிருந்த பிரதேசங்களில் சில இடங்களில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் சுமுகநிலை உருவாகும்வரை படையினரின் செயற்பாடுகள் தொடரும்

### இப்படிக் கூறுகிறார் இராணுவப் பேச்சாளர்

குடாநாட்டில் சுமுகமான சூழ்நிலை உருவாகும் வரை இராணுவத்தின் பாதுகாப்புச் செயற்பாடுகள் தொடரும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் அமரசிங்க பி.பி.ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார். கடந்த டிசெம்பர் மாதமளவில் குடாநாட்டில் இராணுவத்தினர் மீது பல தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து பாதுகாப்புக் காரணங்களிற்காக

(16ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுப்படை அதிகாரி, இராணுவத் தளபதி நேற்று யாழ்ப்பாணத்துக்கு திடீர் விஜயம்

கூட்டுப் படைகளின் அதிகாரி அட்மிரல் தயா சந்தகிரியும், இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சரத் பொன்சேகாவும் யாழ்.பிரதேச நிலைமைகளை நேரில் கண்டறிவதற்காக நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டனர். இவர்களை பலாலி விமானப் படைத்தளத்தில் வைத்து யாழ். இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சந்திரசிறி வரவேற்றார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## மு.காவின் வேட்பு மனுக்களை ஏற்குமாறு நீதிமன்றம் உத்தரவு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடும் பொருட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (மரச் சின்னம்) தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் வேட்பு மனுக்கள் நிராகரிக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் வீடுகள் அமைப்பது சட்டவிரோதமானது

### படைத்தரப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 10

இராணுவத்தினர் முகாம் அமைத்திருந்த ஆனையிறவுப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி பிரதேசத்தில் மீளக் குடியமரும் மக்களுக்கென ஜி.ரி. இசற் நிறுவனம் வீடுகளை அமைத்துக் கொடுக்கிறது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த வீடுகள் மாவீரர் குடும்பங்களுக்கு வழங்கவே

(16ஆம் பக்கம் பார்க்க)



சென்றல் - சென். ஜோன் அணிகளுக்கிடையிலான நேற்றைய ஆட்டத்தின் போது யாழ். மத்திய கல்லூரி வீரர் துடுப்பெடுத்தாடுவதை முதல் இரு படங்களிலும் ரசிகர்கள் குதூகளிப்பதையும் காவலரணிலிருந்து படைவீரர் ஒருவர் ஆட்டத்தினை ரசிப்பதையும் அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம். (படங்கள்: தமிழினியன்)

### வடக்கில் பெரும்போர்

# முதல்நாள் ஆட்ட முடிவில் சென்ரலுக்கு 219 ஓட்டங்கள்

### சென். ஜோன்ஸ் 10 ஓட்டங்களுடன் களத்தில்

யாழ்ப்பாணம்,மார்ச் 10

வடக்கின்போர் என வர்ணிக்கப்படும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையிலான நூறாவது துடுப்பாட்டப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமான இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் தலைவர் என்.நவஜீதன், யாழ். மத்திய கல்லூரி அணியை முதலில் துடுப்பெடுத்தாடும்படி கேட்டுக் கொண்டார்.

களம் இறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணி மதிய இடைவேளையின் பின் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றது. இடையில் மழைபெய்ததால் ஆட்டம் 15 நிமிடம் இடைநிறுத்தப்பட்டது.

ஏபிரகாம்பிரசாத், பி.தயான், ஜி.மகீபன் ஆகியோர் முறையே 22, 26, 36 ஓட்டங்களையும் டிலான் ஆட்டம் இழக்காமல் 54 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

ரி.நிரூபன் 61 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும் பி.கஜரூபன் 37 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் ஜி.சஞ்ஜீவன் 36 ஓட்டங்களைக் கொடுத்தும் பி.சுகிந்தன் 28 ஓட்டங்களைக் கொடுத்தும் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி விக்கெட் இழப்பின்றி 10 ஓட்டங்கள் பெற்ற நிலையில் முதலாம் நாள் ஆட்ட முடிவிற்கு வந்தது. ரி.கிரிஷாந் 3 ஓட்டங்களுடனும் பி.நேசவர்மன் 5 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். ஆட்டம் இன்று முற்பகல் 10 மணிக்குத் தொடரும்.

காலையில் ஓரளவு ரசிகர்கள் காணப்பட்ட போதும், பிற்பகலில் பெரியளவில் ரசிகர்களைக் காணமுடியவில்லை.

(3-190)

## கவச வாகனம் வீட்டுக்குள் புகுந்தது

கரவெட்டி,மார்ச் 10

நெல்லியடிப் பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்த இராணுவ கவச வாகனம் வீட்டின் மதிலை உடைத்துக்கொண்டு உட்புகுந்ததில் வீட்டின் முன்பக்கப் பகுதி பலத்த சேதமடைந்துள்ளது.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது.

நெல்லியடி-பருத்தித்துறை வீதியால் சென்று கொண்டிருந்த இராணுவத் தொடரணியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த கவச வாகனம் ஒன்றே இவ்வாறு வீட்டிற்குள் புகுந்ததாகக் கூறப்படுகின்றது.

(3-14-70)

## ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு இன்று முதல் 3 தினங்கள் கொடுப்பனவு வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 10

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு ஆழிப்பேரலை மீள் நிர்மாண சர்வதேச கல்வியகம் கொடுப்பனவை இன்று முதல் வழங்கவுள்ளது.

யாழ்ப்பாணம், மருதங்கேணி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் ஆழிப்பேரலையினால் சொத்துக்கள், உயிரிழப்புக்கள் ஏற்பட்ட குடும்பங்களில் தெரிவுசெய்யப் பட்ட ஆசிரியர்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்படவிருக்கின்றது.

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 4.30 மணிவரை யாழ். நகர ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் -

நாளை சனிக்கிழமை மருதங்கேணி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையிலும் -

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவுப் பிரதேச ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரையும் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திலும் - வைத்து வழங்கப்படும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஆழிப்பேரலை மீள் நிர்மாண சர்வதேச கல்வியகத்தின் இணைப்பாளர் பசில் டி சில்வா, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் உட்பட பலர் கலந்துகொள்வர். (3-7)

## யாழ். பல்கலைக்கழக துணைவேந்தராக பேராசிரியர் ரத்னஜீவன் ஹூல் நியமனம்

யாழ்ப்பாணம்,மார்ச்10

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தராக சிரேஷ்ட பேராசிரியர் ரத்னஜீவன் ஹூல் (வயது 53) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது துணைவேந்தராகப் பணியாற்றும் பேராசிரியர் எஸ்.மோகனதாஸின் பதவிக்காலம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவுக்கு வருகின்றது.

புதிய துணைவேந்தரைத் தெரிவு செய்வதற்காக யாழ். பல்கலைக்கழகப் பேரவை கூடி ஆராய்ந்து பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல், பேராசிரியர் கே.கந்தசாமி, பேராசிரியர் ரத்னஜீவன் ஹூல் ஆகியோரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு சிபார்சு செய்திருந்தது.

இவர்களில் ரத்னஜீவன் ஹூல் துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு யாழ். பல்கலைக்கழகத்துக்கு நேற்று அறிவித்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மின் மற்றும் இலத்திரனியல் துறையில் சிரேஷ்ட பேராசிரியராகப் பணியாற்றும் இவர், மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் உள்ளார்.

(எ-3)

### யாழ். பல்கலை துணைவேந்தர் நியமனம்

# தமிழ் மாணவர்களின் விருப்புக்கு மாறாக ஜனாதிபதி செயற்பட்டிருக்கிறார்

### பல்கலை மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 10

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் நியமனத்தில் தமிழ் மாணவர்களின் விருப்பத்துக்கு மாறாக ஜனாதிபதி செயற்பட்டிருக்கின்றார். இந்த நியமனத்தை நிராகரிக்கின்றோம் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

புதிய துணைவேந்தராக ரட்ணஜீவன் ஹூல் நியமிக்கப்பட்டமை தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையிலேயே ஒன்றியம் இப்படித் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் அவர்கள் தமிழ் மாணவர்களின் விருப்பத்துக்கு மாறாகவும் தமிழ் சமூகத்திற்கு மாறாகவும் தமது அரசியல் காய் நகர்த்தலுக்காக ஸ்ரீலங்கா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் தெரிவுசெய்யப்பட்டதாக அறிகின்றோம்.

ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் இம் முடிவானது முற்றிலும் ஒரு அங்கமாக தமிழினத்தின் ஒரே சொத்தான கல்விச் சொத்தை அழிக்கும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவும் எடுத்த முடிவாகவே நாம் கருதுகின்றோம்.

எனவே, ஒரு போதும் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தராக அரசியல் காய்நகர்த்தலினூடாக தெரிவுசெய்யப்பட்ட பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் அவர்களை நாம் அனுமதிக்கமாட்டோம் என்பதைத் தெளிவாகக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

எமது விரும்பத்திற்கு மாறாக அதனை மீறி அவர் துணைவேந்தராக வருவதனூடாக எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தையும் எமது கல்விச் செயற்பாட்டையும் சீர்குலைக்க வேண்டாமென கேட்டுக்கொள்கின்றோம்.

நீண்டகால நோக்கில் தமிழ் மக்களின் கல்விச் சொத்தை அழித்து தமிழ் மக்களின் பண்பாட்டை சீரழித்து, பிரிவுகளை ஏற்படுத்தும் நோக்கிலேயே துணைவேந்தர் தெரிவு இடம்பெற்றுள்ளமையினால் இதனை நாம் நிராகரிக்கின்றோம்.

எனவே, எமது இந்த வேண்டுகோளை உதாசீனம் செய்யவேண்டாமென கேட்டுக் கொள்வதோடு இது தொடர்பாக ஏற்கனவே எம்மால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்திற்கு மாறாக ஜனாதிபதியின் தெரிவு அமைந்திருப்பதானது, அவரது சமாதானத்தின் பற்றுறிதியை கேள்விக்குறியாக்கியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் என்றுள்ளது. (3)

## மகளிர்தின நிகழ்வும் மனையியற் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், மார்ச் 10

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கொக்குவில் வளர்மதி நிறைவாழ்வக மகளிர் அமைப்பினால் கைத்திறன் மனையியற் பொருட்கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக மண்டபத்தில் இன்றும் நாளையும் இக் கண்காட்சி இடம்பெறும்.

கண்காட்சியை நல்லூர் கூட்டுறவுச் சபையின் பொது முகாமையாளர் செல்வி தயாளமலர் பேரம்பலம் ஆரம்பித்து வைப்பார்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மகளிர் தின நிகழ்வுகளும் இடம்பெறும். வளர்மதி வேலாயுதபிள்ளை அரங்கத்தில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட மகளிர் குழு கூட்டுறவுச் சங்கத்தலைவி திருமதி ரதி சோதிலிங்கம் கலந்துகொள்வார்.

(3-14)

### ஜெனீவா பேச்சு முடிவு மகிழ்ச்சி அளிக்கிறது

# புலிகளின் ஆயுதம் களையப் வேண்டுமென கோருவது எவ்வளவு முட்டாள் தனமானது

### எஸ்.பி. திஸநாயக்க கூறுகிறார்

கொழும்பு,மார்ச் 10

''அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஜெனீவாவில் இடம்பெற்ற சமாதானப் பேச்சின் முடிவுகள் நாட்டுக்கு அமைதியை ஏற்படுத்துவதாக அமைகின்றன. இது குறித்து நாம் மகிழ்ச்சியடைகிறோம். இருப்பினும் சமாதானப் பேச்சை குழப்புவதற்கென்றே ஆளும் கட்சியில் சில தரப்பினர் சதி முயற்சியில் ஈடுபட்டுவருகின்றனர். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

''ஜெனீவா சமாதானப் பேச்சின்போது, துணைப்படையின் ஆயுதங்கள் களையப்படவேண்டுமென புலிகள் தெரிவித்ததை ஆட்சேபித்து துணைப்படையினரின் ஆயுதங்கள் களையப்படுமானால் விடுதலைப் புலிகளினது ஆயுதங்களும் களையப்பட வேண்டும் என பிரதி அமைச்சர் ஸ்ரீபதி சூரியராச்சி தெரிவித்துள்ளார். இது எவ்வளவு முட்டாள் தனமான கருத்தாகும்''

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரும் தேசிய அமைப்பாளருமான எஸ்.பி. திஸநாயக்க கூறினார்.

நேற்று எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடக வியலாளர் மாநாட்டின் போதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

''அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஜெனீவாவில் இடம்பெற்ற சமாதானப் பேச்சைக் குழப்புவதற்காக சிலர் சதி முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றனர். இதனை அரசு பொருட்படுத்தாமல் சமாதானப் பேச்சை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

''அடுத்த கட்டப்பேச்சு ஏப்ரல் மாதம் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. இதற்காக அரச தரப்பு தற்போதே ஆயத்தமாக வேண்டும். பேச்சு மேசையில் இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொள்ளாமல் விட்டுக் கொடுப்போடு அடுத்த கட்டப்பேச்சை நடத்தவேண்டும்.

''ஐக்கிய இலங்கையில் அனைத்து மொழிகள் பேசும் மக்களும் வாழ்கின்றனர். ஆகவே அரசு, பக்கச்சார்புடன் செயற்படாமல் எல்லோரும் நாட்டுமக்கள் என்ற ரீதியில் செயற்பட்டு அமைதிப் பேச்சை முன்நகர்த்த வேண்டும்.

ஜே.வி.பியினர் மற்றும் ஜாதிக ஹெல உறுமயவினர் எப்படியாவது நாட்டில் யுத்தத்தை ஏற்படுத்தவேண்டும் என்றே செயற்படுகின்றனர். இனப்பிரச்சினையை யுத்தத்தின் மூலமே தீர்க்கமுடியும் என அவர்கள் பகல்க்கனவு காண்கிறார்கள். உலகின் எந்தவொரு நாட்டிலும் யுத்தத்தால் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது. ஆகவே இவ்வாறான வெளிஉலக விடயங்கள் புரியாமல் ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவினர் வாய் புலம்புகின்றனர். நர்ளைய சந்ததியினரை பொருட்படுத்தாமல் செயற்படுகின்றனர்.

நான் சிறைவாசம் அனுபவித்து வந்த காலகட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெரும்பாலும் வெற்றிபெற வாய்ப்பு இருந்த போதிலும் வெற்றி கைநழுவிப் போனது. வடக்கு - கிழக்கில் வாக்களிக்காததினாலும் தெற்கில் பலருக்கு வாக்குரிமை வழங்கப்படாததாலும் ஐ.தே.க. தோல்வியடைந்தது.

24 கட்சிகள் ஒன்று சேர்ந்த நிலையில் ஆளும்கட்சி எழுப்பப் பட்டிருக்கிறது. இவர்களின் உதவியுடன் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றார். ஆயினும் தற்போது மஹிந்த ராஜபக்ஷ கூண்டுக்குள் அடைப்பட்டது போல காணப்படுகிறார். அவரால் எந்த ஒரு முடிவையும் சுயமாக எடுக்க முடியவில்லை. இவற்றையெல்லாம் சமாதானப் பேச்சை உரியமுறையில் முன்நகர்த்தி மக்கள் அச்சம் - பீதியின்றி வாழ வழிவகுக்க வேண்டும் - இவ்வாறு அவர் கூறினார். (03)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# நோர்வேக்கு எதிரான கூச்சல்

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் அனுசரணைப்பணி வகித்துவரும் நோர்வே குறித்துத் தெற்கில் தொடர்ந்து சர்ச்சைகள் கிளப்பப்பட்டு வருகின்றன.

ஈழத் தமிழர்களுக்கு நியாயத் தீர்வு ஒன்றை வழங்கிவிடக் கூடாது என்பதற்காக தென்னிலங்கை பௌத்த, சிங்கள மேலாண்மைவாத சக்திகள் புரிந்துவரும் கபடத் திட்டங்கள், ஏமாற்று எத்தனங்கள், மோசடி முயற்சிகள் போன்றவையெல்லாம் நோர்வேயின் நடுநிலைப் பங்களிப்பால் அம்பலமாகி வருவதால்தான் தென்னிலங்கைக்கு இவ்வளவு காய்ச்சல்.

ஆட்சி அதிகாரத்தை தாம் முழுமையாகக் கைப்பற்ற முன்னர், தாமும் சேர்ந்தே - நேரடியாகவே - நோர்வேயைக் கடுமையாக விமர்சிப்பதற்கு வழிசெய்து வந்தவர் மஹிந்த ராஜபக்ஷ.

ஆனால், அரசுத் தலைமையை ஏற்ற பின்னர் இரண்டு காரணங்களுக்காக அந்த வேலையை அவரால் தொடர முடியாமல் போயிற்று.

ஒன்று - யதார்த்தம் என்னவென்பது - மெய்மை நிலைமை யாது என்பது - அவருக்குப் புரிந்ததால்.

அடுத்தது - அரசுத் தலைவரே நேரடியாக அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேயை விமர்சித்தால் அது அப்பணியிலிருந்து வெளியேறும், அதன் விளைவுகளைத் தாம் எதிர்கொள்ள நேரிடும் என்ற உண்மை அவருக்கு உறைத்ததால்.

இந்த இரண்டு காரணங்களுக்காக இவ்விடயத்தில் அவர் வாயை மூடிக்கொண்டு மௌனம் காக்க, அவரது தலையசைப்பு இசைவைப் பெற்றுக் கொண்டு நீட்டி முழங்குகின்றன பேரினவாத சக்திகள்.

போதாக்குறைக்கு தமிழர் தரப்பில் உள்ள ஓரிரு புல்லுருவிப் பிரகிருதிகளில் சங்கரி போன்றோரும் வழமைபோல் தென்னிலங்கைக்கு ஒத்து ஊதத் தொடங்கியிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளோடு செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையை கிழித்தெறிய வேண்டும், அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்றெல்லாம் கூச்சலிட்டது தென்னிலங்கை. ஜெனீவாப் பேச்சிலும் அதைத் தூக்கிப் பிடித்துப் பிடிவாதம் பிடித்தது.

ஆனால், யுத்தநிறுத்த உடன்படிக்கையை அப்படியே முதலில் ஏற்றுக்கொள்ள மறுத்தால் என்ன விளைவுகள் - பெறுபேறுகள் - ஏற்படும் என்பதை ஜெனீவாப் பேச்சில் விடுதலைப் புலிகள் மட்டுமல்ல, நோர்வே அனுசரணைத் தரப்பினரும் அழுத்தம் திருத்தமாக அரசுத் தரப்புக்கு எடுத்துக் கூறினர். அதனால், 'பிச்சைவேண்டாம்; நாயைப்பிடி' என்ற கணக்கில் இறங்கிவந்து, 'உடன்படிக்கையை முற்று முழுதாக - அப்படியே - ஏற்றுக்கொள்கிறோம். நடைமுறைப்படுத்த முழு அளவில் ஒத்துழைக்கிறோம்' - என்று எழுத்தில் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளவேண்டியவர்களானார்கள் தென்னிலங்கை அரசுப் பிரதிநிதிகள்.

அது போன்றதுதான் இப்போது நோர்வே அனுசரணைப் பணிக்கு எதிராகக் கிளப்பப்படும் தென்னிலங்கைக் கூச்சலும்.

அதிகாரத்தைக் கைப்பற்ற முன்னர் - ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது - நோர்வேயை அனுசரணைப் பணியிலிருந்து துரத்துவேன் என்ற கூச்சலுக்கு ஒத்துப் பாடியவர்தான் மஹிந்த ராஜபக்ஷ.

தாம் வெற்றிபெற்று, பதவியேற்ற போதும், பின்னர் தமது அரசின் கொள்கை விளக்கத்தை நாடாளுமன்றத்தில் வெளியிட்ட போதும், நோர்வேயை தூசாக மதித்துத்தான் உரையாற்றினார். இனப்பிரச்சினைக்குப் பேச்சு மூலம் அமைதித் தீர்வு காண நட்பு நாடுகள் மற்றும் அயலில் உள்ள தேசங்களின் உதவியையும், பங்களிப்பையும் பெறுவேன் என்றெல்லாம் அப்போது அறிவித்த ஜனாதிபதி மஹிந்தர், அனுசரணையாளர்களான நோர்வே குறித்து எதுவுமே பிரஸ்தாபிக்கவில்லை.

ஆனால், பேரினவாத சக்திகளின் இசைக்கு ஆடுகின்ற இந்தப் போக்கில் அவரால் ஒரு மாதம் கூட நின்று பிடிக்க முடியவில்லை.

'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற மாதிரி அனுசரணைப் பணிக்கு நோர்வேக்குத் தாமே வெற்றிலை வைத்து அழைக்க வேண்டிய நிலைக்கு உள்ளானார் அவர்.

முதலில் நோர்வேயை அனுசரணைப் பணியிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று துள்ளிக் குதித்த தென்னிலங்கைப் பேரினவாதிகள், அம்முயற்சி ஆரம்பத்திலேயே அடிபட்டுப் பிசுபிசுத்துப் போனதை அடுத்து, யுத்தநிறுத்த உடன்பாட்டை கிழித்தெறிய வேண்டும் என்ற கோஷத்தை முன்வைத்தார்கள். ஜெனீவாப் பேச்சு மேசையில் அதுவும் அடிபட்டுப்போக மீண்டும் பழைய இடத்துக்கே வந்து நின்று நோர்வேக்கு எதிராகக் கரித்துக் கொட்டுகின்றார்கள்.

இலங்கை விவகாரம் தொடர்பாக கருத்து வெளியிடும் சர்வதேச நாடு ஒவ்வொன்றும் - அது அமெரிக்காவாகட்டும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளாகட்டும், இந்தியா, ஜப்பான் போன்ற தேசங்களாகட்டும் அவை ஒவ்வொன்றுமே - இவ்விடயத்தில் நோர்வேயின் பங்கு பணியையும் அனுசரணைத் திறனையும் விதந்துரைக்கத் தவறுவதில்லை.

அதைப் புரிந்துகொள்ளாமல் நோர்வேக்கு எதிராக தென்னிலங்கையில் பேரினவாதிகள் கூச்சல் எழுப்புவது, சர்வதேச ரீதியில் இவ்விடயத்தில் தமிழர் தரப்புக்கு ஆதரவான - சாதகமான - நிலைப்பாட்டையே ஏற்படுத்தித்தரும்.

யுத்தநிறுத்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்த இணங்கவேண்டும் என்ற கட்டாயத்துக்கு இலங்கை அரசும் உள்ளானதற்கே இவ்வளவு சத்தம் என்றால் -

யுத்தநிறுத்த உடன்பாட்டின்படி மோதல் தவிர்ப்பு நிலையை ஏற்படுத்துதல் மற்றும் இராணுவக் கெடுபிடிகள், ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைக் கைவிட்டு வழமை நிலையை உருவாக்குதல் என்பன போன்ற அமைதி முயற்சிகளின் அடுத்த கட்ட செயற்பாடுகள் - நகர்வுகள் - முன்னெடுக்கப்படும் போது தெற்கில் நோர்வேக்கு எதிராகக் காட்டுக் கூச்சல் - கொடூர வெறித்தனம் - வெளிப்படும் என எதிர்பார்க்கலாம்.

அவற்றை எதிர்கொள்ள அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பினர் தயாராக இருப்பது நல்லது.

# குடாநாட்டில் தாய், சேய் இறப்பு வீதம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது

## மகப்பேற்று நிபுணர் நவநீதன் தகவல்

யாழ்ப்பாணம்,மார்ச் 10

யாழ்.மாவட்டத்தில் பிரசவத்தின் போது தாய், சேய் ஆகியோர் இறக்கும் வீதம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று நிபுணர் வைத்திய கலாநிதி சி.நவநீதன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வைத்திய கலாநிதி நவநீதன் மேலும் தெரிவித்ததாவது-

யாழ்.மாவட்டத்தில் வருடம் ஒன்றுக்கு பதினொராயிரம் குழந்தைகள் பிறக்கின்றன. இவற்றில் 75 சதவீதத்துக்கு மேற்பட்ட பிரசவங்கள் யாழ்.ஆஸ்பத்திரியிலேயே இடம்பெறுகின்றன. குறிப்பாகக் கூறின் மாதமொன்றுக்கு 700 சிசுக்கள் இவ்வாறு பிறக்கின்றன.

இவற்றில் சுமார் 25 சிசுக்களும் 15 தாய்மார்களும் இறக்கின்றனர்.

1985 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பிரசவத்தின் போது தாய், சேய் இறப்பு வீதம் குறைந்த மாவட்டமாக யாழ்ப்பாண மாவட்டம் இருந்தது.

ஆனால், இன்று பிரசவத்தின்போது தாய், சேய் இறக்கும் வீதம் அதிகரித்துள்ள மாவட்டங்களாக யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகியன முன்னிலையில் திகழ்கின்றன.

இத்தகைய செய்தி எமக்கு அதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் தருகின்றது.



கர்ப்பிணித் தாய்மாருக்கான போசாக்கின்மை மற்றும் மனதில் ஏற்படும் அழுத்தங்கள், கர்ப்பகாலத்தில் சீரான முறையில் கிளினிக்குகளில் பங்கேற்காமை, போதியளவு மகப்பேற்று நிபுணர்கள் இன்மை, நவீன வசதிகளுடன் கூடிய சத்திரசிகிச்சைக்கூடம் இன்மை ஆகிய காரணங்களால் இத்தகைய இறப்பு வீதம் நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றது - என்றார். (எ-13)

# திருச்சிலுவை பாதயாத்திரை

குருநகர்,மார்ச்10

ஊர்காவற்றுறையில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு தவக்கால திருச்சிலுவைப் பாதை நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை மேற்கு வீதி புனித யாகப்பர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகவுள்ள இச்சிலுவைப் பாதை ஊர்காவற்றுறை புனித யாகப்பர் சொரூபம் வைக்கப்பட்டுள்ள வழிபாட்டுச் செபக்கூட சந்தியை அடைந்ததும் அங்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (எ-51)

## உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ்

# வலி.மேற்கில் நிறுவப்பட்ட 90 வீடுகள் நாளை உரிமையாளர்களிடம் கையளிப்பு

வலி.மேற்கு,மார்ச்10

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் முதலாம் கட்டமாக நிறுவப்பட்ட 90 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.ரங்கராஜா, உலக வங்கியின் வீடமைப்புத் திட்டப் பூணிப்பாளர் செ.பத்மநாதன், யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், உலக வங்கியின் வீடமைப்புத் திட்ட யாழ்.மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம், வலி.மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அராலி மேற்கு செம்மணத்தி, அராலி மத்தி ஊரத்தி, தொல்புரம் முங்கோடை, பண்ணாகம் பல்லசுட்டி, சுழிபுரம் வறுத்தோலை ஆகிய ஐந்து கிராமங்களிலும் நிறுவப்பட்ட வீடுகளே இவ்வாறு திறந்து வைக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு வீடுகளும் தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் உலக வங்கியின் வீடமைப்புத் திட்ட நிதியிலிருந்து நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-175)

## உதயவாக்கு

நாம் கடக்கவிரும்பாத எல்லைகளைப் பார்க்கவே ஆசைப்படுகிறோம்.

- ஓர் அறிஞர் .

## நாளை

மாசி 27
சனிக்கிழமை
11.03.2006
திதி : துவாதசி
முன்னிரவு : 11.38 வரை
நட்சத்திரம் : பூசம்
பிற்பகல் : 2.50
சுபநேரம் : 03.23 - 04.53
ராகுகாலம் :09.23 - 10.53
(யாவும் பழைய நேரப்படி)

# முகமாலை சோதனை நிலையத்தில் குடிதண்ணீர் விநியோகத் திட்டம்

## 'வேள்ட் விஷன்' நிறுவன உதவியுடன் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்10


முகமாலை ஊடாகப் பயணிக்கும் பொதுமக்களின் நலன்கருதி முகமாலை சோதனை நிலலயத்தில் குடிதண்ணீர் திட்டம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் பவுஸர் மூலம் குடிதண்ணீர் எடுத்துவரப்பட்டு மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

மக்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை அடுத்து 55 ஆவது பிரிகேட் தளபதி மேஜர் ஜெனரல் சரத் கருணார்த்ன குடிதண்ணீர் திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக 'வேள்ட் விஷன்' நிறுவனத்தினருடன் கலந்துரையாடியிருந்தார்.

அதன் பயனாக அமைக்கப்பட்ட குடிதண்ணீர் திட்டத்தை கடந்த மாதம் 17 ஆம் திகதி 55 ஆவது பிரிகேட் தளபதி உத்தியோகபூர்வமாகத் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் அந்த நிறுவன அதிகாரிகளும் படையினரும் கலந்துகொண்டனர். (எ-3)





# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

சகல இணைப்புகளுடன் மோட்டறோலா தொலைபேசி விற்பனைக்குண்டு. தொடர்பு: **021 222 5413, 0779058485.** (47814)

### வீடு விற்பனைக்கு

**No.150,** கோயில் வீதியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: கு.தேவ குமார், 150, கோயில் வீதி, யாழ்ப்பாணம். **T.P.:021 222 6009.** (47846)

கோப்பாயில் 2½ பரப்புக்காணியில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: **0714234383** (47845)

### தவறிவிட்டது

இல.28, ப்ண்டாரகுளம் லேன், நல்லூர் என்ற முகவரியை உடைய முத்துவேலு சிவசண் முகராசா என்பவருடைய தே.அ.அட்டை இல.592323001V), விசேட அ.அட்டை, உத்தி யோக அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் 08-03-2006 நல்லூர்-கல்வியங்காட்டிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் யாழ். மாநகர சபை சித்தமருத்துவ பகுதியில் ஒப் படைத்துதவவும். **T.P.:0779004198** (47849)

## நூலகர்கள் இடமாற்றம்

தென்மராட்சி கிழக்கு,மார்ச் 10

வரணி பொதுநூலக பிரதம நூலகர் வி.பால சுப்பிரமணியம் சாவகச்சேரி நகர சபையின் கிளை நூலகமான மீசாலை பொது நூலகத் துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

அதேவேளை- அங்கு நூலகராகக் கடை மையாற்றிய பொ.இரவீந்திரன் வரணி பொது நூலகத்துக்கு பொறுப்பு நூலகராக இடமாற்றம் பெற்று கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (எ-122)

## தேவா பொன்விழாச் சபை
### இணுவில் - இலங்கை

*தேவா பொன்விழாச் சபையால் 10.03.2006 தேவராஜா அவர்களது பிறந்த தினத்தை முன்னிட்டு வருடாவருடம் நடத்தப்படும் பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர் களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் வைப வம் இதுவரை பல்கலைக்கழக அனுமதிக் கான வெட்டுப்புள்ளி வெளிவராத காரணத் தால் பிற்போடப்பட்டுள்ளது. இவ்விழா பற்றிய விவரம் வெட்டுப்புள்ளி வெளியான தும் அறியத்தரப்படும்.*

**திரு.ஞான திருக்கேதீஸ்வரன்**
இணைப்பாளர்
தேவா பொன்விழாச் சபை, இணுவில்.

விளம்பர அனுசரணை:
**டயமன் ஸ்ரோர்ஸ்**
சுன்னாகம். (47858)(26.11.45)

---

வடமராட்சி கிழக்கு
புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்

## மணல் விநியோக அறிவித்தல்

**கார்த்திகை, மார்கழி மாதங்களில் மணல் பெறுவதற்காக திகதிகளைப் பெற்றுக்கொண்ட தனியாருக்கான மணல் விநியோகம் பின்வரும் திகதி ஒழுங்குகளில் விநியோகிக்கப்படவுள்ளது.**

| ஏற்கனவே வழங்கப்பட்ட திகதி | மணல் வழங்கும் திகதி |
|---|---|
| 18-11-2005 | 16-03-2006 |
| 24-11-2005 | 17-03-2006 |
| 01-12-2005 | 23-03-2006 |
| 02-12-2005 | 24-03-2006 |
| 08-12-2005 | 30-03-2006 |
| 09-12-2005 | 31-03-2006 |
| 15-12-2005 | 06-04-2006 |
| 16-12-2005 | 07-04-2006 |
| 22-12-2005 | 15-04-2006 |
| 23-12-2005 | 20-04-2006 |
| 29-12-2005 | 21-04-2006 |
| 30-12-2005 | 27-04-2006 |

(47852)(26.11.45) **-நிர்வாகம்.**

---

## முதலாம் வருட நினைவஞ்சலி

மலர்வு 12 - 07 - 1958



உதிர்வு 19 - 02 - 2005

### அமரர் சீனியர் செல்வநாயகம்

*திதி: 10.03.2006*

*ஆண்டொன்று கடந்திடினும் இன்னும்*
*ஆறவில்லை எம் நெஞ்சம்*
*எத்தனை உறவுகள் எமக்கு இருப்பினும்*
*உம்மைப் போலாகுமோ!*
*நித்தமும் உம்முருவம் நெஞ்சில் வருகையில்*
*நினைவுகள் மாறிடுமோ!*
*இதயம் கனக்க விழிநீர் சிந்திட*
*இறைவனை வேண்டுகின்றோம்*
*உமதான்மா ஈடேற்றம் பெறுக!*

214/4C இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (47842)(26.11.45)

**மனைவி, பிள்ளை,**
**மைத்துனன்மார்,மைத்துனிமார்**

---


ஊழுப்பு இல. 1691

08.03.2006 ஆம் திகதி புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

**வெற்றி எண்கள்** சுப்பர் எண்

**30 38 60 70 (13)**

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. **201011748** இலிருந்து **201028145**

**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 2,06,61,900/-வெல்லப்படவில்லை**

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 2,06,61,900 | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 25 | 5,000/- | 1,25,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 453 | 1,000/- | 4,53,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,407 | 500/- | 7,03,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 21,278 | 40/- | 8,51,120/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 20,262 | 20/- | 4,05,240/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,02,399 | 10/- | 30,23,990/- |
| மொத்தம் | | | 75,61,850/- |
| தங்க நகைகள் , தையல் இயந்திரம் , பைசிக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,45,831 | - | 81,61,850/- |

தொடர் இல. 300955862 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கெட்டுக்கள் 2006 மார்ச் 11 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

**இந்த சனிக்கிழமை**
**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 2,14,70,050/-**

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் அமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கல் அடங்கிய பரிசு முறியை வென்றெடுத்த 5 டிக்கெட்டுக்களின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கம்பஹா | 201021039-7-26 |
| ஹம்பாந்தோட்டை | 201013022-8-90 |
| மொனராகலை | 201013072-5-11 |
| பொலன்னறுவை | 201016586-3-66 |
| கொழும்பு | 201017788-0-56 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03


---

## 50 ஆவது ஆண்டு பொன்விழா

*50 ஆவது ஆண்டு பொன்விழாவை முன்னிட்டு சித் தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலை யமும் இணைந்து பொன்விழா மலர் ஒன்றை வெளியிட வுள்ளன.*

*அதற்கான தரமான ஆக்கங்களையும், கழக நிகழ்வு கள் சம்பந்தமான படங்களையும் அனுப்ப விரும்பும் கௌரவ கழக உறுப்பினர்கள் 25.03.2006 சனிக்கிழ மைக்கு முன்பாக எமக்குக்கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.*

*✱ தரமான ஆக்கங்கள் மட்டும் பிரசுரிக்கப்படும்.*

நிர்வாகம்
இளைஞர் முன்னேற்றக் கழகமும்
சனசமூக நிலையமும், சித்தன்கேணி.

(47848)(26.11.45)

---

## 31ஆம் நாள் நினைவு கூரும் வழிபாடு

அமரர் அருட்திரு. தர்மகுலசூரியரின் தாயாகிய

### திருமதி காயத்திரி மயில்வாகனம்

என்பவரின் நினைவு கூரும் வழிபாடு நாளை *(11.03.2006)* சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு வண்ணார்பண்ணையில் வெஸ்லி மெதடிஸ்த திருச்சபையில் நடைபெறும்.

அனைவரையும் இந்த வழிபாட்டில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

**- சபை ஊழியன்.**

(47850) (24.26.11.45)

---

## உங்கள் எதிர்கால கனவுகள் நிறைவேற வேண்டுமா?
## எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்

**யாழ்.மண்ணில் முதலிடம் வகிக்கும் பிரபல வங்கி காப்புறுதித் துறையினை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் பின்வரும் பதவிகளுக்கு ஆள்சேர்ப்பினை மேற்கொள்கின்றது.**

**பதவி 01**

காப்புறுதி ஆலோசகர் (Insuranc Advisor)

- G.C.E. O/L 06 பாடங்கள் சித்தி (தமிழ், கணிதம் உட்பட)
- ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும்
- வயதெல்லை 18-65 வரை
- வருமான எல்லை 5000/- தொடக்கம் வரையறையில்லை
- பகுதிநேரம்/முழுநேரம் பணிபுரியும் சந்தர்ப்பம்

**பதவி 02**

காப்புறுதி விற்பனை அபிவிருத்தி உத்தியோகத்தர் (Business Promotion officer)

- ஒருவருடம் காப்புறுதி கம்பனிகளில் பணிபுரிந்த அனுபவம்
- G.C.E.A/L பழைய பாடத்திட்டம் 04 பாடங்கள் புதியபாடத் திட்டம் 03 பாடங்கள் சித்தி
- இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் (SLII Exam) முன்னுரிமை.

விண்ணப்ப முடிவு திகதி 18-03-2006
விண்ணப்பிக்கும் முகவரி: மே/பா உதயன் 2828
விண்ணப்பிக்கும் பதவிகளை கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிடவும்.

(47655) (26.11.45)

---

## பவளவிழா-உபநயன விழா வாழ்த்துகள்

ஊரெழு மேற்கு, சுன்னாகம் மீனாட்சி அம்மாள் தேவஸ்தான பிரதமகுருவும்
தர்மகர்த்தாவும் ஆகிய சிவப்பிரம்மஸ்ரீ
**மு.கிருஸ்ணசாமிக்குருக்கள்**
தம்பதியரின் பவளவிழாவிற்கும்
கி.பங்குசகுருக்கள் ஜெயசீலா தம்பதியரின்
சீமந்த புத்திரன் சிரஞ்சீவி
**ப.ரிசிகேசசர்மா** அவர்களின்
உபநயன விழாவிற்கும் வாழ்த்துகள் தெரிவிக்கின்றோம்
சிறப்பிக்கும் குருமார்களிடம் ஆசிகள் வேண்டி நிற்கிறோம்.

*** சிறப்பிக்கும் குருமார்கள்:-**

1. தென்னிந்தியா தமிழ்நாடு பிள்ளையார்பட்டி சிவாச்சாரியர் பிச்சைக்குருக்கள்
2. திருத்தணிகை ரவிக்குருக்கள்
3. மகாதேவ குருக்கள் (காயத்திரி பீடம், இணுவில்)
4. நா.சர்வேஸ்வரக்குருக்கள் (கதிரமலை தேவஸ்தானம், சுன்னாகம்)
5. ஜெகதீஸ்வரக்குருக்கள் (புன்னாலைக்கட்டுவன்)

*** நடத்தி வைக்கும் குருமார்:-**

1. திருப்பாலைவனம் திருஞானசம்பந்தர் சாஸ்திரிகள்
2. தியாகராஜ சாஸ்திரிகள் (தென்னிந்தியா)

(47856)(26.11.45)

**இவர்கள் அனைவரினதும் ஆசிவேண்டி நிற்கும்**
**நோர்வே இந்து கலாசார மன்ற சிவசுப்பிரமணிய ஆலய நிர்வாகத்தினர்.**
**நோர்வே இந்து இளைஞர் அறிவாலயம்.**

# மீன் பதனிடல் நிலையம் நிறுவ சிலாவத்தையில் அடிக்கல்

பரந்தன்,மார்ச்10

சிலாவத்தை தீர்த்தக்கரையில் ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடன் 'ரெக்' நிறுவனத்தினால் மீன் பதனிடல் தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த முதலாம் திகதி புதன்கிழமை நடைபெற்றது.

'ரெக்' நிறுவனத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் எஸ்.விமலேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பொதுச்சுடரை சிலாவத்தை ஊரக மேம்பாட்டுப் பேரவைப் பொருளாளர் எஸ். சித்திரகுமார் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ கடற்படையின் முல்லைத்தீவு நகரத் தளபதி க.தினேஸ் ஏற்றிவைத்தார்.

பெயர்ப்பலகையை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் திரைநீக்கம் செய்து வைத்தார்.

தொழிற்சாலைக்கான அடிக்கல்லை ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் முல்லைத் தீவு மாவட்டப் பணிப்பாளர் வி.நவநீதன், பொருண்மிய மதியுரையகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திலக், பொருண்மிய மதியுரையகத்தைச் சேர்ந்த நா.சுந்தரமூர்த்தி உட்படப் பலர் நட்டு வைத்தனர். (எ-352-203)

# நிரந்தர வீடுகள் இன்றி பூநகரி மக்கள் சிரமம்

கிளிநொச்சி,மார்ச் 10

பூநகரிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் நிரந்தர வீடுகள் இன்றி பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாகக் பூநகரிப் பிரதேச மக்களின் வீடுகள் பலவும் பலத்த அழிவைச் சந்தித்திருந்தன.

இது தொடர்பாக பூநகரிப் பிரதேச உதவி அரசஅதிபர் கருத்துத் தெரிவிக்கையில்:-

1995 ஆம் ஆண்டு பூநகரிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட வலம்புரி இராணுவ நடவடிக்கை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்தனர். அவர்களது குடியிருப்புகள் முற்றாக அழிக்கப்பட்டன.

தற்போது அவர்கள் மீளக் குடியமர்ந்துள்ள நிலையில், அவர்கள் வசிப்பதற்கு இருப்பிடங்கள் எவையுமில்லை. மக்கள் இடம் பெயர்ந்த வேளை வீடுகள் மட்டுமன்றி பாடசாலைகள், பயன்தருமரங்கள், பொதுக்கட்டடங்கள் போன்றன கூட முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

தற்போது அரச சார்பற்ற நிறுவனங்களின் ஓரளவு நிதியுதவியுடன் புதிய வீடுகளை அமைத்து வருகின்றோம்.

கடந்த வருடம் வடக்கு - கிழக்கு வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 77 வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளோம். இந்த வருடத்தில் மேற்படி திட்டத்தின் கீழ் 180 வீடுகளை அமைக்கவுள்ளோம்.

விவசாயத்தையும் கடற்றொழிலையும் நம்பி வாழும் இந்தப் பிரதேச மக்கள் மீளக் குடியமர்ந்த நிலையில் தமது தொழிலை விருத்தி செய்யமுடியாதுள்ளனர்.

எனவே, இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு தொண்டு நிறுவனங்கள் முன்வரவேண்டும் - என்றார்.(எ-307-203)



கரியாலை நாகபடுவான் நொச்சிமுனைப் பிரதேசத்தில் நிறுவப்பட்ட பிரணயன் முன்பள்ளி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் ஒழுங்கமைப்பில் மனித நேயக் கண்ணி அகற்றும் பிரிவுப் பணியாளர்களின் நன்கொடையுடன் கரியாலை மக்கள் அபிவிருத்தி நிறுவனத்தால் இந்த முன்பள்ளி நிறுவப்பட்டது. முன்பள்ளியை நொச்சிமுனை பங்குத்தந்தை அருட்திரு. பாஸ்கரன் அடிகளார் நாடாவெட்டித்திறந்து வைப்பதையும் முன்பள்ளிச் சிறாருக்கு பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் தவராசன் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: வெள்ளாங்குளம் செய்தியாளர்).

## மாதாந்தக் கலைநிகழ்வு

ஊரக வளர்ச்சிப் பணியினரின் ஏற்பாட்டில் கிளிநொச்சி செல்வாநகர் கிராமத்தில் அண்மையில் ஊரக வளர்ச்சி பணிப் பொறுப்பாளர் மு.பரந்தாமன் தலைமையில் மாதாந்த கலைநிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட ஊரக வளர்ச்சிப்பணி பொறுப்பாளர் தென்றல்மாறன், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் முத்துச்சாமி ஆகியோர் கருத்துரை வழங்கினர். தொடர்ந்து நவம் அறிவுக் கூடப் போராளிகளின் கலைநிகழ்வுகளும் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் நடைபெற்றன. (203-352)

# உணவகங்களின் முதன்மைப் பணியாளருக்கு ஆய்வுப் பட்டறையும் மருத்துவ பரிசோதனையும்

கிளிநொச்சி,மார்ச் 10

கிளிநொச்சி பிரதேசத்தில் உள்ள உணவகம் மற்றும் தேநீரகம், குளிர்பான நிலையங்களை நடத்தும் உரிமையாளர் மற்றும் முதன்மைப் பணியாளர்களுக்கான ஆய்வுப் பட்டறையும் மருத்துவ பரிசோதனைகளும் தமிழீழ சுகாதார சேவையினரால் அண்மையில் நடத்தப்பட்டன.

இந்தநிகழ்வு கடந்த 4ஆம் திகதி கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட் சுகாதார சேவைகள் பொறுப்பாளர் ஆ.தமிழ்வாணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உணவு கையாளும் முறைகள், உணவைத் தவறாக கையாளும் போது ஏற்படும் நோய்கள், நோய்கள் பரவுவதற்கான காரணிகள், கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகள் போன்ற பல்வேறு விடயங்கள் அறிவுறுத்தப்பட்டன.

மேலும் சுகாதாரப் பழக்கங்கள், சமைத்த உணவுப் பாதுகாப்பு, தொற்றுநோய் ஏற்படும் சந்தர்ப்பங்கள், திண்ம, திரவங்களின் கழிவு அகற்றல், உணவு சட்ட விதிமுறைகள் குறித்தும் விளக்கங்கள் வழங்கப்பட்டன.

இதில் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய கலாநிதி வாமன், வைத்திய கலாநிதி த.பாஸ்கரன், கண்டாவளை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் டாக்டர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

முதற்கட்ட நடவடிக்கை யாக உணவகங்களில் பணிபுரியும் பணியா ளர்களுக்கு தமிழீழ சுகாதார சேவையினரால் அடையாள அட்டை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-307-204)

## மகளிர் தினக் கருத்தரங்கு

புளியங்குளம்,மார்ச்10

அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு வவுனியா பாலமோட்டையில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

வவுனியா மாவட்டப் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழக மாவட்டப் பணிப்பாளர் திருமதி இ.பத்மாவதி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை வவுனியா தென்பிராந்திய கட்டளைத் தளபதி அப்பன் ஏற்றி வைத்தார்.

இந்நிகழ்வில் பாலமோட்டை பிரதேச பொறுப்பாளர் பரிவேல், பாலமோட்டை தியாகதீபம் திலீபன் மருத்துவமனை மருத்துவர் சமர்மதி எல்லாளர், மாங்குளம் பாடசாலை ஆசிரியர் வ.நாகராணி ஆகியோர் கருத்துரைகள் நிகழ்த்தினர். (203-355)

# கட்டாக்காலி கால்நடைகளால் விவசாயிகள், பயணிகளுக்குச் சிரமம்

கிளிநொச்சி,மார்ச் 10

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களிலும் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்துள்ளதால் பொது மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

கால்நடை வளர்ப்போர் அவற்றை உரிய முறைகளில் கட்டி வளர்க்காமையினால் கால்நடைகள் விவசாயக் காணிகளுக்குள்




புகுந்து பயிர்களை அழித்து வருகின்றன என்று விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - கட்டாக்காலி கால்நடைகளால் வீதிகளில் போக்குவரத்துச் செய்வதில் சிரமம் எதிர்கொள்ளப்படுவதாகவும் - இதனால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

எனவே, கால்நடை வளர்ப்போர் உரிய முறையில் அவற்றைப் பராமரிக்கவேண்டும் என விவசாயிகள் கோரியுள்ளனர்.

அத்துடன், இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் - அவர்கள் கேட்டுள்ளனர். (எ-307-203)

# கௌதாரிமுனைக்கு பஸ்சேவை இல்லை: 'பொடி' நடையாக பயணிக்க வேண்டிய நிலை

பரந்தன்,மார்ச் 10

பூநகரிச் சந்தியிலிருந்து கௌதாரிமுனை வரை செல்லும் மக்கள், பஸ் வசதியின்றி பெரும் சிரமங்களை் எதிர்நோக்கிவருகின்றனர்.

எனவே, கௌதாரிமுனை வரை பஸ் சேவையை நடத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொது அமைப்புகளும் மக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பூநகரிச் சந்தியிலிருந்து கௌதாரிமுனை வரை செல்லும் சுமார் 6 கிலோ மீற்றர் நீளமான வீதியில் பஸ்சேவை நடைபெறுவதில்லை. இதனால், மக்கள் கால்நடையாகச் சென்று தமது தேவைகளை நிறைவேற்றுகின்றனர்.

எனவே, கௌதாரிமுனைக்கென பஸ் சேவை நடத்தப்பட்டால் நேர விரயத்தைத் தவிர்ப்பதுடன், உரிய நேரத்துக்கு அலுவலர்கள் கடமைக்குச் செல்லக்கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-352-204)

# புலமைப் பரிசிலில் அதிக புள்ளி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

கிளிநொச்சி,மார்ச் 10

கண்டாவளைக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளிலிருந்து ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 67 மாணவர்கள் அண்மையில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த் 6 ஆம் திகதி கிளிநொச்சி முருகானந்த மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் கி.கணேசபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மாணவர்களும் பிரதம விருந்தினர்களும் பாண்ட் வாத்திய இசையுடன் கிளிநொச்சி முருகானந்தா மகாவித்தியாலயத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த. குருகுல்ராசா, அருட்தந்தை பிரான்சிஸ் யோசப் அடிகளார் வணிக ஒன்றியத் தலைவர் சொ.வெற்றியரசன், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஆகியோர் மாணவர்களுக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தனர்.

(எ-307-203)








வாரணாசி (காசி) குண்டுத் தாக்குதல்களைக் கண்டித்து சிவசேனை, பக்ரஜ்தன் தொண்டர்கள் மீரட் நகரில் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட காட்சி இது. (ஐ)

# 50 பாதுகாப்பு அலுவலர்கள் பக்தாத்தில் கடத்தப்பட்டனர்

பக்தாத், மார்ச் 10

ஈராக்கிய பாதுகாப்பு நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்துவந்த சுமார் 50 அலுவலர்கள் பொலீஸ் சீருடையில் வந்தவர்களால் பிடித்துச் செல்லப்பட்டுள்ளார்கள்.

குறித்த 50பேரும் கடத்திச்செல்லப்பட்டார்களா அல்லது கைதுசெய்யப்பட்டார்களா என்பது இன்னும் தெளிவில்லாமல் இருக்கின்றது. உள்துறை அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில் இந்தச் சம்பவத்திற்கும் பொலீஸாருக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்றார். ஆனால், வேறு பல அதிகாரிகள் இந்த நபர்களை கொமாண்டோ பொலீஸார் பிடித்துச் சென்றுள்ளார்கள் என்று கூறியுள்ளார்கள்.

முன்னதாக கிழக்கு சாயுனா பகுதியில் - சுனி இனத்தவர்கள் அதிகமாக வாழும் பகுதி நிறுத்திவைக்கப்பட்டிருந்த 'வான்' ஒன்றில் 18 பேரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

தனியாருக்குச் சொந்தமான அல்ரவா என்ற பாதுகாப்பு நிறுவனத்திலிருந்த அலுவலர்கள் 50பேர் பொலீஸ் பிக் - கப் டிரக்குகளில் ஏற்றிச் செல்லப்பட்டார்கள் என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறினார்கள்.

உள்துறை அமைச்சு அதிகாரிகளைப் பொறுத்தவரை ஈராக்கிய பொலீஸாருடன் தொடர்புடைய எவரும் இதில் ஈடுபடவில்லை, சம்பவம் பற்றி விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்கின்றனர்.

பக்தாத்தில் சுமார் 250 தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள் தோன்றியிருப்பதாகக் கருதப்படுகின்றது. மினிவான் ஒன்றில் காணப்பட்ட சடலங்கள் கண்களும், கைகளும் கட்டப்பட்டுக் கிடக்கக் காணப்பட்டன. (ப)

### ஆஸி. பிரதமர் கண்டனம்

காசியில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு ஆஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹாவார்ட் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசும்போது, காசி குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தனது ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் அவர் தெரிவித்தார்.

பயங்கரவாதம் நவீனகால அபாயமாகவுள்ளது. பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராட அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். (ஐ)

காசி குண்டு வெடிப்பின் எதிரொலி:

# இந்திய நாடாளுமன்றத்தின் 2 அவைகளும் ஒத்திவைப்பு!

புதுடில்லி,மார்ச் 10

காசி இரட்டைக் குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக பா.ஜ.க., சிவசேனை எம்.பிக்கள் புதன்கிழமை அரசுக்கு எதிராக தொடர்ந்து ஆவேச கோஷம் எழுப்பியதை அடுத்து இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

ஆத்திரத்துடன் காணப்பட்ட பா.ஜ.க., சிவசேனை உறுப்பினர்கள் இரு அவைகள் கூடியதும், மையப் பகுதியில் திரண்டனர்.

'ஹர ஹர மகாதேவா', 'ஜெய் பஜ்ரங் பாலி' என்றும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு எதிராகவும் தொடர்ந்து கோஷம் எழுப்பி அவை நடவடிக்கைகளைத் தடுக்க முயன்றனர்.

கூச்சலுக்கு மத்தியில் மக்களவையில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் வகுப்பு மோதலை ஏற்படுத்தும் நோக்கத்தில்தான் கோயிலைக் குறிவைத்துத் தாக்கியுள்ளனர் - என்றார்.

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட அரசு உறுதியுடன் உள்ளது என்று அவர் கூறினார்.

காசி குண்டுவெடிப்பு வன்முறை வெறிச் செயல் என மக்களவைத் தலைவர் சோம்நாத் சட்டர்ஜி கடும் கண்டனம் தெரிவித்தார். பயங்கரவாதத்தை எதிர்த்து ஒன்றுபட்டுப் போராடுவோம் - என்றார் அவர்.

மாநிலங்களவையில் துணைத் தலைவர் கே.ரஹ்மான்கான் பேசுகையில், நமது பொறுமையை - மதச்சார்பின்மையை - சோதிக்கும் நோக்கில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது - என்றார். சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரும் அமைதிகாக்கவேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.

உணவு இடைவேளைக்குப் பிறகு அவை கூடியபோதும், மையப் பகுதிக்குச் சென்று பா.ஜ.க., சிவசேனை உறுப்பினர்கள் கோஷம் எழுப்பிக்கொண்டிருந்தனர்.

இதையடுத்து, மாநிலங்களவை துணைத் தலைவர் ரஹ்மான்கான் அவையை ஒத்திவைத்தார். (ஐ)

உலக அரங்கில்

### குண்டு வெடிப்பு: இஸ்ரேல் கண்டனம்

காசியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்கு இஸ்ரேல் அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக இஸ்ரேல் தூதரகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'தீவிரவாதிகளால் நடத்திய குண்டு வெடிப்புச் சம்பவம் இந்துக்களின் மத உணர்வுகளுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல். இது போன்ற தீவிரவாத வெறிச் செயல்கள் எதிர்காலத்தில் நடக்காத வண்ணம் தடுத்து நிறுத்த அனைத்து நாட்டு மதத் தலைவர்களும் ஒருமித்து உறுதி எடுத்துக்கொள்வார்கள் என எங்கள் அரசு நம்புகிறது. காசிச் சம்பவத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்' என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### மியான்மர் சென்றார் அப்துல் கலாம்

இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் 3 நாள் பயணமாக புதன்கிழமை மியான்மர் சென்றார். விமான நிலையத்தில் பிரதமர் மன்மோகன்சிங், அமைச்சர் பரத்வாஜ் ஆகியோர் கலாமை வழியனுப்பி வைத்தனர்.

குடியரசுத் தலைவரின் மியான்மர் பயணத்தின் போது விண்வெளி, எரிசக்தி துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயற்படுவதற்கான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். (ஐ)

# காசி குண்டுத் தாக்குதல் சூத்திரதாரியை கொன்றுவிட்டதாகக் கூறுகின்றது பொலீஸ்!

புதுடில்லி,மார்ச் 10

காசி சங்கடமோர்ச்சர் கோயில் மற்றும் ரயில் நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் தொடர்புடைய சூத்திரதாரி உட்பட 3 தீவிரவாதிகளை பொலீஸார் புதன்கிழமை சுட்டுக்கொன்றனர் - என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

டில்லியிலும் உத்தரப் பிரதேசம் லக்னோவிலும் நடந்த தனித்தனி சம்பவங்களில் இவர்கள் கொல்லப்பட்டனர். இந்தத் தகவலை அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

டில்லியில் நடந்த மோதலில் 2 தீவிரவாதிகளைப் பொலீஸார் சுட்டுக்கொன்றனர். இந்தச் சம்பவம் வட மேற்கு டில்லியிலுள்ள பவானா பகுதியில் நடந்தது.

லக்னோ அருகே உள்ள கோசைகாஞ்ச் பகுதியில் மற்றொரு தீவிரவாதி கொல்லப்பட்டார். இவர் சாலர் என்கிற டாக்டர் மஜீத் என அடையாளம் காணப்பட்டுள்ளது. உத்தரப் பிரதேச அதிரடிப்படையினரும் ஜம்மு காஷ்மீர் பொலீஸாரும் இணைந்து இவரைச் சுட்டுக் கொன்றனர்.

பாகிஸ்தானைச் சேர்ந்த இவரிடம் இருந்து ஆர்.டி.எக்ஸ் வெடிமருந்து, வெடிகுச்சிகள் என்பன கைப்பற்றப்பட்டன.

காசியிலிருந்து லக்னோ வரும்போதும் இவருக்கும் பொலீஸாருக்கும் மோதல் ஏற்பட்டது என்று கூறப்படுகிறது. (ஐ)

# காசி குண்டுவெடிப்புக்குப் பொறுப்பேற்று மன்மோகன் சிங் பதவி விலகவேண்டும்

## அனுமன் சேனா வலியுறுத்து

காசியில் பிரபல இந்துக் கோயிலில் நிகழ்ந்த குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கு பொறுப்பேற்று பிரதமர் மன்மோகன் சிங் பதவி விலகவேண்டும் என்று அனுமன் சேனா வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் -

காசி குண்டு வெடிப்பு குறித்து மத்திய அரசிடம் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஒவ்வோர் இந்துக்களின் உடலாகவும், உயிராகவும், உணர்வாகவும் போற்றக்கூடிய காசி விஸ்வநாதர் ஆலயம் அமைந்துள்ள புனித நகரத்தை காக்க மத்திய அரசு தவறிவிட்டது.

சோனியாவின் கைப்பாவையாக - தலையாட்டி பொம்மையாக இருக்கும் மன்மோகன் சிங்கும் மற்றும் சோனியா காந்தியும் இதற்குப் பொறுப்பேற்று பதவி விலகவேண்டும்.

தொடர்ந்து இந்துக்களின் புனித தலங்கள் மீது தாக்குதல் நடத்தும் முஸ்லிம் தீவிரவாதத்திற்கு துணைபோகின்ற அனைத்து தேசத் துரோக கட்சிகளுக்கும், அதன் தலைவர்களுக்கும் இந்து மக்கள் கட்சி, அனுமன் சேனா கடும் கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறது. - என்று அதில் உள்ளது. (எ)

# சங்கரராமன் கொலை செய்யப்பட்ட வழக்கு: விஜயேந்திரரை விடுவிக்க நீதிமன்றம் மறுப்பு

புதுச்சேரி,மார்ச் 10

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயில் மேலாளர் சங்கரராமன் கொலை வழக்கிலிருந்து விடுவிக்கக் கோரி விஜயேந்திரர், அவரது தம்பி ரகு ஆகியோர் தாக்கல் செய்த மனுக்களை புதுவை நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

மேற்படி கொலை வழக்கில் சதித்திட்டம் தீட்டியதாகக் கூறியுள்ள முறைப்பாட்டுக்கு எந்த ஆதாரமும் இல்லாததால் தங்களை வழக்கிலிருந்து விடுவிக்கவேண்டும் என்று விஜயேந்திரர், ரகு ஆகியோர் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

அம்மனுக்கள் மீது அரசு தரப்பு வழக்கறிஞர் வி.பாலசுந்தரம், ஆட்சேப மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனுக்களின் மீது இரு தரப்பினரும் விவாதம் செய்தனர்.

இந்நிலையில், அந்த மனுக்களின் மீது புதுவை தலைமை நீதிபதி எம்.சின்னபாண்டி, சங்கரராமன் கொலை வழக்கிலிருந்து விஜயேந்திரர், ரகு ஆகியோரை விடுவிக்கமுடியாது என்று தீர்ப்பு வழங்கினார்.

மேலும் இந்த வழக்கிலிருந்து தங்களை விடுவிக்கக் கோரி அவர்கள் தாக்கல் செய்திருந்த மனுக்களையும் அவர் தள்ளுபடி செய்தார். (எ)

# பட்டுப் போன்ற உரோமத்துடன் புதிய நண்டு இனம் கண்டுபிடிப்பு!

பாரீஸ், மார்ச் 10

பசிபிக் கடலில் பட்டுப் போன்ற உரோமத்துடன் கூடிய புதிய வகை நண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு, ஈஸ்டர் தீவுக்கு தெற்கே 1500 கி.மீ.தொலைவில், தென் பசிபிக் கடலில் 7540 அடி ஆழத்தில் இந்த நண்டை அமெரிக்காவின் ரோபர்ட் விரிஜென்ஹோக் தலைமையிலான 'நீர் மூழ்குவோர்' குழு கண்டுபிடித்தது.

பிரெஞ்சு கடல் ஆய்வுக் கழகத்தைச் சேர்ந்த மைக்கேல் செகோன்சாக் இத்தகவலைத் தெரிவித்தார். புதிய நண்டுக்கு 'ஹிவாஹிருஸ்டா' என்று விஞ்ஞானிகள் பெயர் சூட்டியுள்ளனர். வெள்ளை நிறம் கொண்ட இந்த நண்டு 5.9 அங்குல நீளமுடையது. இதன் மேல் பகுதி, பட்டுப் போன்ற, வெளிறிய மஞ்சள் நிற உரோமத்தால் மூடப்பட்டுள்ளது.

இதற்கு கண்கள் கிடையாது. கண்களுக்குப் பதிலாக சவ்வுப் படலம் காணப்படுகிறது.(ஐ)



வாரணாசியில் குண்டு வெடித்த கோயிலை காங்கிரஸ் தலைவர் சோனியாவும், மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேலும் பார்வையிடுகின்றனர்.

# சனத்தொகை அபிவிருத்தியில் முதுகலைமாணி கற்கைநெறி

## எதிர்வரும் திங்களன்று நேர்முகத்தேர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 10

சனத்தொகை அபிவிருத்தியில் முதுகலை மாணி (M.A.,Popu.Dev.) கற்கைநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட் கிழமை நண்பகல் ஒரு மணிக்கு நடைபெற வுள்ளது என்று பட்டப்படிப்புகள் பீடபீடாதி பதி பேராசிரியர் கே.கந்தசாமி அறிவித் துள்ளார்.

2005 - 2006 கல்வியாண்டில் முதலாவது தொகுதியில் விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை யாழ். பல்கலைக்கழக பட் டப்படிப்புகள் பீடத்தில் இடம்பெறும்.

நேர்முகப்பரீட்சையின்போது பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டை, பட்டச் சான்றி தழ், தொழில் தகைமைச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ், நிறுவனத் தலைவரின் சான்றிதழ் என்பவற்றுடன் சமுகம் தருமாறு கேட்கப்பட் டுள்ளது.

மேற்படி கற்கை நெறிக்கு 235 பேர் விண் ணப்பித்துள்ளனர். தமிழ்மொழி மூலம் இடம் பெறும் இந்தக் கற்கைநெறிக்கு முதலாவது தொகுதியில் 50பேர் தெரிவுசெய்யப்படவுள் ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-185)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்



யாழ்.பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறையில் பதவி நிலை உத்தியோகத் தராகச் சேவையாற்றி ஓய்வுபெற்ற திருமதி கண்ணகாதேவி உருத்திரசுந்தரம் அவர்களுக்கு அவரது சேவையைப் பாராட்டி பிரிவுபசாரவிழா அண்மையில் கைதடியில் உள்ள சித்தமருத்துவத்துறை மண்டபத்தில் நடத்தப்பட்டது.

அந்நிகழ்வில் கலந்துகொண்ட உருத்திரசுந்தரம் தம்பதியர் சித்தமருத்துவத் துறைத் தலைவர் டாக்டர் திருமதி எஸ்.பஞ்சராசா மற்றும் சித்தமருத்துவத்துறை உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் படத்தில் காணப்படுகின்றனர்.

(படம்: கைதடிச் செய்தியாளர்)

# தொலைபேசிக் கோபுரங்களை நிறுவ உள்ளூராட்சி நிர்வாக அனுமதி அவசியம்

யாழ்ப்பாணம்,மார்ச்10

வடக்கு-கிழக்கில் தொலைபேசிக் கோபு ரங்களைப் புதிதாக நிறுவுவதற்கு இடத்தைத் தெரிவுசெய்யும்போது உள்ளூராட்சி மன் றங்களின் அதிகாரிகளும் பிரசன்னமாக வேண்டும்.

இவ்வாறு மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.எல். எஸ்.பெர்ணாண்டோ மாகாண பிரதம செய லாளர் எஸ்.ரங்கராஜாவைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

தொலைபேசிக் கோபுரங்களை அமைக் கும் போது உள்ளூராட்சி சபை அதிகாரிகள் பிரசன்னமாகி அவர்களின் சிபார்சுடன் மத் திய சுற்றாடல் அதிகார சபை பிரதிநிதிகளும் இணைந்து இடத்தைத் தெரிவுசெய்வதற் கான சிபாரிசுகளை வழங்கவேண்டும்.

உள்ளூராட்சி சபை அதிகாரிகளின் பிர சன்னம் இல்லாது - சிபார்சு இல்லாது - தொலைபேசிக் கோபுரங்களை அமைக்கும் இடங்களைத் தெரிவுசெய்ய முடியாது என்று அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை-

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி சபை களிலுள்ள பிரதேசங்களின் கீழுள்ள பாரிய தொலைபேசிக் கோபுரங்கள் உள்ளூராட்சி மன்றங்களின் அனுமதி பெறாது நிறுவப் பட்டு செயற்பட்டு வருகின்றன என்று சுட்டிக் காட்டப்படுகிறது. (ஐ-185)

# ஆலய உண்டியல் உடைப்பு

கைதடி தெற்கு, தக்கடிப்புலம் ஞான வைரவர் ஆலயத்தின் உண்டியல் கடந்த வாரம் திருடர் களால் உடைக்கப்பட்டு அங்கிருந்த பணம் அப கரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முதல்நாள் இரவு ஆலய வாசல் கதவை மூடிச் சென்ற ஆலய பூசகர் மறுநாள் அதிகாலையில் வந்து பார்த்தபோதே உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டிருப்பது தெரியவந்தது.

கடந்த வருடமும் இந்த ஆலயம் உடைக் கப்பட்டு பெறுமதிமிக்க ஆலயப் பொருள் கள் திருடப்பட்டிருந்தன. (ஐ-75)

# பாதீனியம் செடி ஒழிப்புப் பணியில் மாணவர்களும் ஈடுபடுத்தப்படுவர்

யாழ்ப்பாணம்,மார்ச் 10

குடாநாட்டின் பலபகுதிகளிலும் பெருக்க மடைந்துவரும் பாதீனியம் நஞ்சுச் செடியைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் பாட சாலை மாணவர்களும் ஈடுபடுத்தப்படவுள் ளனர்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்கான உத்தரவு பாடசாலை அதிபர்க ளுக்கு கல்வித்திணைக்களப் பணிப்பாளர் களால் விடுக்கப்பட்டுள்ளது.

பாதீனியச் செடிகள் அதிகமாகப் பரவி யுள்ள இடங்களை இனங்கண்டு அவற்றை சிரமதான முறைப்படி அகற்றுவதற்கும்-

மாணவர்களின் கல்விச் செயற்பாடுக ளுக்கு இடையூறுகள் ஏற்படாத வகையில் இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கும்- நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரு கின்றது.

பாதீனிய நஞ்சுச்செடியானது பயிர்ச் செய்கை நிலங்களில் பரவி பயிர்களுக்கு பாதிப்புகளை ஏற்படுத்துவது மட்டுமன்றி -சாதாரண தரைகளிலும் பரவியுள்ளது. இதனால் கால்நடைகள், மனிதர்கள் கூட பாதிப்புகளுக்கு உள்ளாகவேண்டிய நிலை ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின் றது. (ஐ-14)

# சாவகச்சேரியில் கோழி வளர்ப்போர் விவரம் பதிவு

தென்மராட்சி, மார்ச் 10

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இறைச்சி, முட்டை ஆகிய தேவை களுக்காக 25 இற்கு மேற்பட்ட கோழிகளை வளர்ப்போர் நகரசபையில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நகரசபையின் அனுமதியின்றி கோழிப் பண்ணை நடத்துவோர் மீது சுற்றுச் சூழல் பாது காப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்று நகரசபை செயலாளர் திருமதி குண மணிதேவி ஆறுமுகம் அறிவித்துள்ளார்.(ஐ-117)

# பாடசாலை நீரிறைக்கும் இயந்திரம் திருட்டு

தென்மராட்சி,மார்ச் 10

மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயத் தில் பொருத்தப்பட்டிருந்த நீரிறைக்கும் மோட்டார் இயந்திரம் கடந்த வாரம் திருட் டுப் போயுள்ளது என முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நிதிய நிறுவனத்தின ரால் வழங்கப்பட்ட இந்த நீரிறைக்கும் மோட்டார் இயந்திரம் மூலம் மாணவர் களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டுவந்தது.

கடந்த திங்கட்கிழமை (6/3)தொட்டியில் நீர் நிரப்புவதற்காக இயந்திரத்தை இயக்கச் சென்றபோது இயந்திரம் திருட்டுப்போயி ருப்பது தெரியவந்தது.

இத் திருட்டுத் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது. (ஐ-117)



தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையில் அண்மையில் நடைபெற்ற மணிவிழாவின்போது பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் உரையாற்றுவதையும் சிவஸ்ரீ.சி.கணேசலிங்கக்குருக்கள், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள், செஞ்சொற்செல்வர் ஆறு திருமுகன், கோட்டக்கல்விப்பணிப்பாளர் எஸ்.கைலைநாதன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் முதல் படத்தில் காணலாம்.

பாலர் ஞானோதய சபையினரால் அதன் தலைவர் சிவஸ்ரீ சி.கணேசலிங்கக் குருக்கள் கௌரவிக்கப்படுவதை அடுத்த படத்திலும் காணலாம். (ஐ)

# வாக்குப் பெட்டிகளின் சுமையை குறைப்பதற்கு வழி இல்லையா?

## தேர்தல் பணியாளர்களின் கேள்வி இது

யாழ்ப்பாணம், மார்ச் 10

தேர்தல் வாக்குப் பெட்டிகள் மிகுந்த பார மான மரப்பலகைகளால் தயாரிக்கப்படுகின் றன. இதனால் அவற்றின் சுமை அதிகமாக உள்ளது. இதனைத் தவிர்ப்பதற்கு பாரம் குறைந்த பெட்டிகளைப் பயன்படுத்த முடி யாதா?

இவ்வாறு கேள்வி எழுப்புகின்றனர் தேர் தல் பணிபுரியும் அரச அலுவலர்கள்.

அண்மையில் சிரேஷ்ட தலைமை தாங் கும் அலுவலர்களுக்கு இடம்பெற்ற பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட பலர் இக் கருத்தை யாழ்.மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாள ரிடம் முன்வைத்தனர்.

இதற்குப் பதிலளித்த யாழ். மாவட்ட உத வித்தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்ததாவது:-

கடந்த சுமார் 20வருடங்களுக்கு முன்னர் செய்யப்பட்ட வாக்குப்பெட்டிகளே இப்போ தும் பயன்படுத்தப்படுகின்றன. உண்மை யில் வாக்குப் பெட்டிகள் ஆவணங்களுடன் காவிச்செல்ல முடியாத அளவிற்கு பாரம் கூடியவையாகவே உள்ளன.

எதிர்காலத்தில் பாரம் குறைந்த பலகை களில் வாக்குப் பெட்டிகள் செய்வதற்கு நட வடிக்கை எடுப்போம்.

கடந்தகாலக் கூட்டங்களிலும் பணி யாளர்களால் இதுபோன்ற கருத்துக்கள் முன் வைக்கப்பட்டு எம்மால் பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளன - என்றார். (ஐ-185)

# தவக்காலச் சிந்தனை 10

## அயலவருடனான உறவு இறைவனின் விருப்பு

எம்மில் பலர் குடும்பத்திலும் அயலவர்மட்டிலும் பகைமை, குரோதங்கள், ஒப்புரவின்மையை வைத்துக்கொண்டு வழிபாடுகள், காணிக்கைகள், நேர்த்திகளை நிறைவேற்றுகிறோம். இது வெளிவேடத்தனமில்லையா? இந்தப் பொருத்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படுமா? இறைவனை மட்டும் அன்புசெய்யவேண்டும் என்பதா இறைவனின் கட்டளை? நம்சகோதரர், அடுத்திருப்போர் அன்புக்குரிய வர்கள் இல்லையா?

தூய உள்ளத்தோடு மேற்கொள்ளும் வேண்டுதல்களை இறைவன் புறந் தள்ளமாட்டார்.

இதுவரை காலமும் இவ்வாறு செய்யத் தவறியிருந்தால் இன்றோடு அதை மறந்துவிட்டு இன்றிலிருந்து உறவுகளை சீர்படுத்த முனைவோம். மன்னித்தல் என்பது சிரமமானதுதான். ஆனால், மன்னிப்பின்றி அன்புவெளிப்படாது, அன்பு உயிரோட்டமுள்ளதாக வேண்டுமெனில் சினங்கொள்வதை விடுத்து மனங்களை மாற்றுவோம். பிறருக்குத் தீமை செய்வதை நிறுத்துவதோடு தீமையானவற்றை நினையாதிருப்போம்.

தீயவரோ தாம் செய்த பாவங்கள் அனைத்தையும் விட்டுவிட்டு மனம் மாறி என் நியமங்கள் அனைத்தையும் கைக்கொண்டு நீதியையும் நேர்மையையும் கடைப்பிடித்தால் அவர்கள் வாழ்வது உறுதி. அவர்கள் இழைத்த தவறுகள் அனைத்தும் அவருக்கெதிராக நினைக்கப்படமாட்டா. அவர்கள் கடைப்பிடித்த நேர்மையின் பொருட்டு வாழ்வர்.(எசே 18:21-22)

தீமைபுரிவோரை, அநீதியானவரை, மன்னிப்பு அற்றோரை சாகடிக்கவென்று அவர்கள் மனம் மாறவே இறைமகன் இயேசு மனுவுருவெடுத்து தமது உயிரைக் கொடுத்தார். அவர் எம் மீது கொண்ட பேரன்பிற்கு பிரதியுபகாரமாக பிறரை மன்னித்து இத்தவக்காலத்திலிருந்து அன்பை வளர்ப்போம்.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை.

# படையினரால் விடுவிக்கப்பட்ட நிலங்களில் விவசாயம் மேற்கொள்ள நடவடிக்கை எடுங்கள்!

## ஒரு வருடமாகியும் சீர்செய்யப்படவில்லை என்று எம்.பி.சுட்டிக்காட்டு

தென்மராட்சி, மார்ச்10

கொடிகாமம், கோயிலாமனைப்பகுதியில் படையினரால் விடுவிக்கப்பட்ட விவசாய நிலங்களில் மீண்டும் விவசாயத்தினை ஆரம்பிப்பதற்கு ஏதுவாக அந்நிலத்தினை சீர் செய்வதுடன் தூர்ந்து போயுள்ள குளங்களையும் ஆழப்படுத்த நடவடிக்கை எடுங்கள்.

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசனிடம் கேட்டுள்ளார்.

கோயிலாமனையில் உள்ள பதினாறு ஹெக்டெயர் விவசாய நிலத்தில் படையினர் நிலை கொண்டிருந்தனர். அப்பகுதியிலிருந்து படையினர் வெளியேறி ஒரு வருடமாகியும் இந்நிலப்பகுதி மண்அணைகளும் பாதுகாப்புப் பதுங்கு குழிகளும் காணப்படுவதால் விவசாய நடவடிக்கையினை ஆரம்பிக்க முடியவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே திணைக்களத்தில் உள்ள கனரக வாகனங்கள் மூலம் நிலத்தைச் சமன் செய்தும் அங்குள்ள துரவுகளை ஆழமாக்கியும் மீண்டும் அப்பகுதியில் விவசாய நடவடிக்கையை ஆரம்பிக்க உதவவேண்டும். அத்துடன் விவசாய மானியங்கள் வழங்குவதற்கு ஏதுவாக திட்டங்கள் இருப்பின் இப்பகுதியில் அமுல்ப்படுத்துமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கேட்டுள்ளார்.

(204-117)

## கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

நீர்வேலி மேற்குப் பகுதியிலுள்ள ஆடுகளை கட்டாக்காலி நாய்கள் அழித்துவருகின்றன. இதனைக்கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இரவுவேளைகளில் கூட்டமாகவரும் நாய்கள் ஆட்டுப்பட்டியிலுள்ள ஆடுகளைக் கடித்துக் குதறி வருகின்றன. இதனால் ஆடுகள் இறந்தும் நோய்வாய்ப்பட்டும் வருகின்றன.

கடந்த இருவாரங்களில் மட்டும் 50 இற்கும் மேற்பட்ட ஆடுகள் இவ்வாறு இறந்துள்ளன.

நீர்வேலி மேற்கு, மாசிவன் பகுதியில் வே.சுந்தரலிங்கம் வீட்டு ஆட்டுப்பட்டியில் நுழைந்த கட்டாக்காலி நாய்கள் அங்கு நின்ற 10 ஆடுகளைக் கொன்றும், மற்றைய ஆடுகளை கடித்துக் குதறியுமுள்ளன.

இந்நிலை தொடருமானால் ஆடு வளர்ப்போர் பெரும் பொருளாதார கஷ்ரங்களை ஏற்க வேண்டி வரும். இதனால் உரியவர்கள் கட்டாக்காலி நாய்களை விரைந்து அழிக்க முன்வரவேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

(204-72)

## கொக்குவில் இந்துவில் இன்று ஆங்கில தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆங்கில தினக்கொண்டாட்டமும் சஞ்சிகை வெளியீடும் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானம் கலந்து கொள்வார். (ப)


## 11 ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 22 . 12 . 1942

இறப்பு 12 . 02 . 1995



அமரர் குப்புசாமி முருகையா

(முன்னாள் உரிமையாளர், "லக்சுமிபவான்" புன்னாலைக்கட்டுவன் சந்தி)

அன்பாலேஅரவணைத்து அறிவோடும்
பண்போடும் எமக்கு வழிகாட்டி
எம்மை ஆளாக்கி வாழவைத்த
அன்புத் தெய்வமே! ஆருயிர் அப்பாவே!
ஆண்டுகள் பதினொன்று ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
எப்போதும் காண்போம் உங்கள் அன்புமுகம்
ஏங்கித் தவித்து நிற்கின்றோம்.
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி: மு.சரோஜினி.
மகன் : மு.ராஜேஸ்கண்ணன்
மகள்மார்கள்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். (47725)

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 12 . 04 . 1934

விண்ணில் 10 . 03 . 1995



செல்வி பரமேஸ்வரி கந்தையா

(இளைப்பாறிய ஆசிரியை, பண்டத்தரிப்பு மகளிர் மகாவித்தியாலயம்)

"அன்பாலே அரவணைத்து அறிவாலே வழிகாட்டி
எமை ஆளாக்கி வாழவைத்த அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் பதினொன்று ஆனாலும் ஆறவில்லை எம்துயரம்"

374, கச்சேரிநல்லூர் வீதி,
நல்லூர். (47784)

தம்பி, தங்கைகள்,
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 . 05 . 1954

உதிர்வு 19 . 02 . 2005



திருமதி கருணைவேல் தேவநாயகி

திதி:பூர்ப பக்க ஏகாதசி

பாசத்தின் உறைவிடமாய்
எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டொன்று என்ன ஆயிரமாயிரம்
ஆண்டுகள் சென்றாலும் மறக்க
முடியாதம்மா உங்கள் நினைவை.

துவாளி வீதி,
இமையாணன்,உடுப்பிட்டி. (47803)

கணவர்,
பிள்ளைகள்.

# 47 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்புடை கோபி! நீயும் அவனியை துறந்தா போனாய்!
அன்னைய, பிதாவை அன்புச் சோதரரை மறந்தா போனாய்!
பண்புடை கோபி! நீயும் பரந்தாமன் அடியா போனாய்!
பாசத்தாற் பரிதவிக்க பரமனின் உலகா போனாய்!
நாள்களே ஆச்சுதப்பா! நாற்பதும் கடந்து போச்சு
நாயகா! நாங்களின்று உன் கடன் செய்யலாச்சு
ஆள்கள் உன் சுற்றம் நண்பர் அயலவர் வந்துமாச்சு
ஐயகோ! அந்தியேஸ்டி உன்னது இன்றுமாச்சு
சாந்தியே கொள்வாய் அப்பா! சாந்தனே எங்கள் கோபி!
சரவணன் தாழ் பணிந்தோம் சாந்தியே பெறுவாய் கோபி!
ஏந்தியே அவன்தாழ் வேண்டி இனியவா எங்கள் கோபி!
என்றுமே சாந்திகொள்ள சலிப்புடன் வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தனிப்பட்ட அழைப்பு தவறுதலாக கிடைக்கப் பெறாத அனைத்து எம் கோபிசார் உள்ளங்கள் யாவரையும் இதனையே தனிப்பட்ட அழைப்பாக பெருந்தன்மையுடன் ஏற்று, அவரின் இல்லத்தில் 10.03.2006 வெள்ளிக்கிழமை அந்தி யேட்டிக் கிரியைகள் நடைபெற்று 12.03.2006 அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம். தனிப்பட்ட அழைப்பை உங்கள் கைகளில் சேர்க்க முடியாமைக்காக வருந்துவதோடு என்றும் எம் கோபியின் ஆத்மாவின் வரவை எதிர்பார்த்து ஏங்கும் ...

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
(கண்ணன் களஞ்சியம், மீசாலை)

குடும்பத்தினர்.
தொ.பே.: 0776991842
(47791) (89)

சந்திரகுமையன் விஜயதர்சன் (கோபி)


(கண்ணன் களஞ்சியம், கண்ணன் கூல்பார், கண்ணன் பான்சி ஆகியவற்றின் உரிமையாளர்)

அன்னை மடியில் 27.09.1976

அரக்கன் அழிப்பில் 23.01.2006

# மருத்துவ, சமூக, சமயப் பணிகள் புரிந்த நயினாதீவு வைத்திய கலாநிதி தம்பையா சோமசேகரம் அவர்களின் ஞாபகார்த்த சிறப்புமலர் - 10.03.2006





நயினை அம்மன் ஆலய முகப்புத் தோற்றம்.



தம்பையா தாகசாந்தி நிலையம்.

## ஆசார சீலராகவும் இல்லற ஞானியாகவும் நயினையில் வாழ்ந்த சோமசேகரப் பெருந்தகை



எமது ஈழமணித் திருநாட்டின் வடபால் யாழ். குடாநாட்டின் கடற்பரப்பில் சப்த தீவுகள் அமைந்துள்ளன. அவற்றுள் நடுநாயகமாகத் திகழ்வது நயினாதீவு. அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாய் விளங்கும் ஸ்ரீ புவனேஸ்வரிபீடம் அமைந்திருப்பதனாலும், எங்கும் நிறைந்த அன்னை பராசக்தி நாகபூஷணியாக இங்கு கோயில் கொண்டிருப்பதனாலும், சைவ சமயத்தின் தொன்மைச் சிறப்பினை உடையது நயினாதீவு. அதுமட்டுமன்றி, சிறந்த கல்விமான்கள், கலைஞர்கள், அறப்பணி யாளர்கள், வள்ளல்கள், சித்தர்கள், ஞானிகள் எனப் பலரை ஈன்று புறம்தந்த பெருமை எம் மண்ணிற்கு உண்டு. சிறந்த சமய, சமூகச் சிறப்புகளையும் விழுமியங்களையும் தன்னகத்தே கொண்ட எம் தாய்த் தீவகத்தில் தோன்றிய பல பெரியார்களின் வரிசையில் மிகவும் உன்னதமான ஓர் இடத்தை வகிப்பவர் அமரர் சித்த வைத்திய கலாநிதி த.சோமசேகரம் ஐயா அவர்கள்.

பரியாரியார் என அன்பாக எல்லோராலும் அழைக்கப்பட்ட அமரர் சோமசேகரம் ஐயா அவர்கள் நயினாதீவின் தென்பகுதியில் அமரர்கள் திருவாளர் க.தம்பையா - நாகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனாக 1918-08-08இல் அவதரித்தார். எட்டு ஆண் சகோதரர்களில் மூத்தவரான இவர், குருகுலக் கல்வி மூலம் கொக்குவில் குளப்பிட்டியில் வாழ்ந்து சமாதி நிலை அடைந்த வைத்தியர் நடராசா ஐயா அவர்களிடம் வைத்தியம் கற்றார். யாழ். மாவட்டத்தில் பல சித்த மருத்துவ நிபுணர்களிடமும் சித்த மருத்துவ அறிவையும் அனுபவத்தையும் பெற்றார். பின்னர் இந்தியாவில் கும்பகோணத்திலுள்ள சித்த மருத்துவக் கல்லூரியில் கற்றுத் தேர்ந்தார். சித்த மருத்துவத் துறையில் பதிவுசெய்யப்பட்ட முதலாவது தமிழ் மருத்துவர் இவராவார். நயினாதீவில் வைத்தியசாலை அமைத்து பல வருடங்களாக சிறந்த மருத்துவப் பணியாற்றினார். நயினாதீவுக் கிராம சபையில் இலவச வைத்தியசாலை அமைப்பதற்கு அரும் பாடுபட்டு வெற்றியும் கண்டார். அரச சேவையில் சித்த மருத்துவராக முதல் முதல் நியனம் பெற்றார். அரச சேவையின் பொருட்டு நானாட்டான், புங்குடுதீவு, அனலைதீவு போன்ற இடங்களிலும் தனது மருத்துவப் பணியை ஆற்றினார். இதனால் அயற் கிராமங்களிலும் ஐயா அவர்களுக்குப் பெருமதிப்பு ஏற்பட்டது. மீண்டும் தாம் பிறந்த மண்ணிற்கே வந்து பல காலம் சேவையாற்றினார்.

வைத்தியனாய் இருப்பவனுக்கு இறை நம்பிக்கையும் இறையருளும் இருக்கவேண்டும் என்பது மருத்துவக் கோட்பாடு. அந்த வகையிலே பரியாரி ஐயாவுக்கு இறையருளும் கைராசியும் இருந்தமையால் மருத்துவத்துறையில் அவர் ஒரு சித்தராகவே விளங்கினார். 'சித்தா சித்தித் திறம்காட்டும் செல்வா' என்பது சிவபெருமானைக் குறிப்பது. சித்தருக்குச் சித்தனான சிவபெருமானை நினைந்து மருத்துவப்பணி புரிந்தமையால் ஐயா அவர்களால் தீராத நோய்கள் பல தீர்த்துவைக்க முடிந்தது. வைத்திய நிபுணர்கள் பலரால் கைவிடப்பட்ட வாதம் போன்ற கொடிய நோய்களால் பீடிக்கப்பட்ட பலர் ஐயா அவர்களின் சித்த வைத்தியத்தால் குண மடைந்து இன்னும் உயிர் வாழ்கின்றனர். இவரது குடும்பமே ஒரு வைத்தியக் குடும்பம். சகோதரர்கள் நால்வரும், புதல்வர்கள் இருவரும் சிறந்த வைத்தியர்களாவார்கள்.

டாக்டர் சோமசேகரம் ஐயா அவர்கள் சிறந்ததொரு சமூகப் பணியாளர். உண்மை பேசு, மௌனமாயிரு, அதிகம் பேசாதே, அன்பு செய் இவைகள் அமரர் அவர்களின் உபதேச வார்த்தைகள். உண்மை பேசாதவன் தன் வாழ்வையே பொய்யாக்கி விடுகிறான். மௌனம் காக்காதவனால் இறைவனிடம் பேச முடியாது. அதிகமாகப் பேசுபவன் தன் வாழ்நாளைக் குறைத்துக்கொள்கிறான். அன்பு செய்யத் தெரியாதவன் ஆண்டவனை அடைய முடியாதவனாகின்றான். தன்னிடம் வரும் அன்பர்களுக்கு ஐயா அவர்கள் இவற்றையே உபதேசமாகக் கூறுவார். இவற்றைத் திரும்பத் திரும்பக் கூறுவதன் மூலம் அவர் ஓர் உத்தமமான சமுதாயத்தை உருவாக்க விரும்பினார் என்பது உண்மை. இஃது அவர் ஆற்றிய ஒரு சமூகப் பெரும்பணி தம்மை நாடிவரும் அன்பர்களுக்குப் புராண, இதிகாசக் கதைகளுடன் இந்த உபதேசங்களையும் தொடர்புபடுத்திக் கூறுவதன் மூலம் அவர்களை நல்வழிப்படுத்துவார்.

ஐயா அவர்கள் நயினாதீவு வைத்தியசாலை நிர்வாகத்தில் மேற்பார்வையாளராகப் பணியாற்றியபோது நயினை மக்களின் நலன்கருதி வைத்தியசாலைக் கருமங்களை விரிவுபடுத்தினார். மகப்பேற்று விடுதி, நோயாளர் விடுதி, வைத்தியர் விடுதி என்பனவற்றைப் புதுப்பித்து அழகுபடுத்தவும் புறச்சூழலை அழகுபடுத்தவும் அரும்பாடுபட்டார். பற்சிகிச்சை நிலையம் இவரது முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது. நிரந்தர வைத்திய கலாநிதி ஒருவரும் இவரது முயற்சியால் இங்கு பணியாற்றும் வாய்ப்பு ஏற்பட்டது. இவையாவும் ஐயா அவர்களின் சமூகப் பணிக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

'தவமும் தவமுடையார்க் காகும்...' என்ற வள்ளுவர் கூற்றுக் கேற்பவும்,

'முன்பு செய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான அன்பினை எடுத்துக்காட்ட... என்ற சேக்கிழார் வாக்கின் படியும் அறப்பணிகள் பல ஆற்றி, இறவாத இன்ப அன்பும் இனிப் பிறவாமையும் பெற்றவர் அமரர் சோமசேகரம் ஐயாஅவர்கள். செம்மை சான்ற சிவநெறி நின்று நயினை மண்ணில் அன்னை நாகபூஷணியின் திருவீதியில் அவர் ஆற்றிய அரும்பணிகளை - சிவப்பணிகளை எடுத்து இயம்ப எமக்குத் தகுதி உண்டோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஐயா அவர்களின் தந்தையால் 26.12.1917இல் ஆரம்பிக்கப்பட்ட தம்பையா தாகசாந்தி நிலையம் இன்றுவரை தளராது நின்று நிலைத்துப் பணி செய்கின்றது என்றால், அது தெய்வத் திருவருளேயாகும். நாகபூஷணி அம்பாளைத் தரிசிக்க வரும் பல்லாயிரக்கணக்கான அடியவர் களின் தாகம் தீர்க்கும் இந்தத் தாக சாந்தி நிலையத்தின் பணியைப் போற்றாதோர் இல்லை. தண்ணீர்ப் பதந்தலுக்கான நன்னீரைப் பெறுவதற்கு நன்னீர்க் கிணறுகளும் அமைத்தார். அந்த நீர் அடியவர்களின் தாகம் தீர்ப்பதற்கு மட்டுமே பயன்படுத்தப் படுவது ஒரு சிறப்பாகும்.

ஐயா அவர்கள் திருநந்தவனம் அமைத்துத் தினந்தோறும் அம்பாளின் பூசைக்கான நாலு மலர்கள் கொண்டுசென்று கொடுப்பார். நறுமணம்மிக்க தூபம் தயாரித்து தாமே அம்பிகைக்குத் தூபமிட்டு வழிபட்டார். நாள்தோறும் வீட்டில் சிவபூசை செய்வது இவரது தவறாத கிரிகை வழிபாடாகும். ஐயா அவர்கள் சிறந்த ஆசார சீலராகவும் இல்லறஞானியாகவும் வாழ்ந்தார். இளமையிலேயே தமது அன்புத் துணைவியாரைப் பிரிந்த பின்னர் தம்குழந்தைகளுக்காகவும் உறவினர்களுக்காவும் இல்லறத்தில் ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்ந்தார்.

'ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கி கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்ட விறலின்' விளங்கினார் என்பதற்கேற்ப வாழ்ந்தவர் ஐயா அவர்கள். தூயவெள்ளாடையும் துலங்கும் வெண்ணீற்றின் ஒளியும் மேயதோர் தாழ்வடமும் கொண்ட திருவேடப் பொலிவும் அவர்தம் அரும் பணிகளும் சேக்கிழார் போற்றிய திருத்தொண்டர் குழாம் அனைத்தையும் எம்முன்னே நிறுத்தி நிற்பது போன்றதாகும்.

அவரது சீரிய தொண்டுகளின் மகிமைக்கு அவரது மரணமே எடுத்துக் காட்டாய் அமைந்து விட்டது. மரணத்தை உணராமலே மரணித்த பாங்கு அவருக்குக் கிடைத்த பெரும் பேறாகும்.

வாழ்க அவர் புகழ்! வளர்க அவர் பணி!
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**வெளியீடு: நயினை மக்கள்.**

## நயினை உற்சவகாலப் பிரதம குருவின் ஆசி!

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

சர்வலோக நாயகியாம் அன்னை அருள்வளர் நாகபூஷணி அம்பாளின் உறைஸ்தலமாகிய நயினைத் தீவீபத்தில் அவதரித்த திருவாளர் டாக்டர் தம்பையா சோமசேகரம் அவர்கள் தான் அவதரித்த புண்ணிய பூமியின் பெருமையினையும் குலப்பெருமையையும் பேணிக்காத்து மக்களுக்கு உடற்பிணியைப் போக்கும் வைத்தியராகவும் ஆன்மீக வாதியாகவும் எளிமையான புன் சிரிப்புடன் கூடிய தோற்றமும் தானதருமங்களில் மிகுந்த சிரத்தையும் இறுதி மூச்சுவரை அதே சிந்தனையுடனும் செயலாற்றிய தரும வள்ளல். அம்பிகை இடத்து அசைக்க முடியாத பக்தியினால் விழாக் காலங்களில் எவருடைய அன்பளிப்புகளையும் கருதாது தாமே தாகசாந்தி செய்வித்து பக்தர்களின் சந்தோஷத்தில் பயன்கருதா சேவையினால் திளைத்த செம்மல். அம்பாளுக்கு ஒரு நந்தவனம், தீர்த்தக்கேணி என்பவற்றின் பயனை அம்பாளின் திருமேனியில் அர்ப்பணித்து ஆத்ம திருப்தி காண்பார். தமது குடும்பச் சிறப்பையும் தான் எடுத்த பிறவிப் பயனையும் முழுமையாக அனுபவித்து இறுதி வரையும் அம்பிகை திருவடிகளே சரணமென்று விண்ணுலக வாழ்வைத் தேடினார். அவர்கள் மறைந்தும் மறையாத அருளாளர். என்றும் அம்பிகையின் திருவடி நிழலில் ஆனந்தப் பெருவாழ்வு வாழ அம்பிகையை என்றும் பிரார்த்திக்கின்றோம். அவரின் குடும்பத்தினருக்கு நிலையாமையை உணர்த்தி தேறுதல் வார்த்தை கூறும் நிலையில் அவரின் எண்ணங்கள் செயல்களை விடாது தொடர்ந்து தொண்டு செய்வதுடன், 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற வாக்குக்கிணங்க தாகசாந்தி நிலையம், பூங்கொல்லைத் தீர்த்தத்தடாகம் என்பவற்றின் புனிதத்தன்மையைப் பேணி தந்தையின் வழித் தோன்றல் எல்லோரும் பணிசெய்து வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டும் எனப் பிரார்த்தனை செய்கின்றேன்.

'உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவன் நிலவுலாவிய நீர்மலிவேணியன்
அலகிற் சோதியன் அம்பலத்தாடுவான் மலர் சிலம் படி வாழ்த்தி வணங்குவாம்.

சாகித்திய சிரோன்மணி சிவஸ்ரீ ப.முத்துக்குமாரசுவாமிக் குருக்கள்
பிரதம குரு நயினை நாகபூஷணி அம்மன், தேவஸ்தானம் [உற்சவ காலம்], குருக்கள் லேன், கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

## சத்திநிபாதமுத்தி தழுவிச் சென்றார்

திருநீற்றின் முக்குறியும் நெற்றி தன்னில்
திகழ்கின்ற சந்தனத்தின் கமழும் பொட்டும்
பருநூலின் வெள்ளுடையும் பக்திப் பண்பும்
பாங்குடைய பரமாசுச் சால்வைத் தோளும்
ஒரு சீற்றம் இல்லாத உவகைப் பேச்சும்
உள்ளொளியை வெளிக்காட்டி உணர்த்தும் கண்ணும்
வருவோர்க்கு இயன்றபொருள் வழங்கும் கையும்
வரித்தவராய் சோமசேகர் வாழ்ந்தே நின்றார்.

சித்தமுறை வைத்தியத்தில் தேர்ந்து நின்றும்
சிவபூசை நித்தியமும் செய்து வாழ்ந்தும்
எத்தனையோ பொதுத் தொண்டு இயக்கி வைத்தும்
இதமாக அறமோம்பிக் கருமம் செய்தும்
புத்துணர்வைப் பூரிப்பை மக்கள் பெற்றுப்
புதுத்தென்பாய் வாழ்வை எதிர்கொள்ளவைத்தும்
பத்துடைய பழஅடியராக வாழ்ந்தார்
பரிகாரி சோமரென்று பாரே போற்றும்.

அம்பாளின் அடியவர்க்கு அருநீர் ஊட்டி
அவர்களது தாகத்தை அன்பால் ஆற்றி
நம்பிநலம் தருகின்ற நன்னீர் ஊற்றை
நயினைபுறை காளிவெளி நிலத்தில் நாட்டி
செம்மாந்து பூஞ்சோலை செழிப்பாய் ஆக்கி(த்)
திருக்கோயில் வலம்வந்து சென்று சாத்தி
தம்மையொரு திருத்தொண்டர் ஆக்கி மேலாம்
சத்திநிபா தமுத்தியினைத் தழுவிச் சென்றார்.

(சி/48243)(24-11-45)

அகில இலங்கை சமாதான நீதவானாக
நியமிக்கப்பட்டுள்ள கண்டாவளையூர்

## ஆறு.சுபாஸ்கரன் அவர்களை வாழ்த்துகின்றோம்



பத்தன்மோட்டை, கண்டாவளையைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் சுபாஸ்கரன் அவர்கள் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதவானாக வவுனியா மாவட்ட நீதிமன்றில் நீதிபதி திரு. மா.இளஞ்செழியன் அவர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

திரு.திருமதி ஆறுமுகம் மகேஸ்வரி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் கிளி/கண்டாவளை மகா வித்தியாலய பழைய மாணவனும் வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலய ஆசிரியரும் சிரேஷ்ட தொழில் வழிப்படுத்துநருமான இவர் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் **'கற்பித்தலில் தேசிய டிப்ளோமா'** பட்டத்தினையும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் **'கலைமாணி'** பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

அத்துடன் கொழும்பு தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தில் **'உளவளத்துணை டிப்ளோமா'** பாடநெறியைப் பயின்றுவரும் இவர், 1994ஆம் ஆண்டு முதல் பத்திரிகையாளராகவும் சேவையாற்றி வருகின்றார்.

சிறந்த ஆசிரியராகவும், உளவளத்துணையாளராகவும், பத்திரிகையாளராகவும் சமூகத்திற்கு பணியாற்றிவரும் இவரின் சேவை பல்லாண்டு காலம் தொடர வாழ்த்துகின்றோம்.

(சி/48222)(32-11-19)

**கல்விச் சமூகம்,**
**வவுனியா மாவட்டம்.**

---



உ

ஊர்காவற்றுறை-புளியங்கூடல்

## ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்

## குருக்கள் தேவை

மேற்படி ஆலயத்தில் குடும்பமாகத் தங்கியிருந்து நித்திய, நைமித்திய பூசைகளைச் சிறப்பாக ஆற்றக்கூடிய பிராமணக் குருக்கள் குடும்பம் தேவை. தகுந்த சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். உடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

(47833)(32-11-19) **- ஆலய அறங்காவலர்.**

---

## மக்கள் வங்கி
### கேள்விப்பத்திர அறிவித்தல்

உத்தேச மக்கள் வங்கிக்கிளை அலுவலகக் கட்டடத்தை நிர்மாணித்தல் - மன்னார்

மன்னார் உத்தேச மக்கள் வங்கிக் கிளை அலுவலகக் கட்டடத்தை நிர்மாணித்தல் தொடர்பான கேள்விப்பத்திரங்கள் 2006 மார்ச் மாதம் 28ஆம் திகதி பி.ப.2 மணிவரை கொழும்பு, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, இல.75 கொண்ட இடத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி தலைமை அலுவலகக் கட்டடத்தின் 6ஆம் மாடியில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் கட்டட பொறியியலாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பின்வரும் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தகைமைகளைக் கொண்டுள்ள, நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) மேற்கொள்ளப்படும், நிர்மாணித்தல் ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்தல் மற்றும் தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் எம் 6 மற்றும்/அல்லது மேற்பட்ட தரமொன்றிலான கட்டடங்களை நிர்மாணிக்கும் ஒப்பந்தகாரராகப் பதிவு செய்துள்ள, இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர்களின் சங்கத்தின் (NCCASL) அங்கத்துவத்தைப் பெற்றுள்ள ஒப்பந்தகாரர்கள் இதற்காகத் தகைமை பெறுகின்றனர்.

ஆர்வமுள்ள கேள்விதாரர்களினால் பின்வரும் ஆவணங்கள், கேள்விப்பத்திரங்களை வாங்கும் வேளையில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

1. விண்ணப்பக் கடிதம்.
2. நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) வழங்கப்பட்டுள்ள செல்லுபடியானதும் காலத்திருத்தம் செய்யப்பட்டதுமான பதிவு அறிக்கை.
3. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர்களின் சங்கத்தினால் (NCCASL) வழங்கப்பட்டுள்ள செல்லுபடியான அங்கத்துவ அட்டை
4. 2005 டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியில் முடிவடைந்த மூன்று வருட காலத்துக்குள் 6 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட செலவிலான கட்டடமொன்றை நிர்மாணித்தல் பற்றி வேலை கொள்பவரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் (அரசாங்க மற்றும் நியதிச் சட்ட சபைகளுக்காக நிர்மாணிக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்ட கட்டடங்களுக்காக மாத்திரம்).

4,000/= ரூபாவை ரொக்கமாகச் செலுத்தியும் மேற்குறிப்பிட்ட செல்லுபடியான ஆவணங்களைச் சமர்ப்பித்தும் கட்டட பொறியியலாளரிடம் வங்கியின் அலுவலக நாள்களில் கொடுக்கல் வாங்கல் நேரங்களின்போது 2006 மார்ச் மாதம் 24ஆம் திகதி வரை கேள்விப் பத்திர ஆவணங்களை வாங்கலாம்.

கேள்விப்பத்திர ஆவணங்களைப் பிரதியொன்றுடன் முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு இடதுபக்க மேல் மூலையில் "உத்தேச மக்கள் வங்கிக்கிளை அலுவலகக் கட்டடத்தை நிர்மாணித்தல் - மன்னார்" எனக் குறிப்பிட்டு 2006 மார்ச் 28ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கட்டட பொறியிலாளருக்கு கிடைக்கக் கூடிய விதத்தில் அனுப்பிவைத்தல்வேண்டும்.

கேள்விகள் மூடப்பட்டவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

கேள்விப் பத்திர ஆவணங்களை கட்டணச் செலுத்தல் எதுவுமின்றி பரீட்சிக்கலாம். மேலதிக விவரங்களைக் கீழே கையொப்பமிடுபவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**கட்டடப் பொறியியலாளர்,**
**மக்கள் வங்கி.** (சி/48236)(32-11-19)

---

# ஊர்காவற்றுறையில் இலவச நிவாரணம்

குருநகர்,மார்ச்10

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் உள்ள இடம் பெயர்ந்தோருக்கான இலவச நிவாரணப் பொருள்கள் ஊர்காவற்றுறைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைகள் மூலம் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான நிவாரணப் பொருள்களே தற்போது வழங்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-51)

# வலிகாமம் மேற்கில் 10 கிராமங்களை அபிவிருத்தி செய்ய ஏற்பாடு

வலி.மேற்கு,மார்ச்10

வலி.மேற்குப் பிரதேசத்திலுள்ள பத்து கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினரால் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

வட்டு. கிழக்கு, வட்டு. தெற்கு, அராலி வடக்கு, தொல்புரம் மேற்கு, மூளாய், சுளிபுரம் மேற்கு, சுளிபுரம் கிழக்கு, பண்ணாகம், சங்கானை கிழக்கு, சங்கானை மேற்கு, சங்கானை மத்தி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்தே இந்தப் பத்துக் கிராமங்களும் தெரிவுசெய்யப்படவுள்ளன.

முதற்கட்டமாக - பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினர் தற்போது பதினொரு கிராம அலுவலர் பிரிவுகளிலுமுள்ள சகல கிராமங்களிலும் தேவை மதிப்பீட்டொன்றினை மேற்கொண்டுள்ளனர்.

தெரிவுசெய்யப்படும் 10 கிராமங்களிலும் இந்த ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் 2007ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையிலான காலப்பகுதியில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும். (எ-175)

# கிறிஸ்தவக் கல்லூரியின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

வலி.கிழக்கு,மார்ச்10

கோப்பாய் கிறஸ்தவக் கல்லூரியின் வளமான அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி நினைவு மண்டபத்தில் அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரை கலந்துகொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (எ-180)

# சமுர்த்தி வங்கிச் சங்க திறப்பு விழா

வலி.கிழக்கு,மார்ச்10

நல்லூர் நாயன்மார்கட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கல்வியங்காடு சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் திறப்புவிழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், யாழ்.மாவட்ட செயலர் க.கணேஷ் பிரதம விருந்தினராகவும் மாவட்டச் செயலக மேலதிக மாவட்டச் செயலர் (நிதி) சு.சண்முகரட்ணம், மாவட்டச் செயலக உதவி சமுர்த்தி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-180)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்.10

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் யாழ்ப்பாணப் பிரதேச சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு சங்கத்தின் தலைவர் துரை ஆரோக்கியதாசன் தலைமை வகிப்பார். (எ-202)

---


**COMPUTER EXPRESS**
**Institute of Information Technology**
இல. 15, சிறாம்பியடி வீதி.யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

இலங்கையில் முதற்தடவையாக கம்பனிக்கணக்குகளுடன்
Diploma in Computerized Accounting
*ACCPAC + QuickBooks premier + MYOB*
ஆகிய முன்னணி Accounting Software அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்.

Course Contents
- Fundamentals of IT
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Budgeting
- Fore Casting
- Business Planing

ஆரம்பம்
11/03/2006 :- 10.00-12.00
12/03/2006 :- 02.00-04.00

*Tally Accounting Package*
புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.


---

## மக்கள் வங்கி
### கேள்விப்பத்திர அறிவித்தல்

உத்தேச மக்கள் வங்கிக்கிளை அலுவலகக் கட்டடத்தை நிர்மாணித்தல் - கிளிநொச்சி

கிளிநொச்சி உத்தேச மக்கள் வங்கிக் கிளை அலுவலகக் கட்டடத்தை நிர்மாணித்தல் தொடர்பான கேள்விப்பத்திரங்கள் 2006 மார்ச் மாதம் 28ஆம் திகதி பி.ப.2 மணிவரை கொழும்பு, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, இல.75 கொண்ட இடத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி தலைமை அலுவலகக் கட்டடத்தின் 6ஆம் மாடியில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் கட்டட பொறியியலாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பின்வரும் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய தகைமைகளைக் கொண்டுள்ள, நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) மேற்கொள்ளப்படும், நிர்மாணித்தல் ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்தல் மற்றும் தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் எம் 6 மற்றும்/அல்லது மேற்பட்ட தரமொன்றிலான கட்டடங்களை நிர்மாணிக்கும் ஒப்பந்தகாரராகப் பதிவுசெய்துள்ள, இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர்களின் சங்கத்தின் (NCCASL) அங்கத்துவத்தைப் பெற்றுள்ள ஒப்பந்தகாரர்கள் இதற்காகத் தகைமை பெறுகின்றனர்.

ஆர்வமுள்ள கேள்விதாரர்களினால் பின்வரும் ஆவணங்கள், கேள்விப்பத்திரங்களை வாங்கும் வேளையில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

1. விண்ணப்பக் கடிதம்.
2. நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) வழங்கப்பட்டுள்ள செல்லுபடியானதும் காலத்திருத்தம் செய்யப்பட்டதுமான பதிவு அறிக்கை.
3. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர்களின் சங்கத்தினால் (NCCASL) வழங்கப்பட்டுள்ள செல்லுபடியான அங்கத்துவ அட்டை
4. 2005 டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியில் முடிவடைந்த மூன்று வருட காலத்துக்குள் 6 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட செலவிலான கட்டடமொன்றை நிர்மாணித்தல் பற்றி வேலை கொள்பவரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் (அரசாங்க மற்றும் நியதிச் சட்ட சபைகளுக்காக நிர்மாணிக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்ட கட்டடங்களுக்காக மாத்திரம்).

4,000/= ரூபாவை ரொக்கமாகச் செலுத்தியும் மேற்குறிப்பிட்ட செல்லுபடியான ஆவணங்களைச் சமர்ப்பித்தும் கட்டட பொறியியலாளரிடம் வங்கியின் அலுவலக நாள்களில் கொடுக்கல் வாங்கல் நேரங்களின்போது 2006 மார்ச் மாதம் 24 ஆம் திகதி வரை கேள்விப் பத்திர ஆவணங்களை வாங்கலாம்.

கேள்விப்பத்திர ஆவணங்களை பிரதியொன்றுடன் முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு இடதுபக்க மேல் மூலையில் "உத்தேச மக்கள் வங்கிக்கிளை அலுவலகக் கட்டடத்தை நிர்மாணித்தல் - கிளிநொச்சி" எனக் குறிப்பிட்டு 2006 மார்ச் 28ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கட்டட பொறியிலாளருக்கு கிடைக்கக் கூடிய விதத்தில் அனுப்பிவைத்தல்வேண்டும்.

கேள்விகள் மூடப்பட்டவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

கேள்விப் பத்திர ஆவணங்களை கட்டணச் செலுத்தல் எதுவுமின்றி பரீட்சிக்கலாம். மேலதிக விவரங்களைக் கீழே கையொப்பமிடுபவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**கட்டடப் பொறியியலாளர்,**
**மக்கள் வங்கி** (சி/48235)(32-11-19)

---

## ஹற்றன் நஷனல் வங்கி

### அடகுப்பொருள்களை மீட்டல் / விற்பனைக்கான அறிவித்தல்

**எமது கிளைகளான யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி வங்கிகளில் அடகுசேவை வசதிபெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு,**

நீங்கள் பெற்ற அடகுக் கடனுக்குரிய சீட்டின் மறுபக்கத்தில் குறிப்பிட்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருள்களை ஒருவருட காலத்திற்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்படவேண்டும் என்பதையும் கடனின் முழுப்பகுதியையும் உடனே செலுத்தமுடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் செலுத்தி, காலாவதித் திகதியை நீடித்துக்கொள்ளலாம் என்பதையும் அறியத்தருகின்றோம்.

ஒரு வருடத்திற்கு மேற்பட்ட அடகுப்பொருள்களை மீட்க/ காலாவதித் திகதியை நீடிக்க, ஆவன் செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுப் பொருள்கள் 25.03.2006 அன்று ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும்.

(சி/48234)(32-11-19) **முகாமையாளர்.**

# பொன் அணிகளின் போர் 89 ஆவது ஆட்டம் இன்று

யாழ்ப்பாணம்,மார்ச் 10

**பொன் அணிகளின் போர் (Battle of the Gold) என வர்ணிக்கப்படும் பாரம்பரிய கிரிக்கெட் மோதல் சென்.பற்றிக்ஸ் மற்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளுக்கிடையே இன்று ஆரம்பமாகின்றது.**

**. பொன் அணிகளுக்கிடையே 89ஆவது தடவையாக இந்த மாபெரும் கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்பமாகின்றது. சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் முற்பகல் 9.30 மணிக்கு ஆட்டம் ஆரம் பிக்கும்.**

வருடந்தோறும் இந்தக் காலப்பகுதியில் அனைவராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் ஆட்டமாகஇந்த ஆட்டம் அமைகின்றது.

இந்தத் துடுப்பாட்டம் இன்றுமுதல் இரண்டு தினங்கள் இடம்பெறவுள்ளது.

இதுவரை இந்தப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற போட்டிகளில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 30 போட்டிகளிலும் யாழ்ப்பாணக் கல்லூரி அணி 15 போட்டிகளிலும் வெற்றிபெற்றுள்ளன. 24 போட்டிகள் வெற்றிதோல்வியின்றிச் சமநிலையில் முடிவடைந்துள்ளன.

இம்முறை நடைபெறும் ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் அணிக்கு டபிள்யூ.ஐ.ஜக்சன் அணித் தலைவராகவும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு என்.ஜெனார்தனன் அணித்தலைவராகவும் இருப்பர்.

இவ்வாண்டு சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிகள் பங்குபற்றிய ஆறுபோட்டிகளில் நான்கு போட்டிகளில் வெற்றிபெற்றது. அத்துடன் ஒரு போட்டியில் தோல்வியைத் தழுவிக்கொண்டதுடன் மற்றொரு போட்டி சம நிலையில் முடிவடைந்தது.

யாழ்ப்பாணக் கல்லூரி அணி பங்குபற்றிய 6 போட்டிகளில் ஒன்றில் வெற்றியும் மற்றொன்றில் தோல்வியும் அடைந்ததுடன் ஏனைய 4 ஆட்டங்களும் சம நிலையில் முடிவடைந் தன.

பொன் அணிகளுக்கிடையேயான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி கடந்த ஆறு வருடங்கள் வெற்றிபெற்றுள்ளது.

இந்நிலையில் இன்று ஆரம்பமாகி நடைபெறவுள்ள 89ஆவது ஆண்டுக்கான ஆட்டத்தில் எந்த அணி வெற்றியைத்தட்டிச் செல்லப் போகின்றது என்ற எதிர்பார்ப்பு எல்லோர் மத்தியிலும் நிலவுகின்ற நிலையில் அணிகளின் பலப் பரீட்சை இன்று ஆரம்பமாகின்றது. (உ-190-203)

### போட்டி நேரம்

இரண்டு நாள்களும் ஆட்டம் இடம்பெறும் நேரம் வருமாறு:-

- 9.30 மணி தொடக்கம் - 12.30 மணி வரை
- 12.30 மணி தொடக்கம் - 1.10 மணி வரை(மதிய இடைவேளை)
- 1.10 மணி தொடக்கம் - 3.10 மணி வரை
- 3.10 மணி தொடக்கம் - 3.30 மணி வரை (தேநீர் இடைவேளை)
- 3.30 மணி தொடக்கம் - 5.30 மணி வரை)

## யாழ்ப்பாணக் கல்லூரி அணி




இருப்பவர்கள் - (இடமிருந்துவலம்)- ஆர்.குகன் (பயிற்றுநர்), ரி.பிரியதரன்(உப தலைவர்) என்.ஏ.விமலேந்திரன்(அதிபர்), என்.ஜெனார்த்தனன்(அணித் தலைவர்), என்.சசிதரன், பி.எல். மோகனகுமார்(விளையாட்டு அதிகாரி)

நிற்பவர்கள் - (இடமிருந்துவலம்) - எல்.ஆர்.நிகிதன், எஸ்.நிரோஷன், எம்.கிறிஷாந்தன், எஸ்.யதுர்ஷன், ஜே.செந்தூரன், வி.கொயல்செதான், கே.ஐ.டிலான், எஸ்.கோமளதரன், எம்.சிறிஷாந்தன், ஆர்.மயூரன், ஜே.தர்சன்.

## சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி



இருப்பவர்கள் - (இடமிருந்துவலம்)- சி.சகாயராஜா(விளையாட்டுத் துறை பொறுப்பாசிரியர்), பி.பத்மமுரளி, ப.விதுபாலா, டபிள்யூ.ஐ.ஜக்ஷன்(தலைவர்), வண.பிதா.ஜஸ்ரின் பி.ஞானப்பிரகாசம் (அதிபர்), வி.ஜே.லூட்சன்(உபதலைவர்), எஸ்.ஜெனன்ராஜ், எ.எஸ்.நிஷாந்தன் (பயிற்றுநர்), ஜே.ஜேதீஸ்வரன், பி.ஜெயக்குமார்(கிரிக்கெட் பொறுப்பாசிரியர்)

நிற்பவர்கள் - எ.மரீன்குமார், இ.எவ்.டெஸ்மன், எஸ்.நரேஷ், பி.நவதீபன், ஜே.சி.பெஸ்ரன் கொலின், எ.ஜெயந்திரன், எம்.ஜே.மனோஜ், ஆர்.பி.ரெக்னோ, எம்.ஏ.நிலோஷன்.

## மருந்துக் கலவையாளர் பரீட்சை

கொழும்பு,மார்ச் 10

மருந்துக் கலவையாளர்களுக்கான (வெளிவாரி) பரீட்சை எதிர்வரும் மே மாதம் 27 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ சட்டப்பிரிவு (1) இன் கீழ் இரண்டு வருட பயிற்சியை முடித்துள்ள மருந்துக் கலவையாளர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

2006 மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் இரண்டு வருட பயிற்சியை முடித்துள்ள மருந்துக் கலவையாளர்கள் மட்டுமே இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர். எழுத்து மூலமான பரீட்சையில் திருப்திகரமான பெறுபேறுகளைப் பெறுபவர்களைப் மாத்திரமே நேர்காணல் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்கள் என்று தெரிகின்றது.

(ப)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 10

நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலைஅதிபர் ஐ.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக சிறுவர் பாதுகாப்பு நிதிய யாழ். மாவட்ட கல்விசார் திட்ட முகாமையாளர் வைத்திய கலாநிதி அ. பேரின்பநாதன் கலந்துகொள்வார். (எ-13)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச் 10

கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் வ. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

(எ)

## உபநயன விழாவும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம்,மார்ச் 10

ஊரெழு மேற்கு சுன்னாகம் மீனாட்சி அம்பாள் ஆலய பிரதம குருவும் தர்மகர்தாவுமாகிய சிவப்பிரம்மஸ்ரீ மு.கிருஷ்ணசாமிக் குருக்கள் தம்பதியரின் பவளவிழா நிகழ்வும் அவர்களின் மகனான சிரஞ்சீவி ரிஷிகேசசர்மாவின் உபநயன விழாவும் நூல் வெளியீட்டு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஊரெழு மேற்கு மீனாட்சி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தமிழ்நாடு பிள்ளையார் பட்டி கற்பக விநாயகர் வேதாகம பாடசாலை அதிபர் டாக்டர் சிவஸ்ரீ பிச்சையப்பா சிவாச்சாரிகள் உட்பட தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்திருக்கும் சிவாச்சாரிகள் மற்றும் அறிஞர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

(எ-203)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 12-07-1958 — விண்ணில் 19-02-2005

**அமரர் சீனியர் செல்வநாயகம் (வண்டா)**

*திதி : 10.03.2006*

ஆண்டு ஒன்றான போதும்
ஆறவில்லை எம் துயரம்
பண்பின் அறிவொளியாய்
பல்லோரும் போற்றும் பண்பாய்
இவ்வுலகில் வாழ்ந்த வண்டாவே
ஆண்டுகள் கோடி ஆனாலும்
ஆறாது ஐயா உந்தன் நினைவுகள்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

சந்தம்புளியடி, காரைநகர்.

தகவல்: பிரிவில் துயருறும் சகோதரர்கள்.

(11-45-25) (47861)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை சக ஆசிரியை
திருமதி விஸ்வதேவி புஸ்பநாதனின்
அன்புத் தாய்
**திருமதி கோபாலு வாலாம்பிகையின்**
தீடீர் மறைவையிட்டுத் துயருறும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியர் கழகம்,
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

(ச-48250) (11-45-25)


## தமிழ் ஆசிரியர் பணிநிலை வேண்டுகை

**தொல்காப்பியம் உட்பட, தமிழ் இலக்கணத்தைத் தெளிவாகக் கற்பிக்கக்கூடிய ஆசிரியரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆசிரியப் பணியில் பத்தாண்டுகளுக்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.**

**வயதெல்லை :40-60**

**யாழ்ப்பாணம், வன்னி ஆகிய இடங்களில் பணியாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்.**

**வன்னியில் தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.**

**மாதந்தோறும் 20, 000 உரூபாவிற்குக் குறையாமல் சம்பளம் வழங்கப்படும்.**

**விண்ணப்ப முடிவு திகதி: 2006.03.20**

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**

**மே/பா: ஆசிரியர்,**
**உதயன் பணிமனை, யாழ்ப்பாணம்.**

(சி-48253) (11-45-25)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 . 11 . 1973



உதிர்வு 21 . 03 . 2005

**ரஞ்சிதமனோகரன் ரஜனி**

*ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்*
*உங்கள் நினைவு மட்டும் மறையவில்லை*
*எங்கு பார்த்தாலும் உனது திருமுகம் மட்டும் தெரிகிறது*
*ஆத்மா சாந்திபெற ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்*

*தியேட்டர் லேன்,*
*இணுவில் கிழக்கு.* (47864) (11-45-25) - குடும்பத்தினர்.

## விரயங்களினைப் பணமாக்கி இயற்கை வளத்தினை வளமாக்குவோம்

விலை 1 kg- 3 ரூபா

மார்ச் 10 முதல்

பொலித்தீன், பிளாஸ்ரிக் மூலப் பொருள்களை நாம் பயன்படுத்திய பின்னர் அவற்றை நிலத்தில் புதைக்கும் போதும் எரிக்கும்போது எமது உடல்நலமும் இயற்கைச் சூழலும் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது.

இவற்றைத் தவிர்த்து எமது ஆரோக்கியமானதும் மகிழ்ச்சியானதும் வாழ்க்கையினைத் தொடர்ந்து பேணுவதும் இயற்கையின் சூழல் மாசடையாது பேணுவதும் எங்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

இதற்காகவே பொருண்மிய மதியுரையகம் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருள்களை மீள்பாவனைக்கு உட்படுத்தும் திட்ட மொன்றினை ஆரம்பித்துள்ளது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான். தங்களிடமும் தங்களது சுற்றாடலிலும் காணப்படும் கழிவாக்கப்பட்ட பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருள்களினை விற்பனைசெய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு அப்பொருள்களை வழங்கிப் பணத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

முல்லை. தொழில்நுட்பக் கல்லூரி - முல்லைத்தீவு.

பொருண்மிய மதியுரையகம் - ஆண்டான்குளம், அடம்பன், மன்னார்.

படகுக்கட்டுமானம் - இரணைமடு, கிளிநொச்சி.,

பொருண்மிய மதியுரையகம் - ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு.

தொ.எண்: 021 228 5009 (சி/48233) (24-19-15)

### 3 ஆஸ்பத்திரிகளுக்கு மின்பிறப்பாக்கிகள்

ஜப்பான் அரசின் நிதியுதவியின் கீழ் வழங்கப்பட்ட 35 கே.வி. ரக மின் பிறப்பாக்கிகள் மூன்று, யாழ். மாவட்டத்தில் இயங்கும் 3 வைத்திய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை, சங்கானை சுற்றயல்கூறு வைத்தியசாலை, ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றுக்கே இந்த மின்பிறப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-51)




## சுனாமி வீடமைப்புத் திட்டத்திற்கான மணல் விநியோகம்

வடமராட்சிப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்புத் திட்டத்தினை மேற்கொள்ளும் அரசசார்பற்ற நிறுவனங்களிற்கான மணல் விநியோகத்தினை ஒழுங்குபடுத்துவதற்காக 11.03.2006 சனிக்கிழமை காலை முற்பகல் 9 மணிக்கு எமது உபயகதிர்காமத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு மேற்படி வேலைத்திட்டத்தோடு சம்பந்தப்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதியொருவரை சமுகம் தந்து ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டுகிறோம்.

- நிர்வாகம்.

வடமராட்சி கிழக்கு,
புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்,
மணல் விநியோகம் அலுவலகம்,
உபயகதிர்காமம்.

(47851) (24-19-15)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




வேலணை கிழக்கு பா.சுந்தரேஸ்வரன் - தொல்புரம் சிவனருட்செல்வி தம்பதியரின் செல்வப் புதல்வன் செல்வன் தரணிதன் [தரணி] தனது முதலாவது பிறந்தநாளை இன்று [10.03.2006] வெள்ளிக்கிழமை தொல்புரத்தில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, கனடா பெரியப்பா, பெரியம்மா, கொழும்புத்துறை பெரியமாமா, பெரியத்தை, மச்சாள் கஜனி, நீர்கொழும்பு சின்னமாமா, சின்னத்தை, மச்சான் பானுஜன் மற்றும் உற்றார், உறவினர்கள் நயினை நாகபூஷணியம்மன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் நலமுடனும் வளமுடனும் வாழ வாழ்த்துகின்றனர்.

வேலணை கிழக்கு,
வேலணை - 4.

(சி/48244) (42-24-19-15)

Dr. ஐ.பாலசுப்பிரமணியம் (அப்பப்பா).

## ஆறாவது 10.03.2006 பிறந்தநாள் வாழ்த்து




திரு.திருமதி A.P. இராசரத்தினம் - புஸ்பராணி
தம்பதியரின்
மூத்த புதல்வன் R.லிந்துஜன்
தனது ஆறாவது பிறந்த நாளை இன்று
(10.03.2006) வெள்ளிக்கிழமைதனது இல்லத்தில்
வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.
இவரை தொட்டப்பா, தொட்டம்மா, பெரியப்பா
குடும்பத்தினர், அம்மம்மா குடும்பத்தினர்,
சித்தப்பா குடும்பத்தினர், அத்தைமார், அக்காமார்,
அண்ணாமார், மாமன்மார், மைத்துனர், மைத்துனிமார்,
நண்பர்கள் புனித அந்தோனியார் அருளும் ஆசியும்
பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

திரு. திருமதி A.P. இராசரத்தினம் புஸ்பராணி
392/2, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

(47853) (42-24-19-15)

உ





## புதுக்கடைத்திறப்பு விழா அழைப்பிதழ்



அன்புடையீர் !

நிகழும் மங்களகரமான பார்த்திப வருஷம் மாசி மாதம் 26ம் நாள் (10.03.2006)
வெள்ளிக்கிழமை முற்பகல் 7.59 மணிமுதல் 9.49 மணி வரை வரும் மேட லக்கினமும்
பூர்வ ஏகாதசி திதியும் புனர்பூச நட்சத்திரமும் சித்தயோகமும்
கூடிய சுபமுகூர்த்த வேளையில்

# ஏகாம்பரம் பல்பொருள் விற்பனை நிலையம்

எனும் வர்த்தக நிலையம் மீண்டும் அதே இடத்தில் புதுப் பொலிவுடன் திறக்கவிருப்பதால்
அத்தருணம் தாங்களும் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன்
அழைக்கின்றோம்.

சுபம்



997, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, நல்லூர்.

இங்ஙனம்
ஏகாம்பரம் பாஸ்கரன்

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

# ஜப்பானின் மனமாற்றம்: தமிழ்த் தேசியத்தின் பரப்புரைகளுக்கு கிடைத்த மகத்தான வெற்றி...!

**ஸ்ரீலங்காவின் நீண்டகால நட்பு நாடான ஜப்பான் அண்மையில் தெரிவித்திருந்த விசனம் அமைதிக்காலத்தின் ஓர் அறுவடை என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.**

**விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ வானொலியான புலிகளின் குரலில் கடந்த சனிக்கிழமை (04.03.2006) ஒலிபரப்பாகிய அரசியல் அரங்கம் பகுதியில் அவர் ஆற்றிய உரையின் எழுத்து வடிவம் இது.**



இன்றைய அரசியல் சூழ்நிலையானது மிகமிக கொதிநிலையில் இருக்கிறது. இந்தக் கொதிநிலையை அதிகரிக்கும் வகையில் தான் ஜப்பானியத் தூதுவரின் அறிக்கை பத்திரிகை செய்திகளில் வெளியானது.

சர்வதேச நிதி உதவிகளைக் கையாள்கின்ற ஸ்ரீலங்கா அரசின் போக்குக் குறித்து விசனம்' என்ற தலைப்பில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இலங்கைத் தீவில் அமைதியைக் கொண்டுவர சர்வதேச நிதி உதவிகள் எந்த வகையில் பயன்படுத்தப்பட்டன? என்கிற ஏமாற்றமான அறிக்கை அப்போது வெளியிடப்பட்டது.

தமிழீழ விடுதலைப் போராட்டமானது சர்வதேசத்தின் செல்நெறிப் போக்கில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பது இதற்கு ஒரு காரணமாக அமைந்திருக்கிறது.

இலங்கைக்குக் கிடைக்கும் சர்வதேச உதவிகளில் அதிகளவு வழங்கிவரும் ஜப்பான் இலங்கைக்கான பல மில்லியன் டொலர் நிதியை எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்று பார்த்ததில் அரசியலில் திட்டமிட்ட இழுபறிகளையும் இழுத்தடிப்புகளையும் செய்வதன் மூலம் பாரிய நிதி மோசடி, நிதிச் சூறையாடல் இடம்பெற வழியேற்படுத்தியிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாம் இதனை ஜப்பானின் அதிருப்தியாகப் பார்க்காமல் சர்வதேசத்தின் அதிருப்தியாகப் பார்க்கவேண்டும்.

ஏனெனில், ஜப்பான்தான் இலங்கையினது உதவித் திட்டத்தின் பெரும்பகுதியை குறிப்பாக, ஏறத்தாழ 32 விழுக்காட்டு வெளிநாட்டு நிதியின் முழுப்பொறுப்பையும் ஜப்பானே வழங்கிவருகிறது.

ஜப்பானை நம்பியே ஸ்ரீலங்கா அரசாங்கம் இயங்கி வருவதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஜெனீவாவில் பழைய கோட்டையில் தொடங்கிய எமது அரசியல் மையமான்து நகர்ந்து இப்போது டோக்கியோவில் மையம் கொண்டுள்ளது.

எரிக்சொல்ஹெய்மின் கையிலிருந்த அந்த அரசியல் அமையம் அகாசி கைக்கு மாறியிருக்கிறது. ஒரு புதிய பாத்திரமாக ஜப்பான் தனது அழுத்தத்தைக் காட்ட முற்பட்டிருக்கிறது.

### எல்லையற்ற வியூகம்

அண்மையில் அமெரிக்க அதிபர் புஷ் இந்தியப் பயணம் மேற்கொண்டபோது இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், 'இந்திய - அமெரிக்க உறவு எல்லையற்று விரிகிறது' என்று கூறினாராம். அதேபோல்தான் மஹிந்தரது அரசியல் வியூகங்களும் திட்டங்களும் எல்லையற்றுப் போய்க்கொண்டிருக்கிறன.

எந்தவிதமான வரையறைகளும் இல்லாமல் மஹிந்த செய்கிற அரசியல் வித்தைகளை நாங்கள் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தொடர்ந்து மஹிந்தர் பக்கம் ஆள்கள் போய்க்கொண்டு இருக்கிறார்கள். இதனூடாக ஜே.வி.பியைப் புறந்தள்ளுகிற முயற்சியை மஹிந்த மேற்கொண்டுள்ளார்.

மஹிந்தரின் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் எதிர்காலத்தில் இணைந்து ஒரு புதிய அணியாக வரப்போகிறார்களா?

அப்போது சந்திரிகாவும் ஜே.வி.பியும் என்ன செய்யப் போகிறார்கள்?

எல்லா எதிரிகளையும் ஓரணியில் நிறுத்திவிட்டு அவர்களை ஜே.வி.பி. எதிர்கொள்ளப்போகிறதா? என்பனவற்றையெல்லாம் நாம் கவனத்தில் கொண்டுள்ளோம்.

ஸ்ரீலங்காவில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளுமே ஒரே ஒரு கட்சியின் பல்வேறு கிளைகள்தான்.

ஜெனீவாப் பேச்சுகளின் முடிவுகளைத் தொடர்ந்து ரணிலின் சர்வதேச நிலைப்பாடு மாறியிருக்கிறது.

வெளிநாட்டு உதவி என்கிற மிகப்பெரிய ஆயுதம் இதுவரை காலமும் தமிழீழ விடுதலைப்போராட்டத்துக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது எல்லோரும் அறிந்த விடயம்.

முதல்முறையாக ஜப்பானூடாகத் தங்களது போக்குக் குறித்து மறு ஆய்வுசெய்ய வேண்டிய நிலைக்கு வெளிநாட்டு உதவித் திட்டங்களை வழங்கும் நாடுகள் செல்ல வேண்டியதாகியுள்ளது.

### ஜப்பானின்மன மாற்றத்துக்கு காரணம் என்ன?

ஸ்ரீலங்காவின் மிகமிக நெருங்கிய நண்பனான, உச்ச நண்பனான ஜப்பானின் மனமாற்றத்துக்கு என்ன காரணம்?

போதும், போதும் என்று அலுத்துவிட்டதா? அல்லது மஹிந்தரினது 'சர்க்கஸ்' தாவலில் அலுப்புத்தட்டிவிட்டதா?

மஹிந்தர் ஒவ்வொரு முறையும் சங்கிலி இணைப்பாக ஒருமுறை இந்தியா, மற்றொரு முறை பாகிஸ்தான், இன்னொரு முறை சீனா என்று, அப்புறம் ஜப்பான் என்று தாவுகிற வேகம் குறித்து அச்சம் கொண்டுவிட்டதா?

அல்லது உண்மையிலேயே அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றுதான் விரும்புகிறார்களா?

அல்லது நேரிலே கூறிய பிறகும் அலுத்துப்போய் அறிக்கை விட வேண்டிய நிலைக்கு ஜப்பான் தள்ளிவிடப்பட்டதா? என்கிறவகையில் கேள்விகள் எழும்பியிருக்கின்றன.

இது மஹிந்தருக்கு செல்லக்குட்டா? அல்லது அடிமேல் அடி வைத்து அம்மியை நகர்த்துகிற கதையாக மாறி வருகிறதா?

இப்படியான பல்வேறு கேள்விகளுக்கூடாக நாங்கள் சொல்ல விரும்புகிற செய்தி...

தமிழ்த் தேசியத்தின் பரப்புரைக்குக் கிடைத்திருக்கும் மாபெரும் வெற்றி இது என்பதுதான் அச்செய்தி.

நீண்டகாலமாக இந்தச் சர்வதேச உதவியானது தமிழ் மக்களைக் கொன்று குவிக்க பயன்பட்டதைச் சுட்டிக்காட்டிய போது அதைக் கண்டுகொள்ளாமல் கண்ணை மூடிக்கொண்டிருந்த உலகம் இன்றைக்கு நிதி உதவி தொடர்பாக தங்கள் அதிருப்தியை வெளியிட்டிருப்பது மகத்தான வெற்றியாகக் கருதுகிறோம்.

'இடிப்பாரே இல்லாத ஏமரா மன்னன்-கெடுப்பார் இலாது கெடும்' என்ற குறளுக்கேற்ப காவலற்ற, கட்டுப்பாடற்ற சிங்கள ஆட்சி முறைக்கு இன்றைக்கு இடித்துரைப்பு நடக்கிறது.

இலங்கையின் வரலாற்றில் வெளிநாட்டு உதவி என்பது மிகப்பெரிய காரணியாக இருக்கிறது.

சர்வதேச ரீதியான பொருண்மிய உலகத்தில் உலகமயமாக்கல் அடிப்படையில் உலகத்தைச் சங்கிலியாக இணைப்பதற்கு எடுக்கிற முயற்சிகளில் இந்த வெளிநாட்டு உதவிகளின் பங்களிப்பை அறிவோம்.

இலங்கையினுடைய போரின் கொடூரத்துக்கு வெளிநாடுகள் உதவி செய்தமையானது பாவமான பங்களிப்பு.

1983ஆம் ஆண்டு ஸ்ரீலங்காவின் பாதுகாப்புப் படைகளுக்கு ரூ.100கோடி செலவு செய்யப்பட்டது. இன்று ரூ. 10 ஆயிரம் கோடி செலவுசெய்கிறது. வரவு - செலவுத் திட்டத்தில் 15 விழுக்காட்டிற்கும் அதிகமாக ஒதுக்கப்படுகிறது எனில் உலகத்தின் உதவியால்தான்.

இதுதொடர்பில் இன்றாவது உலகம் சிந்திக்கத் தொடங்கியிருப்பது குறித்து நாங்கள் மகிழ்ச்சி கொள்கிறோம்.

எந்தவிதமான கோட்பாடும் அற்று, சிக்கலும் அற்று கோட்பாடுகளிலே சிக்குப்பட்டிருந்த நாடுகள் பனிப்போர் காலத்தில் கூட எந்த வேறுபாடும் இல்லாமல் இலங்கைக்கு உதவி செய்த வரலாற்றை நினைத்துப் பார்க்கிறோம்.

எந்த அரசு பதவிக்கு வந்தாலும் எல்லோரும் உதவி செய்வார்கள். அதனது விளைவை இன்று அறுவடை செய்கின்றனர்.

ஸ்ரீலங்காவின் வரலாற்றில் வெளிநாட்டு உதவிகள் தொடர்பாக நீண்ட ஆய்வுகள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன.

### மூன்று கால கட்டங்கள்

இந்த ஆய்வுகளில் 3 கால கட்டங்களாக சிறிலங்காவின் வரலாற்றைப் பிரிக்கிறார்கள். 1948இற்கும் 1956இற்கும் இடைப்பட்ட காலம் 1956 முதல் 1977 காலம். 1977இற்குப் பின் எனப் பிரித்துள்ளனர்.

1948ஆம் ஆண்டு இலங்கை விடுதலைபெற்ற காலகட்டத்தில் இலங்கை தொடர்பாக மேற்குலகத்தின் கரிசனை அதிகரித்திருந்தது. அதனது விளைவாகத்தான் 1950களிலேயே உலக வங்கி இலங்கைக்கு வருகைதந்து இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களில் பங்களிப்புச் செய்ததனூடாக இலங்கையைத் தன்னுடைய கட்டுப்பாட்டில் கொண்டுவர முயற்சி எடுத்தது.

அந்தக் காலகட்டத்தில் இலங்கையின் மானிய உதவித்திட்டம் அதாவது, உணவுக்காகக் கொடுக்கப்பட்ட திட்டத்தில் உலக வங்கி கைவைத்த போது 1953ஆம் ஆண்டு ஏற்பட்ட வேலைநிறுத்தம் பற்றி அறிந்திருப்பீர்கள்.

உலகத்தின் தலையீடுகள் தொடங்கிய 1950 களிலும் கூட இன்னோர் அதிசயம் நடந்தது. 1950களிலே ஐக்கியதேசியக் கட்சியின் அரசாங்கம் இருந்த போது சீனாவுடன் உறவு ஏற்பட்டது.

அரிசிக்கு றப்பர் என்ற திட்டத்தின் கீழ் அதாவது இலங்கையின் றப்பரை நல்ல விலை கொடுத்து வாங்கி மலிவாக அரிசியை இலங்கைக்குக் கொடுத்து சீனாவுடன் நல்லுறவு ஏற்படுத்தப்பட்டது.

அந்தக் கட்டத்திலிருந்து ஸ்ரீலங்காவின் வரலாற்றில் சீனத்தின் பங்களிப்பு மிக மோசமாக இருந்தது என்பதை நாம் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளோம்.

இன்று ஸ்ரீலங்கா இராணுவம் வைத்திருக்கும் ரி-56 ரக துப்பாக்கிக் குழல்களிலிருந்து வெடிக்கும் குண்டுகள் எங்கள் மக்களைக் கொன்று குவித்தன.

சீனாவில் ஏ-கே- 47 ரக தயாரிப்புகளும் ரி-56 ரக துப்பாக்கிகளும் ஸ்ரீலங்காவுக்கு வழங்கப்பட்ட காலம் எதுவென்பதை நீங்கள் பார்த்தீர்கள் எனில் 1983ஆம் ஆண்டுக் கலவரத்துக்குப் பின்னர்தான்.

### ஆயுதங்களை அள்ளிக்கொடுத்தது சீனா

வட சீனா கைத்தொழில் கூட்டுத்தாபனத்தின் ஆயுத உற்பத்திப் பொருள்களைப் பெறுவதற்காக சீனாவுடன் 1984 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஒப்பந்தம் செய்துகொண்டார். அன்றிலிருந்து இன்றுவரை சீனா தொடர்ந்து இடைவிடாது எவ்வளவோ ஆயுதங்களை வெளிநாட்டு உதவித்திட்டத்தின் கீழ் கொடுத்துக் கொண்டு வருகிறது.

இலங்கையைப் பொறுத்தவரை வெளிநாட்டு உதவி என்பது பணமாக - கடனாக - ஆயுதமாக - ஆயுதப் பயிற்சியாக - இன்னும் பலவாகவும் நீள்கிறது.

இன்றும் அமெரிக்கா தனது மிகப்பெரிய உதவித்திட்டத்தைப் பயிற்சிகளுக்காகவும் இராணுவத் தளபாடங்களை கடனாகப் பெறுவதற்கூடாகவும் மிகப் பெருந்தொகையை வருடா வருடம் அமெரிக்கா கொடுத்து வருகிறது.

1984ஆம் ஆண்டிலிருந்து இன்று வரைக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு இடைவிடாமல் உதவிகள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

1957ஆம் ஆண்டுவரை மேற்குலக செல்வாக்கோடு இருந்த ஸ்ரீலங்கா அதன் பின்னால் சோவியத் சீனா அணி பக்கம் சாய்கிறது.

அந்தக் காலகட்டத்திலும்கூட இந்த சோவியத் - சீனா அணி சார்பு நிலையை சுதந்திரக்கட்சி மேற்கொண்டிருந்த அந்தக் காலத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருந்த போது மேற்குலகம் மிகுந்த ஆதரவோடு செயற்பட்டது.

1965ஆம் ஆண்டு டட்லி பதவி ஏற்ற பின்னர்தான் உலக வங்கியின் தலைமையில் அனைத்து உதவி வழங்கும் நிறுவனங்களும் பரீஸ்- 08 என்ற குழுவை உருவாக்கி மிகப் பெரிய அளவில் இலங்கைக்கு உதவி வழங்குவதில் முன்னணி வகித்தனர்.

இதனது விளைவாக ஆண்டுதோறும் இலங்கையின் பொருண்மிய நிலைக்கு நற்சான்று தருகின்ற வேலையை இந்த உலக வங்கியின் தலைமையிலான குழு கொடுத்துவந்தது.

இனப்போராட்டம் கூர்மை அடைய, கொலைகள் நிகழ - நிகழ இந்த உதவித் திட்டம் அதிகரித்துக் கொண்டு போன அவலத்தையும் பார்க்கிறோம்.

1976ஆம் ஆண்டு 65 மில்லியன் உதவித் திட்டத்தை உலக வங்கி வழங்கியது.

1997ஆம் ஆண்டு 84 கடனுதவித் திட்டத்தின் கீழ் 1900 மில்லியன் ரூபா வாரி வழங்கப்பட்டிருக்கிறது.

அந்தக் காலகட்டத்தில் 1990ஆம் ஆண்டுவரை இனச்சிக்கலினது கூர்மை விவகாரத்தை இந்த உலகம் கண்டுகொள்ளவே இல்லை என்கிறது ஆய்வுகள்.

இங்கே மக்கள் படுகின்ற துன்பங்கள் தொடர்பாக உலக வங்கி நாடுகளால் எந்தவிதமான கரிசனமும் செலுத்தப்படவேயில்லை என்ற உண்மை வெளியே வந்திருக்கிறது.

### உலகின் போக்கு மாறியது

1990இற்குப் பின்னர் இந்த விடயத்தில் கரிசனை செலுத்தத் தொடங்கியது. இதற்குக் காரணம் என்னவெனில், எமது விடுதலைப் போராட்டத்தின் தாக்கத்தால் இலங்கையினது பொருண்மிய நிலை சரியத் தொடங்கிவிட்டது. இலங்கையின் எதிர்காலம் கேளிவிக்குறியானதால் அந்த நாடுகள் சிந்திக்க வேண்டிய நிலைக்கு வந்தன. உலகத்தின் போக்கு மாறத் தொடங்கியது.

ஜனநாயகம், பல கட்சி ஆட்சி, ஊழலற்ற நிர்வாகமுறை, குடிமக்கள் பங்களிப்பு என்று பல வகைக் கோட்பாடுகளை முன்னிறுத்தி ஓர் இரட்டை அனுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டிய நிலைக்கு உலகம் தள்ளப்பட்டது. இந்த நிலையைக் கடைப்பிடிக்க விடுதலைப் புலிகளின் போராட்டமும் ஒரு காரணம் என்பதை மகிழ்ச்சியாக சொல்லிக்கொள்கிறோம்.

சிங்கப்பூரில் லீ குவான் யூ. நீண்ட காலமாக இலங்கையின் வரலாறு பற்றி அறியக் கவனம் செலுத்தியுள்ளார்.

1947ஆம் ஆண்டு சிங்கப்பூருக்கு இலங்கை வழிகாட்டியாக இருக்கும் என்று அவர் சொன்னார்.

அண்மையில் அவர் மரணமடைவதற்கு முன்னர் எழுதிய நூலில் குறிப்பிட்ட முக்கிய விடயம்-

இந்த வறண்ட வலயத்தில் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களுக்கூடாக தமிழ் மக்களுக்குரிய காணிகளை வழங்காமல் அந்த நிலங்களைச் சிங்கள மக்களுக்கு வழங்கியதே இந்த இனச்சிக்கலுக்கு அடிப்படையான காரணம் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

வெளிநாட்டு உதவி என்பது மிகநீண்டகாலமாக குறிப்பாக 1930 களில் வல் ஓயா திட்டத்தில் தொடங்கி மகாவலி திட்டம், யானோயா திட்டம், வெலிஓயாத் திட்டம் வரை அனைத்துமே தமிழ் மக்களின் பாரம்பரிய உலர் வலயத்தில் சிங்கள மக்களைக் குடியேற்ற மோசமான அந்த இன விரோதத் திட்டத்துக்கு இந்த வெளிநாட்டு உதவிகள் மிகப்பெரிய காரணமாக இருந்திருக்கின்றன.

இன்று ஜப்பானியத் தூதுவர் விழுந்தடித்து அறிக்கை விடுவதற்கு காரணமெல்லாம் இந்தப் பழிபாவங்கள் அனைத்தும் தங்கள் தலையில்தான் விழப்போகிறது. இந்த வெளிநாட்டு உதவிகள் தாங்கள் எதிர்பார்த்த விளைவுகளுக்கு மாற்றான விளைவுகளைத் தரப்போகின்றன என்ற அச்சம்தான் உருவாக்கியிருப்பதை எண்ணி உலகம் நடுநடுங்கியிருக்கிறது.

அதற்காக உலகம் விழுந்தடித்து ஓடிவந்து எங்களைக் கை தூக்கிவிடப்போகிறது என்று நாம் சொல்லவில்லை.

### பரப்புரைகளின் வெற்றி

பரப்புரை என்பது இராஜதந்திர ரீதியாக இன்றைக்கு உலகத்தில் முக்கியத்துவம் அடைந்திருப்பதால்தான் பரப்புரை பெற்றிருக்கிற வெற்றிக்காகத்தான் இத்தகைய கருத்துகளை நாம் முன்வைக்கின்றோம்.

1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் மோதல் நடக்கும் நாடுகள் குறித்து ஐ.நா. சபை கூடுதல் கவனம் செலுத்தத் தொடங்கியது. மோதல் நடக்கும் பகுதிகளுக்குள்ளும் உதவித் திட்டங்களை விஸ்தரிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதால் எமது போராட்டத்தை உலகம் புரிந்துகொள்ளுகிற வாய்ப்பு ஏற்பட்டது.

இலங்கையைப் பொறுத்தவரையில் சந்தைப் பொருண்மிய முறையை விருத்தியடையச் செய்தல் என்பதுதான் உலக நாடுகளின் பிரதானமான இலக்காக இருந்தன. இதற்கூடாகத் தங்களது பொருண்மியத்தை வளர்த்து உலக மயமாக்கலில் மேலும் ஒரு நிலையை எட்டத்தான் அவை திட்டமிடுகின்றன என்பது வழமையானது.

அதேபோல் நாடாளுமன்ற வாத, ஜனநாயக வழிமுறையை இலங்கைத் தீவில் உருவாக்குதல் குடிமக்கள் சமூகத்தினது குரலுக்கு அதிகாரம் கொடுத்து ஓர் ஊழலற்ற பல்வகைத் தன்மை வாய்ந்த சமுதாய அமைப்பைக் கட்டியெழுப்புதல்.

சமூக ரீதியான இனச்சிக்கல்களுக்குத் தீர்வு கண்டு சமூக இணக்கத்தை உருவாக்குதல் என்பதாகத்தான் இருந்தது.

ஆனால், ஜப்பானின் தற்போதைய அறிக்கைக்கூடாக இந்த 4 விடயங்களிலும சர்வதேசம் தவறிவிட்டது என்பதை ஒப்புக்கொள்ளுகிறதாக இருக்கிறது.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையே நீண்ட தொடர்பு உள்ளது. 1945ஆம் ஆண்டு 2ஆம் உலப் போரில் ஜப்பான் பாதிக்கப்பட்டபோது சான்பிரான்சிஸ்கோ நகரில் ஜப்பானுக்காகக் கண்ணீர்விட்டு பரிந்துபேசியது ஸ்ரீலங்கா.

தேரவாத - பௌத்த வாத உறவுகளும் வளர்ந்ததால் நீண்டகால ஆத்ம நண்பனாக ஜப்பான் தோற்றம் கொடுத்தது.

### ஜப்பானுக்கே ஞானம் உதித்திருக்கிறது

இப்படிப்பட்ட ஜப்பானுக்கே ஞானம் உதித்திருக்கிறது என்று சொன்னால் 4 ஆண்டுகால சமாதான விளைவுகள் தொடர்பான தர்க்க ரீதியான முடிவுக்கு வரவேண்டிய நிலைக்கு உலகம் தள்ளப்பட்டிருக்கிறது என்பது மகிழ்ச்சி தருகிறது.

இதற்காக உலகம் எங்கள் குரலைக் கேட்டு எங்கள் நியாயத்தைப் பேசும் என்று நாம் சொல்லவில்லை.

ஆனால், அமைதிக் காலத்தின் அறுவடையாக, சான்றிதழாக வரலாற்றில் நாங்கள் இவற்றைக் கணக்கிட்டுக் கொள்கிறோம்.

ஓ
சிவமயம்

# பவள விழா, உபநயன அழைப்பு

ஊரெழு மேற்கு, சுன்னாகம் மீனாட்சி அம்பாள் தேவஸ்தான
பிரதமகுருவும் தர்மகர்த்தாவுமாகிய
**சிவப்பிரம்மஸ்ரீ மு.கிருஸ்ணசாமிக் குருக்கள் தம்பதியரின்**
பவளவிழா அழைப்பும்
பிரம்மஸ்ரீ கிருஸ்ண பங்குசக் குருக்களாகிய எனது புத்திரன்
சிரஞ்ஜீவி ரிஷிகேசசர்மா அவர்களின்

## உபநயன விழா அழைப்பும் நூல்வெளியீட்டு விழாவும்

**காலம்:-** பார்த்திப வருடம் மாசிமாதம் 26ஆம் நாள் (10-03-2006) வெள்ளிக்கிழமை
**இடம்** :- மீனாட்சி அம்பாள் தேவஸ்தானம், ஊரெழு மேற்கு, சுன்னாகம்.
**நேரம்** :- காலை 8.30மணி

மேலும் இவ்விழாவில் தமிழ்நாடு பிள்ளையார்பட்டி, கற்பக விநாயகர் வேதாகம பாடசாலை அதிபர் டாக்டர் சிவஸ்ரீ பிச்சை யப்பா சிவாச்சாரியார், திருத்தணிகை சிவஸ்ரீ ரவிசிவாச்சாரியார், தீட்சாகுரு, சுன்னாகம் கதிரைமலை சிவன் தேவஸ்தானம் பிரதமகுரு, சிவஸ்ரீ ந.சர்வேஸ்வரக்குருக்கள், வித்தியா குரு காயத்திரிபீட அதிபர் சிவஸ்ரீ த.மகாதேவக் குருக்கள் ஆகியோரின் ஆசியுடனும்,
தமிழ் நாடு திருப்பாலைவனம், ஸ்ரீ.லோகாம்பிகாவேத சிவாகம பாடசாலை முதல்வர் சிவஸ்ரீ T.V. ஞானசம்பந்த சிவாச்சாரியார், தமிழ் நாடு காட்டூர் சிவஸ்ரீ K.S. தியாகராச சிவாச்சாரியார் முன்னிலையிலும் நடைபெறவிருப்பதால் அத்தருணம் அனைவரும் குடும்ப சமேதராக வருகைதந்து குமாரனை அசீர்வதிக்கும்படி வேண்டுகிறோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
(47837)(26.19.16)
**சிவஸ்ரீ க.இரவீந்திரக் குருக்கள் தம்பதிகள்,**
ஊரெழு மேற்கு, **சிவஸ்ரீ கிருஷ்ண பங்குசக் குருக்கள் தம்பதிகள்,**
சுன்னாகம். **சிவஸ்ரீ கிருஷ்ண சோதீஸ்வரக் குருக்கள் தம்பதிகள்.**

## தமிழீழ நிர்வாகசேவையின் வேலைவங்கி

யாழ்ப்பாணம்,மார்ச் 10
வடக்கு - கிழக்கு மாகாணத்தின் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் தமிழீழ நிர்வாக சேவையின் வேலைவங்கி விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.
விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப் பப்படிவங்களை மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பணிமனையில் பெற்று பூரணப் படுத்தி 'தமிழீழ நிர்வாக சேவை, நடுவப் பணியகம், 155 ஆம்கட்டை, பாரதிபுரம், கிளிநொச்சி' என்ற முகவரியிட்டு ஒப்படைக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-202)

## கருத்தரங்கு


யாழ்ப்பாணம்,மார்ச்10
ஞானோதயா கல்வி நிறுவனத்தின் அனுசரணையுடன் மானிப்பாய் பரிஸ் லியோ கழகத்தினர் ஜீ.சி.ஈ. உயர்தரத்தில் தமிழ் பாடத்துக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளனர்.
இக்கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.
இதில் யாழ்.பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர்கள் கருத்துரை நிகழ்த்துவர். (எ-202)

## தியான வகுப்பு ஆரம்பவிழா

கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் ஆதரவுடன் சிவலிங்க யோககேந்திரா நிலையத்தினர் நடத்தும் யோகாசன தியான வகுப்புகளின் ஆரம்பவிழா எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளன.
சிவலிங்க யோககேந்திரா நிலையச் செயலாளர் சி.சோதிமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் அறிமுகவுரையை யோககேந்திரா நிலையப் பொருளாளர் சி.சசீவன் நிகழ்த்துவார். (எ-202)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 11 - 06 - 1927



இறப்பு 08 - 02 - 2006

திருமதி
**சுப்பிரமணியம் பாக்கியம்**

**அம்மா! அம்மா! எங்கள் அம்மாவே!**
**எம்மை விட்டு இறைவனடி சேர்ந்தீர்களே!**
**இனி அம்மா என்று யாரை அழைப்போம்!**
**உடல் அழிந்ததே தவிர உயிர்**
**என்றும் எம்முடன் வாழும் அம்மா!**

இன்று (10-03-2006) வெள்ளிக்கிழமை எழுது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் நினைவில் வாழும்:
கரந்தன், நீர்வேலி மேற்கு, நீர்வேலி.
(47834)(26.19.16)
கணவர்,பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# நிஜம் நிழலாகி ஓராண்டு நிறைவு நாள்

விட்டு விடும் - ஆவி
பட்டு விடும் - மேனி
கைவிட்டு விடும் - உறவு
சுட்டு விடும் - நெருப்பு
இதுவே சூனியத்தின் - நிலைப்பு

எம் இதயம் இயங்கும் வரை உங்களின்
பசுமையான நினைவுகள்
என்றென்றும்எம்முடனே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும்
பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



அமரர்
## சிவசங்கரன் கணேசராஜா

திதி: பூர்வ பக்க ஏகாதசி

அம்மாவின் கரங்களில் 16.04.1962
அம்மாவின் ஆத்மாவோடு கலந்தது 19.02.2005

உரிமையாளர்:-
**கணேசன் களஞ்சியம்**
திருநெல்வேலி.
**கணேசன் ரேடர்ஸ்**
கொழும்பு-6.

கணேசன்னை களஞ்சியம்,
திருநெல்வேலி சந்தை,
திருநெல்வேலி.

அமரரின் குடும்பத்தினர்.

(சி/48243)(26.19.16)



ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்ட உள சமூக உதவியாளர்களாக ஆசிரியர்களை பயிற்றுவித்தலுக்கான பயிற்சிப் பட்டறையின் நிறைவு நாளும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நேற்றுப் பிற்பகல் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் த.மகாசிவம் மங்களவிளக்கேற்றுவதையும் ஆழிப்பேரலை மீள் நிர்மாணம் சர்வதேச கல்வியகத்தின் இணைப்பாளர் பசில் டி.சில்வா, கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை அதிபர் ஆ.சிறிஸ்கந்த மூர்த்தி ஆகியோர் ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களை வழங்குவதையும் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றியவர்களையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்-பிரபா)*

## கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,மார்ச் 10

பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடத்தின் திறப்பு விழா நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் வீ.மீனேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வடக்கு - கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளர் சி.ரங்கராஜா பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். (த-204)

## கட்டுத்துவக்கு வெடித்து குடும்பஸ்தர் மரணம்

தென்மராட்சி,மார்ச்10

கட்டுத்துவக்கு வெடித்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலியானார்.இச் சம்பவம் நேற்று அதிகாலை மிருசுவில் விடத்தற்பளையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கனகரத்தினம் அமலதாசன் (வயது 32) என்னும் ஒரு பிள்ளையின் தந்தையே பலியானார்.

அதிகாலைவேளையில் இயற்கைக் கடனுக்காக பற்றைக்குள் சென்றவேளையில் பன்றிக்காக வைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு வெடித்து காலில் காயமேற்பட்டதாகவும்-

வாகனம் ஒன்றில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளையில் அவர் மரணமானார் என்றும்- சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலீஸ் நிலைய அத்தியட்சகர் திலகரத்தினவின் பணிப்பின் பேரில் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் கெட்டியாராட்சி, பிரேமரத்தினஅடங்கிய பொலீஸ் குழு சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன் - மேலதிக விசாரணைகளையும் நடத்திவருகின்றது. (3-7-15-31-117-149-203)

## கச்சதீவு வரும் தமிழக யாத்திரிகள் பறவைகளை எடுத்துவரத் தடை

நல்லூர்,மார்ச் 10

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தில் கலந்துகொள்ளவரும் தமிழக யாத்திரிகள் தமது உணவுக்காக பறவைகள் எதனையும் எடுத்து வரவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி ஆலயத் திருவிழா நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இத்திருவிழாவில் இலங்கையைச் சேர்தவர்கள் மட்டுமன்றி தமிழகத்தைச் சேர்ந்த யாத்திரிகள் பலரும் கலந்துகொள்வது வழமை.

கடந்த வருடம் நடைபெற்ற திருவிழாவில் இலங்கையைச் சேர்ந்த 600 பேரும் தமிழகத்தைச் சேர்ந்த 803 பேரும் கலந்துகொண்டிருந்தனர்.

இவ்வருடம் அதிகளவான யாத்திரிகர்கள் கலந்துகொள்ளலாம் எனவும் பாம்பன் பங்குத் தந்தை அருட்திரு. அமலராஜ் அடிகள் தெரிவித்தார்.

இவ்வருடம் பறவைக்காய்ச்சல் பீதி ஏற்பட்டுள்ளதை அடுத்து தமிழகத்திலிருந்து இத் திருவிழாவுக்கு வருவோர் பறவைகள் எதனையும் கொண்டு வர வேண்டாம் என கேட்கப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக இந்தியத் தரப்புக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-111)


## என்றும் நன்றிகள் கூறுகின்றோம்

கடந்த மாசி மாதம் 19ஆம் நாள் (03.03.2006) வெள்ளிக்கிழமை சுதுமலை அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற எமது சிவாச்சார்யாபிஷேகத்திற்கு எமது அழைப்பையேற்று வருகைதந்து, ஆசிகள் வழங்கிய பிராம்மண சிரேஷ்டர்களுக்கும் உறவினர்களுக்கும் தர்மசாஸ்தா குருகுல அதிபருக்கும் சாதகர்களுக்கும் வேத பாராயணம் செய்தோருக்கும் அன்பு நிறைந்த நண்பர்களுக்கும் மதிப்புக்குரிய கல்விமான்களுக்கும் ஆலய மண்டபத்தைத் தந்து பல உதவிகளும் ஒத்தாசைகளும் புரிந்த சுதுமலைஅம்பாள் ஆலய தர்மகர்த்தா சபையினருக்கும் உதவிகள் பல செய்த கல்லூரி அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அன்புக்குரிய சுதுமலை வாழ் ஊர்மக்களுக்கும் வாழ்த்துப்பா தந்து கௌரவப்படுத்திய ஈஞ்சடி வாழ் மக்களுக்கும் இரண்டு நாள்களும் மங்கள இசை வழங்கியோர்களுக்கும் ஒலி அமைப்பு, படப்பிடிப்பு, அலகாரப் பொருள்கள் ஆகியவற்றைத் தந்துதவியவர்களுக்கும் தமது அன்பையும் வாழ்த்தையும் நேரில் தெரிவித்தவர்களுக்கும் தொலைபேசி, தொலைநகல், கடிதம் மூலம் வாழ்த்தைத் தெரிவித்தவர்களுக்கும் பத்திரிகைமூலம் செய்தியும், வாழ்த்தும் தெரிவித்த ரஞ்சிதா மெடிக்கல் சென்ரர் உரிமையாளர்களுக்கும் கொழும்பு ஸ்ரீ வித்தியாபீடத்தினருக்கும் மற்றும் ஏனைய பல உதவிகளும் ஒத்தாசைகளும் புரிந்து எம்மை கௌரவப்படுத்தி சிவாச்சார்யாபிஷேகத்தை சிறப்பித்த அனைவருக்கும் என்றும் எமது நமஸ்காரங்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
சுதுமலை, மானிப்பாய்.

*சிவஸ்ரீ ச.சர்வேஸ்வரக் குருக்கள்,*
*ஸ்ரீமதி ச.காதம்பரி*

(47869)(18-34-12)


## காசி குண்டு வெடிப்பை வித்தியாபீடம் கண்டிக்கிறது

யாழ்ப்பாணம்,மார்ச்10

இந்து மக்களின் புனித தலங்களில் ஒன்றான காசி விஸ்வநாதர் ஆலயத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் ஈனத்தனமானது என ஸ்ரீ வித்தியாபீடம் கண்டித்துள்ளது.

அந்தப் பீடத்தினர் விடுத்துள்ள அறிக்கையிலேயே கண்டித்துள்ளது.அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உலகில் உள்ள இந்து மக்களால் மிகவும் புனிதமாகப் போற்றப்படுகின்ற திருத்தலங்களுள் ஒன்றான காசி விஸ்வநாதர் ஆலயம் மிகவும் விசேடமானது. இந்த திருத்தலப் பகுதிக்குள் குண்டுகளை வெடிக்கவைத்து பக்தர்கள் பலியானதும் மிகவும் மனவேதனைக்குரியதுமான செயல். இந்தச் செயலை புரிந்தவர்கள் மிகவும் ஈனத்தனமானவர்கள்.

திருமண வைபவம் ஒரு புறம்,ஆன்மீக பக்தி நெறியில் ஈடுபட்டோர் மறுபுறம் இவ்வாறான சூழ்நிலையில இந்தக் குண்டு சூத்திரதாரிகள் மிகவும் ஈனமான செயலையே செய்துள்ளார்கள்.சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை பெறச் செய்வது இந்திய அரசின் கடமையாகும் - என்றுள்ளது. (3)


### வேலை வாய்ப்பு

**COMPUTER TYPIST**

பொருத்தமானவர்கள் நேரில் நாளை (11.03.2006) சனிக்கிழமை முற்பகல் 10-12 மணிக்கு இடையில் நேரில் வருக.

*இடம் : சுந்தர் வெளியீடு,*
*844,ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(47871) **TP.:021 222 7086**

### PHYSICS

**A/L 2008,07,06**

MR.KIRUPA B.Sc. (Hons)

06-PAPER sat.,sun.-5.30 pm
07-FIELDS sat.,sun.-4.00pm

❖CHE.- MR.MAHILNAN B.Sc.
❖C/MATHS-MR.KARTHI

❖ A/L 2008 கலை,வர்த்தக,விஞ்ஞான, கணித புதிய பிரிவுகள் ஆரம்பம்.

SHAMROCK,
J/EACHCHAMODDAI

(அ-48245)

### நாகம்ஸ் சுன்னாகம்

*விஜய், திரிஷா நடித்த*

**சிவகாசி**

பு.நே. 11.00, 3.00, 7.00

### ராஜா யாழ்ப்பாணம்

சத்தியராஜ், சிபிராஜ், நமீதா நடித்த

**கோவை பிரதர்ஸ்**

பு.நே. 10.30, 1.30,4.30 , 7.30

### நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
அக்ஷன் கிங் அர்ஜுன் , கஜாலா , விவேக் நடித்த

**மதராஸி**

பு.நே.: 10.00, 1.30, 4.30


## தமிழீழ அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு:-

✱ இயல் - 01 - பொது விளங்கங்களையும் -

✱ இயல்02 - தமிழீழத்தில் காணப்படும் குடியிருக்கக்கூடிய காணிகளை இனங்கண்டு அவற்றைக் காணியற்றோருக்கு பகிர்ந்தளிப்பதையும், காணியற்றோர் அடாத்தாகப் பிடித்துள்ள காணிகளை அவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதையும் காணியுள்ளோர் அடாத்தாகப் பிடித்துள்ள காணிகளை மீளவும் தமிழீழ அரசுக்கு உரிமையாக்குவதையும் -

✱ இயல் 03 - தமிழீழத்தில் காணப்படும் பயிர்ச்செய்கை செய்யக்கூடியதாக இனங்காணப்பட்ட காணிகளை பயிர்ச்செய்கையில் ஈடுபடும் காணியற்ற விவசாயிகளுக்கு வழங்குவதையும் -

✱ இயல் 04 - தமிழீழ அரசுக்கு உரியதாக ஒதுக்கப்பட்டுள்ள காணிகளைத் தனியாருக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக் கும் அரச நிறுவனங்களுக்கு, ஏல முறையில் முன்னுரிமை அடிப்படையில் பாட்டத்துக்கு (குத்தகை) வழங்குதலையும் அரச காணிகளை அடாத்தாகப் பிடித்துள்ளோருக்கு அந்தப் பகுதிகளை பாட்டத்துக்கு வழங்குதலையும் -

✱ இயல் 05 - பொதுத் தேவைக்கு காணிகளை ஒதுக்கீடு செய்வதையும், ஒதுக்குக் காணி ஒதுக்கப்படுவது பற்றியும் அதனை வேளாண் செய்கைக்கு மட்டுமென வழங்கப்படுவதையும் -

✱ இயல்06 - இச்சட்டத்தில் விதந்துரைக்கப்பட்டவாறு காணிகளைப் பகிரிந்தளிக்கும் போது அரச காணிகளாக அரசு அறிக்கை செய்த காணிகள் அரச, பொது நிறுவனங்கள், சபைகள் என்பவற்றிற்குப் பயன்படுத்தி தற்போது மேற்படி தேவைகளுக்கு காணிகள் இன்றியமையாததாக தேவைப்படும் போது கையகப்படுத்துவதையும் -

✱ இயல் 07- இச்சட்டத்தின் கீழ் காணிகள் பகிர்ந்தளிக்கப்படத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு காணித்துண்டுகளை தெரிவு செய்யும் முறைகளையும் -

✱ இயல் 08 - புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்வோரின் காணிகளை அவர்களிடமும் அவர்கள் விரும்பும் உதிர உறவு முறையானவர்களிடம் கையளித்தலையும் -

✱ இயல் 09 - காணிகள் விற்கப்படும் போது காணிகளின் ஆகக்கூடிய விலையை வரையறை செய்வதையும் இவ்வியல்களின் மீதான நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்துகின்றதாக அமையப்பெற்றுள்ளது.

இப்படி நீதி, நிர்வாகத்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-3)

## குடாநாட்டில் மார்ச், ஏப்ரல் மாதங்களில் இடிமின்னலுடன் மழை பெய்யும்

### வானிலை அவதான நிலையம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 10

குடாநாட்டில் மார்ச், ஏப்ரல் மாதங்களில் இடி மின்னலுடன் கூடிய மழை பரவலாகப் பெய்யும் என திருநெல்வேலி வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் மாதம் சூரியன் இலங்கைக்கு மேல் உச்சத்தில் வருவதால் இம்மாதம் தொடக்கம் அடுத்த மாதம் வரையிலான காலப்பகுதியில் இடையிடையே மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றும் - அத்துடன், இலேசான காற்றும் வானம் மப்பும் மந்தாரமுமாகக் காணப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் நேற்றுவரை 119.04 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதேவேளை - இடி மின்னலுடன் கூடிய மழைபெய்யும் போது பொதுமக்கள் இலத்திரனியல் சாதனங்களைப் பாவிப்பதை தவிர்க்குமாறும் வானிலை ஆராய்ச்சி நிலையம் கேட்டுள்ளது. (3-7)


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி வடிவேலு



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கரம்பொன் கிழக்கு, காளி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வடிவேலு அவர்கள் 07.03.2006 செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டையில் காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் (கமலம்) அன்புக் கணவரும் கமலவேலு, கமலநாதன் (நாதன்), கமலவதனி(வவி), கமலேந்திரன் (ரகு), காலஞ்சென்ற கமலவரதன்(வரதன்), கமலபாலினி(பாலினி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரா, சாரதாமணி, சித்ரானி, வில்லியம்வையிலர் (செல்வன்) ஆகியோரின் மாமனும் காயத்ரி, ஹஸ்தனி, அஸ்வினி, துஷானி, துஷிதா, துஷாந், துஷானா, சபிதன், சபிக்கா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(10.03.2006)வெள்ளிக்கிழமை அவரது வட்டுக்கோட்டை இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் நவாலி வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நல்லமாவடி ஒழுங்கை,*
*மூளாய் வீதி,*
*வட்டுக்கோட்டை.*
*0779894693*

தகவல்:
குடும்பத்தினர்.

(47863)(18-34-12)

# தென்னிலங்கையி[illegible]வினையை ஏற்படுத்த மனோ கணேசன் எம்.பி. தூபம் போடுகிறார்

## ஹெல உறுமய கட்சி சாடல்

கொழும்பு, மார்ச் 10

"தென்னிலங்கையில் வாழும் தமிழ் மற்றும் சிங்கள மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் வகையில் தூபம்போடும் முயற்சியில் மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனின் பேச்சு அமைந்துள்ளது."- என ஜாதிக ஹெல உறுமயவினர் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

இலங்கையில் வாழும் அனைத்து தமிழர்களின் பிரச்சினைகளையும் அடுத்தகட்ட சமாதான பேச்சுகளில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும்- சமாதானப் பேச்சுகள் வடக்கு- கிழக்கில் வாழும் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படக்கூடாது என்றும் மனோ கணேசன் கூறியுள்ளார். மேலும் அவர் வடக்கு-கிழக்குக்கு வெளியே வாழும் தமிழர்களும் இனரீதியான மற்றும் மொழி ரீதியான பிரச்சினைகளுக்கும் பாரபட்சங்களுக்கும் உள்ளாக்கப்படுவதால் அனைத்து தமிழர்களின் குறைபாடுகளையும் சமாதானப் பேச்சுகளில் கவனத்திலெடுக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

எனினும், மேலக மக்கள் முன்னணியின் இந்தக் கருத்தை ஜாதிக ஹெல உறுமய எதிர்க்கின்றது. மனோ கணேசன் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் முரண்பாட்டை ஏற்படுத்துகின்றார்.

வடக்கு - கிழக்கிற்கு வெளியே தென்னிலங்கையில் வாழும் தமிழர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் அனைத்து இனத்தவர்களுக்கும் பொதுவானவையாகும். அவை வறுமையாலும், வளங்கள் முறைகேடாகப் பகிரப்படுவதாலும் ஏற்பட்டவையாகும்.

இவைஇனம்,மொழி ஆகியவற்றுடன் தொடர்பற்றவையாகும் மனோ கணேசனின் கருத்துகள் பிரச்சினைகளைத் தீர்ப்பதைவிட நீடிப்பதற்கே உதவுகின்றன. உண்மையில் இந்நாட்டில் இனப்பிரச்சினை நிலவுகின்றது என்ற மேலக மக்கள் முன்னணியின் நிலைப்பாட்டையே நாம் முற்றுமுழுதாக நிராகரிக்கிறோம். நாட்டை பயங்கரவாதத்தின்மூலம் பிரிப் பதற்கான ஒரு முயற்சியே இங்கு நடைபெறுகின்றது"- என ஹெல உறுமயவினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மனோ கணேசன் பேசுவதில் மட்டும் கவனத்தைச் செலுத்துகிறார். அவரின் பேச்சுகள் எடுபடமாட்டாது எனவும் ஹெல உறுமயவின் பேச்சாளர் நிசந்த வருணசிங்க மேலும் தெரிவித்தார். (க-3)

## மு.காவின் வேட்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டமை செல்லுபடி ஆகாது என்றும் அவற்றைப் போட்டிப் பட்டியலில் ஏற்றுக்கொள்ளுமாறும் தேர்தல் ஆணையாளருக்கு நேற்று உத்தரவு பிறப்பித்தது.

இவ் உத்தரவின் அமுல் தொடர்பாக எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன் நீதிமன்றத்தின் கவனத்திற்குத் தேர்தல் ஆணையாளர் கொண்டு வரவேண்டும் என்றும் அதுவரை தேர்தலுக்கான ஏற்பாடுகளை குறிப்பிட்ட 12 உள்ளூராட்சி மன்றங்களில் நிறுத்தி வைக்கும்மாறும் நீதிமன்றம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 12 உள்ளூராட்சி சபைகளுக்குத் தாக்கல்செய்த வேட்பு மனுக்கள் தேர்தல் ஆணையாளரின் உத்தரவின்படி மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டிருந்தன. இதனை ஆட்சேபித்தே கட்சியின் செயலாளர் ஹஸன் அலி நேற்றுமுன்தினம் 12 ஆட்சேபனை மனுக்களைத் தனித்தனியாகக் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்தார்.

இந்த மனுக்கள் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் கே.ஸ்ரீபவன் மற்றும் ஆப்ரூப் முன்னிலையில் விசாரிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் சட்டத்தரணி ஜீ.ஜீ. அருள்பிரகாசம் அனுசரணையில் ஜனாதிபதி சட்டத்தரணி றொமெஷ் டி சில்வா, நிசாம் காரியப்பர் மற்றும் இக்ரம் முகம்மட் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். தேர்தல் ஆணையாளர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனதாஸன் ஆஜரானார்.

ஸ்ரீ.மு.கா. சார்பில் வாதாடிய சட்டத்தரணி றொமெஷ் டி சில்வா பல சட்டக் குறைபாடுகளை சுட்டிக் காட்டி வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கு எதிராக வாதாடினார்.

இரு பக்க விவாதங்களையும் செவிமடுத்த நீதிபதிகள் வேட்பு நிராகரிக்கப்பட்டமை செல்லுபடி யற்றது என்று தெரிவித்தனர்.

இம்மாதம் 13ஆம் திகதிக்கு முன் தேர்தல் ஆணையாளர் வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்வது தொடர்பாக நீதிமன்றிற்கு அறிவிக்க வேண்டும் எனவும், அதுவரை சம்பந்தப்பட்ட 12 உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் நடவடிக்கைகளை இடைநிறுத்தி வைக்குமாறும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

13ஆம்திகதி தேர்தல் ஆணையாளர் வேட்பு மனுக்களை ஏற்பதாகக் கூறினால் இந்த வழக்கு இத்தோடு முடிந்து விடும் எனவும், ஏற்க மறுத்தால் அந்த உள்ளூராட்சி சபைகளில் தேர்தல் நடத்தத் தடை விதிப்பதற்கு விவாதம் நடத்தப்படும் எனவும் நீதிபதிகள் கூறினர். (க-3)

## குடாநாட்டில் சில...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை (வெள்ளிக்கிழமை) முதல் தொழில் செய்ய அனுமதி வழங்கப்படும் என்றும் -

இது தொடர்பான அறிவுறுத்தல்கள் வெள்ளி முற்பகல் அந்த அந்த இடங்களில் வைத்து வழங்கப்படும் என்றும் - ஜனாதிபதி தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தக்கூடிய சூழல் நிலவவில்லை.

ஆகவே, தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று கூட்டமைப்பு எம்.பிக்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

அந்த மாவட்டங்களின் அரச அதிபர்கள் மற்றும் தேர்தல் ஆணையாளர், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடி சாதகமான முடிவை எடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தராக ஜீவன் ஹூல் நியமனம் செய்யப்பட்டதால், பல்கலைக்கழக சமூகத்தில் எழுந்துள்ள கொந் தளிப்பு நிலை குறித்தும் ஜனாதிபதியிடம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஜெனீ வாவில் இருந்து திரும்பும் போது கட்டு நாயக்க விமான நிலையத்தில் வைத்து சோதனை நடவடிக்கைக்கு உட்படுத்தித் தாமதமாக அனு மதித்தமை குறித்தும் ஜனாதிபதிக்கு எடுத் துக் கூறப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர் அனுமதியில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும். பாதிப்புக் குறித்து கல்வியமைச்சர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினர் ஆகியோரு டன் கலந்துரையாடித் தீர்வைக் காணலாம் என ஜனாதிபதி ஆலோசனை கூறினார். (3)

## கூட்டுப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்பின் யாழ் குடாநாட்டின் தற்போதைய நிலைமை பற்றியும் இராணுவத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் கூட்டுப்படைகளின் தளபதியும் இராணுவத் தளபதியும் இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுகளை நடத்தினர். இப்பேச்சுகள் எழுதுமட்டுவாள் பிரதேசத்தில் நடைபெற்றது.

இதேவேளை, முன்னணிக் காவலரண்களில் கடமைபுரியும் இராணுவத்தினரின் நலன்களை பேணுவதில் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்றும் கூறிய அவர்கள் இதுபற்றி அதிகம் கவனம் செலுத்தினர். இறுதியில் முகமாலை பிரதேசத்தில் அமைந்திருக்கும் நுளைவாயில் கடமையில் இருக்கும் இராணுவத்தினரை பார்வையிட்டதுடன் பொருள்கள் ஏற்றி இறக்குவதையும் பார்வையிட்டனர். அப்பிரதேசத்தில் அமைந்திருக்கும் காவல் அரண்கள் சிலவற்றையும் கண்காணித்தனர். (க-3)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

ஜெனீவாவில் பேச்சுவார்த்தை இடம் பெற்றதற்குப் பின்னர் கல்விக் கூடங்களில் மாணவர்கள் கல்வி கற்கும் நேரங்களில் இராணுவத்தினர் தமது நடவடிக்கைகளை நிறுத்தி வருகின்றார்கள்.

இராணுவத்தினர் மாணவர்களை புகைப்படம் எடுப்பதாகவும் வீடியோ பிடிப்பதாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. இப்வாறான செயற்பாடுகளில் இராணுவத்தினர் ஈடுபடுவதில்லை.

பிராந்திய இராணுவத் தளபதியோடு மாணவர்கள் பேச்சு நடத்தி தீர்வுகளைக் காணலாம்.

நாட்டின் சுமுகமானதொரு நிலமை ஏற்படும் வரை படையினர் தமது செயற்பாட்டை நிறுத்த மாட்டார்கள் இப்படி அவர் தெரிவித்தார். (க-3)

## பஸ்ஸில் பயணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீற்றர் ரக பிஸ்ரலினாலேயே இந்த இளைஞரைச் சுட்டுக் கொன்றுள்ளார்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்டவர் ஆறுமுகத்தான் குடியிருப்பு, கோயில் வீதியைச் சேர்ந்த 21 வயதான கோவிந்தன் விஜயராஜா என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகத்தின்போது பஸ்ஸில் பயணித்துக்கொண்டிருந்த கல்குடா பட்டியடிச்சேனையினைச் சேர்ந்த தம்பிமுத்து அண்ணாத்துரை என்பவர் படுகாயமடைந்துள்ளதுடன், கல்குடாவைச் சேர்ந்த பொன்னுச்சாமி மாணிக்கம் (வயது 55) என்ற பெண்ணும் காயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-3)

## ஜே.வி.பியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:-

ஓர் அரசியல் கட்சி என்ற வகையில் சமாதானப் பேச்சு தொடர்பாகவோ அல்லது வேறு பிரச்சினைகள் தொடர்பாகவோ கருத்துகளை அல்லது விமர்சனங்களைத் தெரிவிக்கும் உரிமை ஜே.வி.பிக்கு உண்டு.

அவர்கள் கூறும் விமர்சனங்களுக்காக அரசின் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் அரசுக்கு இல்லை. இந்த விமர்சனங்கள் ஒன்றும் அரசுக்குப் புதிதல்ல.

ஜெனீவாப் பேச்சின்போது கூட, அரசின் சார்பில் கலந்துகொண்ட சிலர் தமது கட்சியின் சார்பில் சில விமர்சனங்களை முன்வைத்தார்கள். அவற்றை அரசு கருத்தில் கொள்ளவில்லை.

ஜெனீவாப் பேச்சு முடிவுற்றதும் ஜே.வி.பியினர், அது தொடர்பான விமர்சனங்களைத் தெரிவிக்கின்றனர். விமசர்சனங்களைத் தெரிவிக்க அரசு எவருக்கும் இடமளிக்கும். ஆனால், அரசின் அடிப்படைக் கொள்கைக்கு மாறான விடயத்தை ஒருபோதும் அரசு ஏற்காது.

நோர்வேயை அனுசரணைப் பணியில் இருந்து விலக்க வேண்டும் என ஜே.வி.பி. கூறிவருவதற்காக அரசு நோர்வே தொடர்பான தனது நிலைப்பாட்டை ஒருபோதும் மாற்றாது.

இப்படி அவர் மேலும் கூறினார். (க-3)

## சில அமைச்சுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகிறது.

நாட்டுக்குப் பயன்தரக்கூடிய வகையில் செயற்பட வேண்டிய சில அமைச்சுகள் தனது நோக்கத்திலிருந்து விலகுவதனாலும் மஹிந்த சிந்தனை செயற்திட்டத்திற்கு மாறாக செயற்படுவதனாலுமே அமைச்சரவையில் மாற்றங்களை மேற்கொள்ள ஜனாதிபதி தீர்மானித்திருக்கிறார் என்றும் கூறப்படுகிறது. (க-3)

## ஆனையிறவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கப்படுகின்றன எனவும் இது சட்டவிரோதமானதொரு நடவடிக்கை எனவும் பாதுகாப்புத்தரப்பினர் குற்றஞ்சுமத்தியுள்ளனர். (க-3)

## இரத்தினபுரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயரமான மண்மேடொன்றை வெட்டிய போதே மண்சரிவு ஏற்பட்டது. இதில் புதையுண்ட நபர், அப்பகுதி மக்களால் காப்பாற்றப்பட்டு இரத்தினபுரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபின்னரே உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-3)

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் சின்னத்தம்பி

**(முன்னாள் உபஅதிபர்,நாமகள் வித்தியாசாலை)**

மாணிக்கம் சின்னத்தம்பி (முன்னாள் உபஅதிபர்,நாமகள் வித்தியாசாலை, கொக்குவில்) அவர்கள் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சரஸ்வதி சின்னத்தம்பி
(முன்னாள் ஆசிரியை, கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்)
நெட்டிலிப்பாய் கோயிலடி,
கோண்டாவில் மேற்கு.
(அ-48257)

IIS
விசேட பிரிவுகள் ஆரம்பம்
Eng. Drawing & Auto CAD
14.03.2006 (10.00மணி)
மாணவர்கள், உத்தியோகத்தர்களின் வசதிகளுக்கேற்ப வகுப்புகள் ஒழுங்கு செய்து தரப்படும்
இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்

பொருளியல்
M. விக்கி B.A.(ECon-Spl) Hons Dip. in Ed.
A/L 2007 / 2008
பேரினப் பொருளாதாரம் - 2007
ஆரம்பம்: 12-03-2006
நேரம்: 12.00 - 1.00 (ப.நே)
Paper Class 2.00- 4.00
BEACON யாழ் நகர்.

2007 A/L
பகுதி II
பொருளியல் S.S. ஸ்ரீ
கணக்கீடு M.சசிரூபன்
ஆரம்பம்: 11-03-2006
சனி 9.00 a.m.
C.C.A. சுன்னாகம்

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

இப்பத்திரிகை நியூ உதயன் [illegible] (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.03.2006இல் அச்சிட்டு வெளி[illegible]பெற்றது.




மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமான தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும்

வெளியீடு 04

# புலமைப்பரிசில் பரீட்சை

## மாதிரி வினாப்பத்திரம்


45 நிமிடங்கள்

திரு.P. அம்பிகைபாகன் - கொழும்பு.

**சரியான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1. இவ்வுருவிலுள்ள சதுரங்களின் எண்ணிக்கை 09. இவ்வுருவிலிருந்து பெறக்கூடிய சதுரங்களின் ஆகக்கூடிய எண்ணிக்கை 14 இதேபோல்





இவ்வுருவிலுள்ள முக்கோணிகள் எத்தனை? ......................
இவ்வுருவிலிருந்து பெறக்கூடிய அதிகளவு முக்கோணிகள் எத்தனை? ......................


2. இவ்வுருவிலிருந்து இடமிருந்து வலமாக 4 சொற்களைப் ஆக்க கம்பம் எனும் சொல்லைப் பயன்படுத்தலாம்.

| | | |
|---|---|---|
| ச | | ம் |
| த | | ரி |
| சு | | ம் |
| அ | | மி |

இதேபோல் இவ்வுருவிலிருந்து மேலிருந்து கீழாக 4 சொற்களை ஆக்க கருத்துள்ள ஒரு சொல் தேவை. அச்சொல் அண்ணா எனும் சொல்லுடன் கருத்துப் பொருந்தக்கூடியது. அச்சொல்லை எழுதுக.

..................................

3. மூன்று எண்கூடுகளை அவதானித்து நான்காவது கூட்டைப் பூர்த்திசெய்க.




4. ஐந்து நிகழ்வுகள் A,B,C,D,E என வரிசைக்கிரமத்தில் காட்டுவதற்கு A,C,E, யில் வரவேண்டியதைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

A.................................. B. ஆசனத்தில் அமர்ந்தேன்
C.................................. D. விறைப்பு ஏற்பட்டது.
E..................................

01. A.வீட்டிற்குப் போனேன்.
C. சீட்டு வாங்கினேன்.
E. சிகை வெட்டினார்கள்

02. A.அறையினுள் சென்றேன்.
C. ஊசிமருந்து ஏற்றினார்கள்
E. பல்லைக் கழற்றினார்கள்

03. A. பஸ்சில் ஏறினேன்.
C. பயணம் செய்தேன்.
E. கீழே இறங்கினேன (....................................)

5. B,D யில் வரவேண்டியதைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

A. புத்தகத்தை எடுங்கள். B. ..................................................
C. பயிற்சிகளைச் செய்யுங்கள் D..................................................
E. புள்ளிகள் வழங்குவேன்

1. B. படம் பாருங்கள்.
D. கிழித்துப் போடுங்கள்

2. B. பயிற்சிகளைச் செய்யுங்கள்
D. கொண்டு போங்கள்

3. B. பாடத்தைப் படியுங்கள்.
D. கொண்டு வாருங்கள். (........................................)

*பாடலை வாசிக்கவும்.*

தம்பி தம்பி கடலைப் பார்
பரந்து கிடக்கும் நீரைப் பார்
தாவிக்குதிக்கும் அலையைப் பார்
தரையில் பொங்கும் நுரையைப் பார்
கடலில் துள்ளும் மீனைப் பார்
கப்பல் அசையும் அழகைப்பார்
மீனைப் பிடிக்கும் வலையைப் பார்
மூழ்கிக் கிடக்கும் முத்தைப் பார்

6. சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதவும்.
   1. அப்பாடலில் பார் எனும் சொல் எத்தனை தடவைகள் வருகின்றன? ................
   2. கடலிற் பயணம் செய்ய உகந்தது எது? ..........................................
   3. அலை ஏற்படுவதற்கான காரணம் என்ன? ..........................................
   4. கடல்நீரைக் குடிநீராகப் பயன்படுத்த முடியாமைக்கான காரணம் என்ன? ..........................................
   5. கப்பலைச் செலுத்துபவர் யார்? ..........................................

7. சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதவும்.
   1. காசோலை மாற்றுவது எங்கே? ..........................................
   2. இரத்தினக் கல்லுக்கு பிரபலமான இடம் எது? ..........................................
   3. பாம்பை வசியம் பண்ண பயன்படுவது எது? ..........................................
   4. நாய் நன்றியை எவ்வாறு தெரியப்படுத்தும்? ..........................................
   5. மனிதர் நாயை வளர்ப்பதன் முக்கிய நோக்கம் என்ன? ..........................

ஒரு பிள்ளை தனது வீட்டிலிருந்து விளையாட்டு மைதானத்திற்குச் சென் றது. வீட்டிலிருந்து விளையாட்டு மைதானத்திற்கான தூரம் வீட்டிலிருந்து பாடசாலைக்கான தூரத்தில் இருமடங்காகும். வீட்டிலிருந்து பாடசாலைக் கான தூரம் வீட்டிலிருந்து வாசிகசாலைக்கான தூரத்தில் இருமடங்காகும். வீட்டிலிருந்து சந்தைக்கான தூரம் 8 கிலோமீற்றர்கள் ஆகும். வீட்டிலிருந்து சந்தைக்கான தூரம் வீட்டிலிருந்து விளையாட்டு மைதானத்திற்கான தூரத் தின் இருமடங்காகும்.

8. இதற்கேற்ப பின்வருவனவற்றில் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
   1. வீட்டிற்கும் பாடசாலைக்கும் சரிநடுவில் வாசிகசாலை உள்ளது.
   2. பாடசாலைக்கும் சந்தைக்கும் சரிநடுவில் விளையாட்டு மைதானம் உள்ளது.
   3. வீட்டிற்கும் விளையாட்டு மைதானத்திற்கும் சரிநடுவில் பாடசாலை உள்ளது.
   4. வீட்டிற்கும் சந்தைக்கும் சரிநடுவில் மைதானம் உள்ளது.

9. பின்வருவனவற்றில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.
   1. வீட்டிலிருந்து வாசிகசாலைக்கான தூரம் 2 கிலோமீற்றர்கள் ஆகும்.
   2. வாசிகசாலையிலிருந்து விளையாட்டு மைதானத்திற்கான தூரம் 2 கிலோ மீற்றர்களாகும்.
   3. வீட்டிலிருந்து பாடசாலைக்கான தூரம் 2 கிலோமீற்றர்கள் ஆகும்.
   4. விளையாட்டு மைதானத்திலிருந்து சந்தைக்கான தூரம் 2 கிலோ மீற்றர்கள் ஆகும்.

10. பின்வருவனவற்றில் பிழையான கூற்று இரண்டும், சரியான கூற்று இரண் டும் உள்ளன. பிழையான கூற்றில் ஒன்று பொருத்தமற்ற கூற்று அதனைத் தெரிவு செய்க.
   1. வீட்டிலிருந்து வாசிகசாலைக்கான தூரம் பிள்ளை சென்ற தூரத்தில் 1/4 ஆகும்.
   2. வீட்டிலிருந்து பாடசாலைக்கான தூரம் வீட்டிலிருந்து சந்தைக்கான தூரத்தின் 1/4 ஆகும்.
   3. வீட்டிலிருந்து விளையாட்டு மைதானத்திற்கான தூரத்தின் 1/3 பங்கே வீட்டிலிருந்து வாசிகசாலைக்கான தூரம் ஆகும்.
   4. வீட்டிலிருந்து சந்தைக்கான தூரம், கால்நடையில் செல்பவருக்கு 8km ஆகவும், துவிச்சக்கரவண்டியில் செல்பவருக்கு 4km ஆகவும் இருக்கும்.

11. கமலா முதலாவது கடிகார நேரத்தில் படிக்க ஆரம்பித்து இரண்டாவது கடிகார நேரத்தில் படித்து முடித்தாள், கமலா படித்த மணித்தியால, நிமிடங்கள் எவ்வளவு?



..................... மணித்தியாலம்.................நிமிடங்கள்

*பாடலை வாசிக்கவும்.*

வெள்ளை நிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளலடியிணைக்கு வாய்த்த
மலரெதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக்கமலமடி உத்தமனார்
வேண்டுவது.

12. வினாக்களுக்கான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதவும்.
   1. மல்லிகையின் நிறம் என்ன? ..........................................
   2. உத்தமர் எதை விரும்புவார்? ..........................................
   3. பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஒத்தகருத்துச் சொற்களை பாடலிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

   பெரிய பூ .......................................... மனம் ..........................................
   மிக நல்லவர்.............................. தாராளமாகக் கொடுப்பவர் ..........................
   4. பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலப் பதத்தை எழுதுக.

   வெள்ளை .......................................... பூ ..........................................
   மரம் .......................................... கறுப்பு ..........................................

13. கீழுள்ள வாக்கியங்களால் கூறப்படும் விடயத்தைக் குறிக்கும் ஒரு சொல் எழுதுக.
   1. ஒருவர் தன்னைத்தானே கொலை செய்து கொள்ளுதல் ......................
   2. கடவுள் இல்லை என்று கூறுபவன் ..........................................
   3. பொருளைத் தேவையின் போதும் பயன்படுத்தாது ஈயாது பதுக்கி வைத்திருப்பவன் ..........................................
   4. நூலாசிரியர் தமது நூல் பற்றி எழுதும் உரை ......................
   5. மனைவியை இழந்த ஆண்மகன் ..........................................
   6. அரச குடும்பப் பெண்கள் தங்கும் இடம் ..........................................

14. சரியான விடையின் கீழ் கீறிடுக.
   1. மாசடைந்த வளியை சுவாசிப்பதனால் தாக்கப்படும் மனித உறுப்பு எது?
   1. இருதயம் 2. மூக்கு 3. நுரையீரல் 4. இரப்பை
   2. உடல் வெப்பமானியில் பயன்படுத்தப்படும் திரவம் எது?
   1. இரத்தம் 2. இரசம் 3. மோர் 4. நீர்
   3. இலங்கையின் வடமத்திய மாகாண நகரம் எது?
   1. யாழ்ப்பாணம் 2. கிளிநொச்சி 3. அனுராதபுரம் 4. வவுனியா
   4. எவருக்கும் இரத்தம் வழங்கக்கூடிய பொது வழங்கியின் இரத்தவகை எது?
   1. **A** 2. **AB** 3. **B** 4. **O**
   5. இலங்கையின் கடல்மட்டத்திலிருந்து 30 மீற்றர் உயரம் வரையிலான பிரதேசம் எப்பெயர்கொண்டு அழைக்கப்படும்?
   1. கடற்கரை 2. கரையோரச் சமவெளி 3. தாழ்நிலப் பிரதேசம் 4. மலைப் பிரதேசம்

15. பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்களில் மிகச் சரியான வாக்கியத்தின் கீழ் கோடிடுக.

(1) 1.கதிரைகள் பலகைகளால் செய்யலாம், பலகைகள் கதிரைகளிலிருந்து பெறலாம்.
2. கதிரைகள் மரத்திலிருந்து பெறலாம், பலகைகள் கதிரைகளிலிருந்து செய்யலாம்.
3.பலகைகள் மரத்திலிருந்து பெறலாம், கதிரைகள் பலகைகளால் செய்யலாம்.
4.மரங்கள் கதிரையிலிருந்து பெறலாம், பலகைகளால் கதிரைகள் செய்யலாம்.

(2) 1. சீனி விலை கூடினால் தேநீர் விலை குறையும், தோசை விலை கூடினால் மா விலை கூடும்.
2. மா விலை கூடினால் தோசை விலை குறையும், தேநீர் விலை குறைந்தால் சீனி விலை குறையும்.
3. மா விலை கூடினால் தோசை விலை கூடும், சீனி விலை குறைந்தால் தேநீர் விலை குறையும்.
4. சீனி விலை குறைந்தால் தேநீர் விலை குறையும், தோசை விலை குறைந்தால் மா விலைகுறையும்.

பந்தியைத் தொடர்ந்து 6 வாக்கியங்கள் எழுதுக. **ஒவ்வொரு வாக்கியமும் 4 சொற்களுக்குக் குறையாது எழுவாய் பயனிலை சரியாக அமைந்திருத்தல் வேண்டும்.**

16. எங்கள் வீடு கடற்கரைக்கு அருகாமையில் உள்ளது. கடந்த வருடம் மார்கழி 26ஆம் திகதி காலை 9.00 மணியளவில் கடல் அலைகள் மேலே மூந்து ஆவேசத்துடன் வீசின. எமது வீட்டிற்குள் கடல்நீர் புகுந்துவிட்டது. அப்பா என்னைத் தூக் கினார். அம்மா தங்கையைத் தூக்கினார். எல்லோரும் உயர்ந்த கட்டடம் நோக்கி ஓடினோம்..........
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

(முற்றும்)

## விடைக் குறிப்புகள்

வெளியீடு 03

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

(தரம் 5 II இன் வினாக்கள் 03.03.2006 ஆம் திகதி வெளியாகியிருந்தன. அதன் விடைக்குறிப்புகள் இங்கே பிரசுரமாகின்றன.

(1) 1.உணவைத் 2.இறந்தகாலத்தை
3.வருகிறது 4.வனம்
5.செவிகள் 6.பென்னம்பெரிய
7.பகைவர்கள்/எதிரிகள் 8.காடுகளில்
9.பழங்களை 10.பழம்+ஒன்று
11.மளமள 12.துள்ளித்துள்ளி
13.**White** 14.**Rabbit**
15.**Eye** 16.**Tree**
17.பழம் 18.காதுகள்
19.உணவு 20.நண்பர்கள்

(2)
1.மரங்கொத்தி 2.பென்குயின்
3.மீன்கொத்தி 4.தீக்கோழி

(3)
1.1 2.2
3.3 4.4
5.3 (4 புள்ளி)

(4)
1.பிழை 2.சரி
3.பிழை 4.பிழை
5.சரி (5 புள்ளி)

(5)
1.சீப்புரு 2.நீரலை
3.கல்பித்து 4. தனியிழை
5.அரும்பு 6.சவடி (5 புள்ளி)

(6)
1.8540 பேர் 2.3972 சட்டைகள்
3.140 வளையல்கள் 4.324 மாம்பழங்கள்
(8 புள்ளி)

(7)
1.6 சென்ரிமீற்றர் 2.4 சென்ரிமீற்றர்
3.20 மில்லிமீற்றர் 4.(________)
(8 புள்ளி)

(8)
1.ஏ.தள்வாடி பி. நீர்
சி.சூரியஒளி டி.வர்ணஒளி
2.வானவில் 3.7
4.நீலம்,மஞ்சள்,கருநீலம் 5.வானவில்
(10 புள்ளி)

(9)
1.வைக்கோல் 2.சின்ன
3.செய்யப்பட்டது 4.வாள்
5.பவளவிழா (5 புள்ளி)

(10)
1.சிங்கம் 2.புலி
3.கிளி 4.கீரி
5.மயில் (5புள்ளி)

(11)
1.மேசய 2.நகிடின்ன
(2 புள்ளி)

(12)
1.தம்பி 2.அப்பா
(2 புள்ளி)

(13)
1.57 நீலநிற பலூன்கள் 2.475
3.42 ரூபா 50 சதம் 4.ஏ.கிலோமீற்றர் பி.சென்ரிமீற்றர்
(8 புள்ளி)

(14) பொருத்தமான வசனங்கள்
(12 புள்ளி)

## விடைக் குறிப்புகள்

வெளியீடு 01

## தமிழ்

விஞ்ஞானமும் சமூகமும்

- சமூகம் என்பது பற்றியும் சமூக அமைப்புக்கள் பற்றியும் எடுத்துக் காட்டல்.
- ஆரம்பகால கண்டுபிடிப்புக்கள்
- ஆரம்பகால கண்டுபிடிப்புக்கள் ஊடாக சாதன வளர்ச்சிப் போக்கு
- சாதன வளர்ச்சியினூடாக விண்வெளி ஆராய்வு
- இவ்வாறு விஞ்ஞான மயமாக்கப்பட்டதனால் சமூகத்திற்கு ஏற்படும் தாக்கங்களும் விளைவுகளும்

சூழல் பாதிப்படைதல்

- சூழலின் முக்கியத்துவம்
- சூழல் மாசடைவதற்கான காரணங்கள்
- தொற்று நோய்கள் ஏற்ப்படுவதற்கு மாசுபடுத்தப்படும் இடங்கள்
- சூழல் பாதிப்பால் மக்களுக்கு ஏற்படும் நோய்கள்
- நோய்களிலிருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் வழிவகைகள்
- சூழல் மாசடைவதனால் பாதிக்கப்பட்ட நகரங்கள்
- சூழல் மாசடையாது நாம் செய்ய வேண்டியவை

'' செய்யுந் தொழிலே தெய்வம்''

- செய்யும் தொழிலே தெய்வம் என்பதன் விளக்கம்
- எல்லாத் தொழிலையும் சமமாக எண்ணும் மனப்பாங்கு
- உழவுத் தொழின் மேன்மை
- செய்யும் தொழில் நாம் பேணவேண்டிய அம்சங்கள்
- இவ்வாறு காணப்படும் தொழில்ரீதியான ஏற்றத்தாழ்வுகள்
- பாரதியார் தொழிலப்பற்றிக் கூறியவை. இவர் போன்ற வேறு புலவர்கள் கூறியவை

3.(அ) 1. காடு
காசு
2.நடந்தனன்
நட + த்(ந்)+த்+அன்+அன்
பகுதி சந்தி இடைநிலை சாரியை விகுதி
3.எங்கள் ஊரில் ஒவ்வொரு கோயிலிலும் திருவிழா நடநத்து.
4.தன்மை - யான்
முன்னிலை- நீ
5பல் (ஆகிய) முத்து
6.கரியன்
பொன்னன்
நல்லவன்
7.பாடிய
8.வேற்றுமை உருபு
9.தாயால் உணவு உண்ணப்பட்டது
10.படித்த
11.கோதை நன்றாகப் படித்தாள்
கூடிய மதிப்பெண்கள் பெற்றாள்
12.ஆடியது
13.மாணவர் அனைவரும் வருகை புரிந்தனர்.
14.இம் முற்றெச்சமும், வினைமுற்று வடிவில் நிற்கும் ஒரு வினையேச்சமே முற்று வடிவில் நின்று இவ்வாறு எச்சப்பொருள் தந்து நிற்பது வாக்கியங்களில் வரும் பொழுது மட்டுமே
உதாரணம் : புலம்பினள் இருந்தாள் - புலம்பி இருந்தாள்
15. இடவாகு பெயர்

04. அ) சங்கமருவிய கால இலக்கியத்தின் பொருள் மரபு பெரும்பாலும் அறக் கருத்துக்களோடு தொடர்புடையதாகும்

- சிலப்பதிகாரம் மணிமேகலை என்கின்ற இரட்டைக்காப்பியததின் கதைகளினுடாகவும் அரசியல் பிழைத்தோருக்கு அறம் உற்றதாகவும் '' உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றல்''
ஊழ்வினை வந்து உறுத்துதல் போன்ற அறக் கருத்துக்களையே எடுத்துக் கூறுவதாகக் காணப்பட்டது. இவ்வாறு பெரும்பாலான நூல்கள் அறம் சார்ந்த கருத்துக்களை எடுத்துக் கூறுவதனால் இக்காலத்தின் பண்பாக அறம் கூறுவது அமைகின்றது.
- எந்த ஒரு காலப்பகுதி இலக்கியங்களும் அதற்கு முந்திய காலப்பகுதியின் தன்மையிலிருந்து முற்றுமுழுதாக வேறுபட்டுச் செல்வதில்லை. இந்த வகையில் சங்க காலத்தில் காணப்பட்ட அகப் பொருள் தழுவியதான இலக்கியங்களின் தன்மைகளை மருவி சங்கமருவிய காலத்திலும் எழுச்சி பெற்றது.
- சங்கமருவிய காலத்தின் பிற்பகுதியில் வாழ்ந்ததாகக் கருதப்படுகின்ற காரைக்கால் அம்மையாரும் ஆழ்வார்களும் உள்ளத்தை உருக்கிப் பாடுகின்ற பாடல்களை இறைவனுக்கு பாடினார் இவை பக்தி நெறி சார்ந்த வையாக காணப்பட்டது.
- சங்கமருவிய காலத்தில் காணப்படும் பாடல் வெண்பாயாப்பிலேயே அமைந்தது.
- பாக்களைக் கலந்து பாடுகின்ற தன்மை சங்கமருவிய காலத்திலேயே காணப்பட்டது.
- பக்தியையும் அறத்தையும் வெளிப்படுத்துவதற்கு வெண்பா, விருத்தப்பா போன்ற பாவகைகள் இக்காலத்தில் தோற்றம் பெற்றது.
- இறைவன் மீதுள்ள அன்பினை வெளிப்படையாக சொல்வதற்கு அந்தாதி என்கின்ற முறைமை இக்காலத்தில் காணப்பட்டது.

ஆ)

- சமண பௌத்த மதங்கள் நீங்கி சைவ வைஷ்ணவ மத தோற்றத்திற்கு காரணமாக இருந்தவர்
- சமண பௌத்தத்தை எதிர்த்து சை வைஷ்ணவத்தை மீண்டு எடுக்கும் பணிக்கு அரும்பாடு பட்டவர்
- அந்தாதி என்கின்ற யாப்பு முறையை முதல் முதலாய் தமிழுக்கு தந்தவர்
- பல்லவ கால சிவனடியார் பக்தி இவரிலிருந்தே ஊற்றெடுத்தது.
- புதிய பக்தி, மொழி, இரக்கத்தின் மொழி என தமிழ் மொழியை வளர்த்தவர்
- இவர் மொத்தம் 143 பாடல்கள் பாடி தமிழிலக்கிய வரலாற்றில் 1ம் திருப்பு முனை என்பதனை பெற்றார்
- கம்பருக்கே இல்லாத பெருமை இவருக்குக் கிடைத்தது
- விருத்தப்பாவை முதன் முதலில் தமிழுக்கு தந்த பெருமை உடையவர்
- கட்டளை கலித்தொகையை தமிழுக்கு அறிமுகமாக்கியமையால் திருச்சிற்றம்பலக் கோவை பாட உகந்தது
- தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவான யாப்பாக விளங்கும் விருத்தப் பாவினையும், வெண்பாவினையும், கையாண்டு 100 பாடல்களைப் பாடியது மட்டுமில்லாமல் மூவாழ்வார்களுடைய 300 பாடல்களும் பல்லவர் காலத்தில் சைவ வைஷ்ணவ பக்திக்கு பெருக்கெடுத்தது எனலாம்.

இ)

- சங்க காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்கள் பதினென்மேற்க்கணக்கு நூல்கள் ஆகும்
சங்கமருவிய கால இலக்கியங்கள் பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் ஆகும்.
- சங்ககால இலக்கியங்கள் தமிழ் மக்களுடைய வாழ்க்கையை சித்திரிக்கின்றது. சங்கமருவிய காலத்தில் வட இந்தியருடைய வாழ்க்கையின் செல்வாக்கையும் சமயக் கருத்தினையும் முக்கியத்துவப்படுத்திகொண்டிருப்பதை காணமுடிகின்றது.
- சங்க காலத்தில் காதலையும் வீரத்தையும் முக்கியத்துவப்படுத்தி பாடுபொருளாக புலவர்களால் கையாளப்பட்டது. ஆனால் சங்கமருவிய காலத்தில் அறம் முதன்மையாக கொள்ளப்பட்டது. சங்க காலத்தில் எழுந்த அகம், புறம் நூல்களில் காதலைப் பற்றி 8 நூல்களும் வீரதலைப் பற்றி/ போரைப்பற்றி 10 நூல்களும் எழுச்சி பெற்றது. சங்கமருவிய காலத்தில் அகம் பற்றி கூறும் நூல்கள் 6 ஆகும். ஒரு நூல் மட்டுமே புறத்தினை வெளிப்படுத்துகின்றது.
- சங்க காலத்தில் பக்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதாக எந்தவொரு இலக்கியங்களும் காணப்படவில்லை. ஆனால் சங்கமருவிய காலத்தின் பிற்பகுதியில் காரைக்கால் அம்மையாரும் முதல் மூன்று ஆழ்வார்களும் தோற்றம் பெற்றமையினால் அவர்களால் பக்தி இலக்கியங்கள் ஏராளமாக தோற்றம் பெற்றது.
- சங்க காலத்தில் அகத்தினை வெளிப்படுத்துவதற்கு சிறந்த பாவாக அகவல்பா. காணப்பட்டது. சங்கமருவிய காலத்தில் அறம் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டமையினால் அவற்றை வெளிப்படத்த சிறந்த பாவாக வெண்பா காணப்பட்டது.
- சங்ககாலத்தில் ஒரு துறையை வெளிப்படுத்த ஒரு செய்யுளையே பயன்படுத்தினார்கள். ஆனால் சங்கமருவிய காலத்தில் ஒரு துறையை பல செய்யுள்களிலே வெளிப்படுத்தும் செய்யுள் காணப்பட்டது.
- சங்க காலத்தில் பதிற்றுப் பத்து என்கின்ற நூலின் வடிவமே சங்கமருவிய காலத்தில் 10 பாடல் என்கின்ற வடிவத்தைத் தோற்றுவிக்கி அடிகோலாக அமைந்துள்ளது.

(இதன் மிகுதி 14.03.2006ஆம் திகதிய கல்விச்சுடரில்)